விலை ரூபா: 15.00

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: இருபது

சங்கு 12 வள்ளுவர் ஆண்டு 2042 ஆனி 24 சனிக்கிழமை (09.07.2011) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 202

ரா ம் கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

# போர்க்குற்ற விசாரணை அழுத்தம் எதிர்மாறான விளைவை ஏற்படுத்தும்

## அமெரிக்கா எச்சரிக்கை

(வாஷிங்டன்)

இலங்கையின் போர்க்குற்றங்கள் தொடர்பாக குற்றவியல் விசாரணை நடத்தப்பட வேண்டும் என ஐ.நாவும் சர்வதேச சமூகமும் நிர்ப்பந்திப்பது எதிர்மறையான விளைவை ஏற்படுத்தலாம் என அமெரிக்க நாடாளுமன்ற ஆய்வறிக்கையொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (20ஆம் பக்கம் பார்க்க)



பேராசிரியர் கார்த்திகேசு சிவத்தம்பியின் பூதவுடலுக்கு அவரின் இல்லத்தில் வைத்து பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ, கைத்தொழில் வணிகத்துறை அமைச்சர் றிசாத் பதியுதீன் ஆகியோர் நேற்று அஞ்சலி செலுத்துவதைப் படத்தில் காணலாம்.

## சபாநாயகர் சமல் இந்தியாவிற்கு விஜயம்

(கொழும்பு)

சபாநாயகர் சமல் ராஜபக்ஷ நேற்று இந்தியாவிற்கு விஜயம் செய்துள்ளதாக சிங்கள ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இந்தியாவின் புதுடில்லி நகரில் நடைபெறவுள்ள சார்க் நாடுகளின் சபாநாயகர்கள் மாநாட்டில் கலந்து கொள்வதற்காக சமல் ராஜபக்ஷ இந்தியாவிற்கு விஜயம் செய்துள்ளார். (02ஆம் பக்கம் பார்க்க)

## அனைத்துப் பல்கலைக்கழக ஆசிரியர்கள் யாழ்ப்பாணத்தில் நேற்று அமைதிப் பேரணி

### ஆயிரக்கணக்கானோர் பங்கேற்பு

(யாழ்ப்பாணம்)

பல்கலைக்கழக ஆசிரியர்கள் மேற்கொண்டுவரும் தொழிச்சங்க போராட்டம் குறித்து பொதுமக்களுக்குத் தெளிவுபடுத்தும் வகையில் நேற்று யாழ்ப்பாணத்தில் அனைத்து பல்கலைக்கழக ஆசிரியர்களின் அமைதிப் பேரணி இடம்பெற்றது. இந்தப் பேரணி பிற்பகல் 2.30 மணியளவில் யாழ்ப்பாணம் புகையிரத நிலையத்திற்கு முன்பாக ஆரம்பமாகி பிற்பகல் 3.30 மணியளவில் வீரசிங்கம் மண்டபத்தை சென்றடைந்தது.

அங்கு அனைத்து பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட கருத்தரங்கும் இடம்பெற்றது. இந்தக் கருத்தரங்கில் தென்னிலங்கை (02ஆம் பக்கம் பார்க்க)

## சனல் 4க்கு வீடியோ வழங்கிய தமிழர் கண்டியில் வைத்து கைது

### பிரிட்டனில் இருந்து திரும்பிய போது சம்பவம்

(கொழும்பு)

இலங்கையில் போர்க்குற்றம் இடம்பெற்றதாக ஆவணப்படம் ஒன்றை வெளியிட்ட சனல்-4 தொலைக்காட்சிக்கு வீடியோ பிரதிகளை வழங்கினார் என்ற குற்றச்சாட்டின் பேரில் பிரிட்டனில் இருந்து இலங்கை வந்த தமிழர் ஒருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

நந்தவனம் ஜெகதீஸன் என்பவரே இவ்வாறு கண்டியில் வைத்து கைது செய்யப்பட்டதாக கொழும்பு குற்றப்புலனாய்வு பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

இலங்கை இராணுவத்தினருக்கு அபகீர்த்தி ஏற்படுத்தும் (20ஆம் பக்கம் பாக்க)

## இலங்கைக்கு எதிரான பிரேரணை அவுஸ்.செனட்டில் நிறைவேற்றம்

(சிட்னி)

இலங்கைக்கு எதிரான பிரேரணை ஒன்று அவுஸ்திரேலிய செனட் சபையில் நிறைவேற்றப்பட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

போர்க்குற்றங்களுக்கு இலங்கை அரசு பொறுப்புக் கூற வேண்டும் என்றும் ஐ.நா. விசாரணைக்குழுவை நியமித்து போர்க்குற்றங்கள் பற்றிய உண்மை நிலை தெளிவுபடுத்தப்பட வேண்டும் என்றும் இந்தப் பிரேரணை மூலம் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

அவுஸ்திரேலிய செனட் சபை உறுப்பினர் பொப் பிறவுண் இலங்கைக்கு எதிரான இந்தப் பிரேரணையை நேற்று முன்தினம் கொண்டுவந்திருந்தார். இந்தப் பிரேரணைக்கு அனைத்துக் கட்சிகளும் ஆதரவு தெரிவித்த நிலையில் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளது.

வெளிநாட்டு விவகாரங்கள் தொட்பாக அவுஸ்திரேலிய செனட் சபையில் பிரேரணை கொண்டு வரப்படும் நடைமுறை இல்லாத போதும் வழக்கத்துக்கு மாறாக இந்தப் பிரேரணை நிறைவேற்றப்பட்டுள்ளதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அதேவேளை இந்த விவகாரம் தொடர்பாக அவுஸ்திரேலிய அரசாங்கம் கவனம் செலுத்த வேண்டும் என்று கோரி வெளிவிவகார அமைச்சர் (20ஆம் பக்கம் பாக்க)

# தமிழ்மக்களின் பிரச்சினைக்கு சிங்கள மக்கள் பொறுப்பல்ல!



### புலிகளை குற்றஞ்சாட்டுகிறார் அமைச்சர் டி சில்வா

(கொழும்பு)

யுத்தத்தினால் தமிழ் மக்களுக்கு ஏற்பட்ட இன்னல்களுக்கு சிங்கள மக்கள் பொறுப்பாளிகள் அல்ல. தேசியப் பிரச்சினைக்கான அரசியல்தீர்வானது வடக்குக்கிழக்கு மக்களைப் போன்ற தென்பகுதி மக்களும் ஏற்கக் கூடியதாக இருக்க வேண்டும். இதனால் நாட்டில் கலவரங்கள் ஏற்படுவதற்கு நாம் இடமளிக்கக் கூடாது.



இறுதித்தீர்வை நாட்டில் அமுல்படுத்தக் கூடியதாக இருப்பது அவசியம் அதனால் தான் அரசியல் பிரச்சினை குறித்து சகலதரப்பிரனரதும் கருத்தை பெறும் விதமான நாடாளுமன்ற தெரிவுக்குழுவை அமைக்க நாம் முயன்று வருகிறோம்.

இவ்வாறு வடக்கு, கிழக்கு நிலவரம் குறித்து நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற சபை ஒத்திவைப்பு (20ஆம் பக்கம் பாக்க)

உலகத்தரம் வாய்ந்த டையில்களை நாட வேண்டிய ஒரே இடம்

நவீன் செரமிக்

Naveen Ceramic
212, Palaly Road, Jaffna.
Tel : 212220033 / 212220044

அகில இலங்கை பல்கலைக்கழக ஆசிரியர்கள், விரிவுரையாளர்கள் மற்றும் பேராசிரியர்கள் மேற்கொண்டுவரும் வேலை நிறுத்தப் போராட்டம் சம்பந்தமாக யாழ் மாவட்ட மக்களுக்கும் விளக்கும் வகையிலான ஊர்வலமும் கருத்தரங்கும் யாழ்ப்பாணத்தில் நேற்று இடம் பெற்றது. இவ் ஊர்வலம் மற்றும் கருத்தரங்குகளில் கலந்து கொண்டவர்களை படங்களில் காணலாம்.

## மணி விழா

(வவுனியா)

வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரியின் ஆரம்ப காலத்திலிருந்து தனது அயாரது பணியினை ஆற்றிவந்து வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரியின் உபபீடாதிபதியாக ஓய்வு பெற்றுச்செல்லும் த.ம.தேவேந்திரனின் மணி விழா எதிர்வரும் 14 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 10 மணிக்கு வவுனியா தேசிய கல்வியற் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

வவுனியா தேசிய கல்வியற் கல்லூரியின் உப பீடாதிபதியாக மட்டுமன்றி உடற்கல்வித்துறைக்கு முழுமையான பங்காற்றியுள்ள மணிவிழா நாயகன் தேசியக்கல்வி நிறுவகத்தின் கல்விமாணிட்கற்கை நெறியின் வவுனியா மத்திய நிலை இணைப்பாளருமாக சேவையாற்றி வந்துள்ளார்.

இவ்விழாவில் தேவா பன்முக ஆளுமை பல்துறை திறன்கள் என்ற மலரும் வெளியிடப்படவுள்ளது.

எனவே இவ் விழாவில் வவுனியா தேசியக் கல்வியியற் கல்லூரியின் பழைய மாணவர்களையும் நலன் விரும்பிகளையும் கலந்து சிறப்பிக்குமாறு பீடாதிபதி க.பேர்ணாட் கேட்டுள்ளார். (4-2)

## சபாநா...

இன்று முதல் எதிர்வரும் 12ஆம் திகதி வரையில் இந்த அமர்வுகள் நடைபெறவுள்ளதாக குறிப்பிடப்படுகிறது.

இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் தலைமையில் இந் தமாநாடு நடைபெறும் என தெரிவிக்கப்படுகிறது.

மக்களுக்கும் நாடாளுமன்றத்துக்குமிடையில் நம்பிக்கையை ஏற்படுத்தல் எனும் தொனிப்பொருளில் இம்முறை மாநாடு நடைபெறவுள்ளது.

சபாநாயகருடன் இன்னும் சிலர் மாநாட்டில் கலந்து கொள்வதற்காக இந்தியாவிற்கு விஜயம் செய்துள்ளனர். (ஏ)


## வீடு விற்பனை

இல.56, அச்சக ஒழுங்கை கொக்குவில் கிழக்கு கொக்குவிலில் மேல்மாடி, கீழ்மாடிவீடு 2 Toilet, 1 Bathroom சுற்றுமதில், கிணறு போன்ற சகல வசதிகளுடன் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு : 0774346417 (5309)

## வீடு வாடகைக்கு

திருநெல்வேலி கிழக்கில் இல. 56, இராமலிங்கம் வீதியில், வீடு வாடகைக்கு உண்டு.

தொடர்பு:- 0777242073 (இ)


## யாழ் தேசிய கல்வியியற் கல்லூரியில் பேரா.சிவத்தம்பிக்கு அஞ்சலிக்கூட்டம்

இலக்கிய நாடக விமர்சகரான வாழ்நாள் பேராசிரியர் கா.சிவத்தம்பி அவர்களின் அஞசலிக் கூட்டம் யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் பிரதான மண்டபத்தில் நேற்று வெள்ளிக்கிழமை காலை 8.30 மணிக்கு பீடாதிபதி எஸ்.கே.யோகநாதன் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பீடாதிபதி உரையாற்றுகையில், யாழ்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியில் 2004 ம் ஆண்டு நாடகமும் அரங்கியலும் கற்கை நெறியை கொண்டுவந்த பெருமை இவரையே சாரும். 2010ம் ஆண்டு இக்கற்கை நெறி எமது கல்லூரியிலிருந்து இடைநிறுத்தப்பட்ட போது இவர் கல்வி அமைச்சுடன் தொடர்பு கொண்டு தமிழ் பிரதேசத்தில் இப்பாட நெறிக்குரிய முக்கியத்துவத்தை எடுத்துக் கூறி தொடர்ந்தும் இக்கற்கை நெறி நடைபெறுவதற்கு ஆவன செய்த பெருமையும் இவரையே சாரும். அவ்வாறான உலகப்புகழ் பெற்ற பேராசிரியருடைய இழப்பு தமிழ்சமூகத்திற்கு ஈடுசெய்ய முடியாத இழப்பாகும். ஆசிரிய சமூகத்தினர் இப்பேராசிரியருடைய வழியிலும் அவரின் கல்விச் சிந்தனைகளையும் தம்வாழ்நாளில் கடைப்பிடித்து ஒழுகுவதே நாம் அவருக்கு செய்யும் உயர்ந்த பணியாகும். என தெரிவித்தார்.

இந்நிகழ்வில் விரிவுரையாளர்களான ஆ.ரவீந்திரன், க.தர்மராஜா, கே.ஆர்.கமலநாதன், பி.பாலகணேசன், திருமதி.பி.மரிய தாசன் ஆகியோர் அஞ்சலி உரையாற்றினர்.(ஏ)

## பருத்தித்துறை - தேவேந்திரமுனை வரை பஸ் சேவை களுத்துறையிலிருந்து ஆரம்பம்

இலங்கை போக்குவரத்து சபையின் பருத்தித்துறை சாலையால் வடக்கு-தெற்கு இணைப்புப்பாலமாக பருத்தித்துறையிலிருந்து தேவேந்திர முனைக்கான பேருந்து சேவை ஆரம்பிக்கப்படவுள்ளது

இதன் ஆரம்ப நிகழ்வு இன்று களுத்துறை பேருந்து நிலையத்தில் இடம்பெறவுள்ளது.

சபையின் தலைவர் எம்.டி.பந்து சேனவின் அழைப்பின் பேரில் இலங்கை போக்குவரத்து அமைச்சர் குமார வெல்கம இதில் பங்குபற்றவுள்ளார்.

இந்த பஸ் சேவை தொடர்பில் பருத்தித்துறை டிப்போ அத்தியட்சகர் தெரிவிக்கையில், இன்று சனிக்கிழமை ஆரம்பிக்கப்படவுள்ள இந்த பஸ் சேவை இங்கிருந்து காலை 6.30 மணிக்கு புறப்பட்டு தேவேந்திர முனையை இரவு 9.30 மணிக்கு சென்றடையும். இதேவேளை தேவேந்திர முனையிலிருந்து காலை 4.30 மணிக்கு குறிப்பிட்ட பஸ் சேவை பருத்தித்துறை நோக்கி புறப்படும்.

இந்த பஸ் சேவை கொழும்பு காலி ஊடாக இடம்பெறும் என்று மேலும் தெரிவிக்கப்பட்டது. (ச-8)

## அனைத்துப் பல்...

பல்கலைக்கழகத்திலிருந்து வந்த பேராசிரியர்கள் பலரும் கருத்துரை வழங்கினர்.

நாட்டின் சகல பாகங்களில் இருந்தும் இந்தப் பேரணியில் கலந்து கொள்வதற்காக ஆயிரத்திற்கும் மேற்பட்ட ஆசிரியர்கள் வருகை தந்திருந்தனர்.

நாட்டில் நீண்டகாலமாக இடம்பெற்ற யுத்தம் இவ்வாறு அனைவரும் ஒன்றிணையும் சந்தர்ப்பத்தை ஏற்படுத்த தடையாக இருந்தது எனவும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றியவர்கள் தெரிவித்தனர்.

யாழ்ப்பாணம் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத்தலைவர் கலாநிதி க.விக்னேஸ்வரன் தலைமையில் இடம்பெற்ற இந்தக்கருத்தரங்கில் பேராதனைப் பல்கலைக்கழக பேராசிரியர் குமர ஸ்ரீலியனகே, திறந்த பல்கலைக்கழக விரிவுரையாளர் கலாநிதி மலிந்த மெண்டிஸ், கொழும்பு பல்கலைக்கழக விரிவுரையாளர் கலாநிதி நிர்மல் ரஞ்சித், கொழும்பு பல்கலைக்கழக விரிவுரையாளர் பிரபாத் ஜெயசிங்க, கொழும்பு ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழக விரிவுரையாளர் வணதம்மத்தேரர், றுகுணு பல்கலைக்கழக விரிவுரையாளர் கலாநிதி அனுரகுமார றுகுணு பல்கலைக்கழக விரிவுரையாளர் கலாநிதி அறிவழகன், யாழ்ப்பாணம் பல்கலைக்கழக விரிவுரையாளர் பேராசிரியர் சிவநாதன், வவுனியா வளாக விரிவுரையாளர் கலா நிதி ஜெயசீலன், கிழக்குப் பல்கலைக்கழக விரிவுரையாளர் கலாநிதி ரவி, பேராதனைப் பல்கலைக்கழக விரிவுரையாளர் கலாநிதி பௌத்திர கைலாசபதி, மற்றும் தொழிற்சங்க பிரமுகர் சிவபாலன் உட்பட மற்றும் பலர் கலந்து கொண்டனர். (ச-8)


## நூல் வெளியீட்டு அரங்கு

"தமிழ் இலக்கணத் தொகுப்பு"




A.K கீர்த்திராஜன் B.A (Hons)

இடம் - நாவலர் கலாசார மண்டபம்

காலம் - 10.07.2011 ஞாயிறு

காலை 9.30 மணி

விழா ஏற்பாட்டுக்குழு :- Navalar Education Center (N.E.C)


## வெடிபொருள் வெடித்து 3 இந்திய மீனவர்கள் பலி!

இராமேஸ்வரம் கடற்பகுதியில் நாட்டு வெடிகுண்டுகளை வீசி மீன் பிடித்தொழிலில் மீனவர்கள் ஈடுபட்டுக் கொண்டிருந்தபோது படகில் இருந்த வெடிபொருள் தவறுதலாக வெடித்ததில் 3 இந்திய மீனவர்கள் சம்பவ இடத்திலேயே கொல்லப்பட்டார்கள்.

ராமநாதபுரம் மாவட்டம், தொண்டி பகுதி கடலில் வெடி வைத்து மீன் பிடிக்க மீனவர்கள் முயன்றபோது படகிலிருந்த வெடிபொருட்கள் திடீரென வெடித்ததால், அதில் பயணம் செய்த 3 பேர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளனர்.

ராமநாதபுரம் மாவட்டம், திருவாடானை தாலுகா, தொண்டி அருகே புதுக்குடி பகுதியைச் சேர்ந்த மீனவர்கள் 6 பேர் ஒரு படகில் தொண்டி பகுதி கடலில் வெடி வைத்து மீன் பிடிக்க, படகில் வெடிமருந்துப் பொருள்களுடன் சென்றுள்ளனர்.

அவர்கள் கடலில் மீன் பிடித்துக் கொண்டிருந்தபோது, திடீரென படகிலிருந்த வெடி பொருட்கள் வெடித்ததால், படகில் பயணம் செய்த 6 பேரில் 3 பேர் படகிலேயே உடல் சிதறி பரிதாபமான முறையில் உயிரிழந்தனர். (ஏ)

## உலகத் தமிழ் எழுத்தாளர் மாநாடு சிங்கப்பூரில் !

உலகத் தமிழ் எழுத்தாளர் மாநாடு சிங்கப்பூரில் ஒக்ரோபர் மாதம் 28ம் திகதி முதல் 30ம் திகதி வரை மூன்று நாள்கள் நடைபெற உள்ளது.

இது தொடர்பாக சிங்கப்பூர் தமிழ் எழுத்தாளர் கழகத்தின் தலைவர் நா.ஆண்டியப்பன் கூறியதாவது, சிங்கப்பூர் எழுத்தாளர் விழா ஒக்ரோபர் 22ம் திகதி முதல் 30ம் திகதி வரை நடைபெறுகிறது. அதன் ஒரு பகுதியாக 28ம் திகதி முதல் 30ம் திகதி வரை உலகத் தமிழ் எழுத்தாளர் மாநாடு சிங்கப்பூரில் நடைபெற உள்ளது.

தாயகம் கடந்த தமிழ் இலக்கியம் புதிய போக்குகள், புதிய பாதைகள் என்பதே இந்த மாநாட்டின் முக்கிய கருப்பொருள். அமெரிக்கா, அவுஸ்திரேலியா, கனடா, பிரான்ஸ், ஜேர்மனி, இலங்கை, பிரிட்டன், மலேசியா, இந்தியா, சிங்கப்பூர் உள்ளிட்ட 10 நாடுகளைச் சேர்ந்த 20 தமிழறிஞர்கள் மாநாட்டில் பங்கேற்கின்றனர்.

மாநாட்டில் மொத்தம் 7 அமர்வுகள். கவிஞர் ஆர்.சேரன், பேராசிரியர்கள் ரெ.கார்த்திகேசு, எம்.ஏ.நுஃமான், தமிழவன் உள்பட பலர் ஆய்வுக் கட்டுரைகள் சமர்ப்பிக்கின்றனர்.

ஆய்வுக் கட்டுரைகள் மலராகவும் பின்னர் வெளியிடப்பட உள்ளது. மாநாட்டில் பங்கேற்க வெளிநாட்டினருக்குப் பதிவுக் கட்டணம் 15 ஆயிரம் ரூபாய். இதில் சிங்கப்பூரில் தங்கும் வசதி, உணவு, எழுதுபொருள், மாநாட்டு மலர் என அனைத்தும் அடங்கும் என்றார். (ஏ)


வட்டுக்கோட்டை தெக்கணப்பாய்
அருள்மிகு கன்னகாம்பிகா சமேத
கன்னலிங்கேஸ்வர ஆலய அதிர்ஷ்டலாப

## சீட்டிழுப்பு முடிவுகள் -08.07.2011

1ம் பரிசு ,இல-1241

2ம் பரிசு இல -1903 3ம் பரிசு இல-0477

ஆறுதல் பரிசுகள் 0899, 1800 0054, 0059, 0141, 1371, 1251

மேற்படி பரிசில்களைப் பெறுவோர் தங்களது அதிர்ஷ்ட இலாப சீட்டுக்களை மூளாய் வீதி வட்டுக்கோட்டை ஸ்ரீமுருகன் களஞ்சியத்தில் ஒப்படைத்து யூலை 31 ம் திகதிக்கு முன் பரிசில்களை பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

*மேற்படி*
*ஆலய பரிபாலன சபையினரும்,தொண்டர் சபையினரும்*

Dreams come true
Job Shop கனவுகள் மெய்ப்படும்

சிறந்த வேலையில்லையா?
தகுதியற்ற வேலையில் தவிக்கிறீர்களா?
குறைந்த ஊதியம் என்ற குறையா?
ஒரே தீர்வு Job Shop உடன் இணையுங்கள்.
நவீன முறையில் நேர்த்தியாக வடிவமைக்கப்பட்ட Resumes மூலம் இலங்கையில் சிறந்த நிறுவனங்களில் தகுதிவாய்ந்த வேலை.
அழையுங்கள் : 0779829371 (5314)

# இன்று ஒரு தகவல்

## சகாதேவன் வழங்கிய நீதி

ஆன்மீகச் சொற்பொழிவாளர் ஒருவர் "ஒரு ஞானி எப்படியிருப்பார்?" என்ற கேள்விக்கு விளக்கம் கொடுத்தார்.

"ஞானி எப்படி இருப்பார் என்று கேட்டால் மகாபாரதத்தில் வரும் சகாதேவன் போன்று இருப்பார்" என்பது அவருடைய பதில்.

ஒரு ஞானி நீதியை மட்டும்தான் பார்ப்பார்... அது தன்னுடைய சொந்தக்காரர்களையோ தனக்கு வேண்டியவர்களையோ எப்படி பாதிக்கிறது என்பதைப் பற்றி அவர் கவலைப்படமாட்டார்.

அவருக்கு நீதி மட்டும்தான் முக்கியம்.

சகாதேவன் அதற்குச் சரியான ஓர் உதாரணம்தான்.

கிருஷ்ணன் தூது போவதற்கு முன்னால் பஞ்சபாண்டவர்களைக் கூப்பிடுகிறார். அவர்களின் கருத்தைக் கேட்கிறார்.

தர்மர், "யுத்தமே வேண்டாம்!" என்கிறார்.

பீமன், அர்ஜுனன், நகுலன் ஆகியவர்கள் மூன்று பேரும், "யுத்தம் வேண்டும்!" என்கிறார்கள்.

அதன்பின்னர் கிருஷ்ணன் சகாதேவனிடம் சென்று, நீ என்ன சொல்கிறாய்?" என்று கேட்கிறார்.

சகாதேவன் என்ன சாதாரண ஆளா?

அவன், "கிருஷ்ணா, உன்னுடைய கருத்து எதுவோ அதுதான் என்னுடைய கருத்தும்!" என்று கூறிவிட்டான். சகாதேவனுக்கு, 'கண்ணன் விருப்பப்படி தான் எல்லாம் நடக்கப்போகிறது!' என்பது தெரியும்.

தான் போருக்கு ஏற்பாடு செய்வது சகாதேவனுக்குப் புரிந்துவிட்டதுஎன்பதைக்கண்ணன்உணர்ந்துகொண்டார்.

கண்ணன், "உன் கூந்தலை நானே முடிக்கின்றேன்!" என்று திரௌபதிக்கு வாக்குக் கொடுத்த பின்னர் போருக்கு அவர் ஏற்பாடு செய்யாமல் இருக்கமுடியுமா?

என்றாலும் சகாதேவனிடம் கண்ணன், "பாரதப்போர் நடைபெறக்கூடாது என்றால் அதற்கு என்னவழி!" என்று வினவினார்.

இதற்குச் சகாதேவன் என்ன பதில் சொன்னான் தெரியுமா?

" பாரதப் போர் நடைபெறக்கூடாது என்றால்... கர்ணனுக்கு முடிசூட்டவேண்டும். அதற்கும் முன்னால் அர்ஜுனனைக் கொல்லவேண்டும். பின்னர் திரௌபதியின் கூந்தலைக் களையவேண்டும்" என்றான் சகாதேவன்.

கர்ணன், பஞ்சபாண்டவர்களுக்கு வேண்டாத எத்தனையோ காரியங்களைச் செய்தவன், அப்படியிருந்தும், "கர்ணனுக்கு முடிசூட்ட வேண்டும்" என்று சகாதேவன் ஏன் சொன்னான்?

கர்ணனுக்கு முடிசூட்டினால் துரியோதனன், "வேண்டாம்!" என்று சொல்லமாட்டான். அதற்கு தர்மரும் சம்மதிப்பார்.

ஏனென்றால் தர்மரைப் பொறுத்தவரையில் எப்படியோ போர் வராமல் இருந்தால் சரி, பின்னர் கர்ணன் தன் தமையன் என்பது தெரிந்ததும் அவர் இன்னும் மகிழ்ச்சியடைவார்.

அதுசரி... அர்ஜுனனை ஏன் கொல்ல வேண்டும்?

அர்ஜுனன் கர்ணனின் பரமவிரோதி. அவன் கர்ணனுக்கு முடி சூட்டுவதற்குச் சம்மதிக்கமாட்டான். அதனால் அர்ஜுனனை முதலில் கொல்லவேண்டும்.

சரி... திரௌபதியின் கூந்தலை ஏன் நீக்கவேண்டும்?

அவள், "என்கூந்தலைமுடியமாட்டேன்!" என்றுசொல்லிக் கொண்டேயிருந்தாள் அல்லவா? அதற்காக அவள் கூந்தலைப் போக்க வேண்டும்.

இதுதான் சகாதேவன் சொன்ன பதிலுக்கு விளக்கம்.

இப்போது யோசித்துப் பாருங்கள்...

சகாதேவன் நீதியைத் தான் பார்த்தான்... தன் பதிலால் சொந்த பந்தமெல்லாம் எந்த அளவிற்குப் பாதிக்கப்படும் என்பதைப்பற்றி அவன் கவலைப்படவில்லை! ஞானிகள் இப்படித்தான் இருப்பார்கள் என்று அந்த ஆன்மீகச் சொற்பொழிவாளர் குறிப்பிட்டார்.

அவர் சொல்வது சரிதான்... அதற்காகச் சொந்த பந்தங்களைப் பற்றிக் கவலைப்படாதவர்கள் எல்லாம் ஞானிகள் என்று நாம் நினைத்துவிட முடியாது.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# வாக்களிப்பு நிலையங்களில் தேர்தல் திணைக்கள கண்காணிப்பாளர்கள்

(கொழும்பு)

தேர்தல் திணைக்கள கண்காணிப்பாளர்கள் ,அதிக அஞ்சல் வாக்காளர்கள் மற்றும் பிரச்சினைகள் ஏற்படக்கூடிய வாக்களிப்பு நிலையங்களுக்கு தேர்தல் திணைக்கள அதிகாரி ஒருவர் கண் காணிப்பு நடவடிக்கையில் ஈடுபடுத்தப்படவுள்ளனர்.

65 உள்ளூராட்சி மன்றங்களுக்கான அஞ்சல் வாக்களிப்புகள் எதிர்வரும் 12ஆம் திகதி நடைபெறவுள்ளன.

ஏற்கனவே இடம்பெற்ற வாக்குப் பதிவுகளின் போது சில அதிகாரிகள் முறையாக தமது கடமையை செய்யவில்லை என முறைப்பாடு தெரி விக்கப்பட்டுள்ளது.

இதனை தொடர்ந்தே இந்த நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது.

இதற்கிடையில் கடந்த தேர்தல்களில் முறையாக தேர்தல் கடமையில் ஈடுபடாத மூன்று அதிகாரிகள், திணைக்கள பணிகளில் இருந்து நீக்கப்பட்டுள்ளனர்.

காலை 8.30 ஆரம்பிக்கப்பட வேண்டிய வாக்களிப்பு நடவடிக்கைகள் அதற்கு முன்னர் ஆரம்பித்ததாக அவர்கள் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

65 உள்ளூராட்சி மன்றங்களுக்கான வாக்குப் பதிவுகள் தொடர்பிலான முறைப்பாடுகளை சேகரிக்கும் நிலையம் ஒன்று ராஜகிரியவில் நிறுவப்படவுள்ளது.

எதிர்வரும் 20 ஆம் திகதி முதல் இந்த நிலையம் செயற்படவுள்ளது.

இதில் தமது முறைப்பாடுகளை தெரிவிப்பதற்காக 011-2877611, 0112868444 ஆகிய தொலைபேசி இலக்கங்களின் ஊடாக தொடர்பு கொள்ளுமாறு பொது மக்கள் கோரப்பட்டுள்ளனர். (4-2)

# இராசி பலன்

*09.07.2011*
*(ஆனி 24, சனிக்கிழமை)*
*சூரிய உதயம் காலை 6.00மணிக்கு*
*நவமி முன்னிரவு 9.43 மணிவரை*
*சித்திரை பிற்பகல் 2.40 மணிவரை*
*இராகுகாலம் 8.58-10.28 மணிவரை*
*சுபநேரம் 2.58-4.28 மணிவரை*

**மேடம்** விருந்தினர் வருகையுண்டு, தொழிலில் கூட்டாளிகளின் ஒத்துழைப்பு கிடைக்கும், செல்வாக்கான நாள்,கு டும்பத்தில் அந்நியோன்னியம் அதிகரிக்கும்.

**இடபம்** பிரபலமானவர்களின் சந்திப்பால் பெருமை சேரவேண்டிய நாள், உடல் நலம் சீராகும், கடன் சுமை குறையும், ஆடம்பர பொருட் சேர்க்கையுண்டு.

**மிதுனம்** பிள்ளைகளின் வருங்கால நலன் கருதி புதிய திட்டங்களை வகுப்பீர்கள்,சான்றோர்களின் சந்திப்பு இடம் பெறலாம், குடும்பத்தில் குதூகலம் கிட்டும்,வாகன யோகமுண்டு.

**கடகம்** தொலைதூரத்தில் இருந்து சுப செய்திகள் வந்து சேரலாம், பெற்றோர் மீது பிரியம் கூடும், தொழில் முன் னற்றம் அதிகரிக்கும், சுபகாரிய செலவுகள் ஏற்படலாம்

**சிங்கம்** அரசியல் செல்வாக்கு மேலோங்கும்,நண்பர்களால் உதவிகள் கிடைக்கலாம்,சொத்துக்கள் சம்பந்தப்பட்ட வகையில் ஆதாயம் கிடைக்கலாம்,பிரயாண நன்மையுண்டு.

**கன்னி** பணத்தேவைகள் பூர்த்தியாகும் நாள்,உடல்நலம் சீராகி உற்சாகத்துடன் பணிபுரிவீர்கள்,எடுத்த காரியத்தை எளிதில் செய்து முடிப்பீர்கள்,வாக்கு மேன்மையுண்டு.

**துலாம்** தேவையற்ற சிந்தனைகளை வளர்ப்பீர்கள்,குடும்பத்தில் பெரியவர்களின் சொற்களை கேட்டு நடப்பீர்கள்,திடீர் பயணங்களால் சிறு ஆதாயம் கிடைக்கலாம்.

**விருச்சிகம்** பெரிய மனிதர்களின் சந்திப்பு இடம் பெறலாம்,பயணங்களால் பலனுண்டு,சயன சுகக்குறைவுண்டு, சுபசெலவுகள் செய்து மகிழ்வீர்கள்.

**தனுசு** பொது வாழ்வில் புகழ் கூடும், விலையுயர்ந்த பொருட்கள் வீடு வந்து சேரும்,தொழிலில் எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கலாம்,கௌரமான நாள்.

**மகரம்** தொழில் வளர்ச்சி கருதி புதிய திட்டங்கள் தீட்டுவீர்கள்,பெரிய மனிதர்களின் சந்திப்பால் பெருமையடைவீர்கள்,தூர தேசச் செய்திகளால் மகிழ்ச்சியடைவீர்கள்.

**கும்பம்** தேக ஆரோக்கியத்தில் தெளிவு பிறக்கும், திடீர் பயணங்களால் நன்மையுண்டு,தொழில் அதிகாரிகளின் பாராட்டுகளைப் பெறுவீர்கள்.

**மீனம்** கவலைகள் தீர கஜமுகனை வழிபட வேண்டிய நாள்,உறவினர் வழியில் சுப செலவுகள் ஏற்படலாம், உடல்நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள்.

வளவன்

# விசேட முன்னோடிப் பரீட்சை

(மல்லாவி)

துணுக்காய் கல்வி வலயத்திற்குட்பட்ட தரம் 5 மாணவர்களுக்கான விசேட முன்னோடிப் பரீட்சை இன்று சனிக்கிழமையும் எதிர்வரும் 23ஆம் திகதி சனிக்கிழமையும் ஓகஸ்ட் மாதம் 5ஆம் திகதியும் நடைபெறவுள்ளது. இதற்கமைய

**பரீட்சை நிலையம்-I மு/ஒட்டுசுட்டான் மகா வித்தியாலயம்**

மு/பெரியகுளம் அ.த.க பாடசாலை, மு/ ஒட்டுசுட்டான் இ.த.க பாடசாலை, மு/கருவேலன்கண்டல் அ.த.க. பாடசாலை, மு/ காதவியார் சம்மளங்குளம் அ.த.க பாடசாலை, மு/ கூழாமுறிப்பு அ.த.க பாடசாலை, மு/ தண்டுவான் அ.த.க பாடசாலை, மு/ பெரிய இத்திமடு அ.த.க பாடசாலை, மு/ ஒதியமலை த.வி, மு/ மாமடு பழம்பாசி அ.த.க பாடசாலை,

**பரீட்சை நிலையம்-II மு/ கற்சிலைமடு அ.த.க பாடசாலை**

மு/ முத்தையன் கட்டு இடது கரை அ.த.க பாடசாலை,மு/ கற்சிலை மடு அ.தக. பாடசாலை, மு/பேராறு த.வி.

**பரீட்சை நிலையம்-III மாங்குளம் ம.வி.**

மு/ பனிக்கன் குளம் அ.த.க பாடசாலை, மு/ திருமுறுகண்டி இ.வி, மாங்குளம் ம.வி, மு/ ஒலுமடு த.வி, மு/ கரிப்பட்ட முறிப்பு அ.த.க.பாடசாலை,மு/அம்பகாமம் அ.த.க.பா, மு/ புலுமச்சி நாதகுளம் அ.த.க பாடசாலை, மு/ வன்னி விளாங்குளம் அ.த.க பாடசாலை, மு/பாலைப்பாணி த.வி,

**பரீட்சை நிலையம்-IV மு/ யோகபுரம் ம.வி,**

மு/ அணிஞ்சியன் குளம் த.க.வி, மு/ யோகபுரம் ம.வி, மு/ வவுனிக்குளம் படிவம் 4 அ.த.க பாடசாலை,

எனவே உரிய பரீட்சை நிலையங்களில் மாணவர்கள் பரீட்சை எழுதுவதற்கு ஒழுங்குபடுத்துமாறு துணுக்காய் வலய கல்விப் பணிப்பாளர் த.மேகநாதன் அறிவித்துள்ளார். (2-15)

# குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி ரூபா | திருநெல்வேலி ரூபா |
|---|---|---|
| கத்தரிக்காய் | 40 | 50 |
| உருளைக்கிழங்கு | 70 | 80 |
| பச்சைமிளகாய் | 70 | 70 |
| தக்காளி | 40 | 50 |
| மரவள்ளிக் கிழங்கு | 50 | 50 |
| கோவா | 70 | 60 |
| கரட் | 60 | 80 |
| பூசணி | 25 | 30 |
| புடோல் | 35 | 30 |
| வாழைக்காய் | 30 | 40 |
| சின்ன வெங்காயம் | 140 | 100 |
| பெரிய வெங்காயம் | 60 | 50 |
| பாகற்காய் | 100 | 80 |
| வெண்டிக்காய் | 50 | 70 |
| கருணைக் கிழங்கு | -- | 100 |
| பயற்றங்காய் | 180 | 140 |
| லீக்ஸ் | 60 | 50 |
| பீற்றூட் | 70 | 80 |
| கறிமிளகாய் | 80 | 60 |
| முருங்கைக்காய் | 150 | 220 |
| போஞ்சி | 100 | 140 |
| கத்தரிதம்புள்ள | 20 | 20 |
| கீரை - 1 பிடி | 10 | 20 |
| தேசிக்காய் | 100 | 80 |
| தேங்காய் (ஒன்று) | 25-50 | 40 |

# ஒரு நாட்டின் அபிவிருத்திக்கு கல்விச் சமூகத்தின் பங்கு அவசியம்

## பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

ஒரு நாட்டின் அபிவிருத்தியானது கல்விச் சமூகத்தின் அளப்பரிய பங்களிப்புடனேயே இடம்பெறுகின்றது.இதனை இந்தியா, சீனா போன்ற நாடுகள் நன்கு உணர்ந்துள்ளது. ஆனால், இலங்கையில் அவ்வாறில்லை. கல்வியியலாளர்கள் நாட்டை விட்டு வெளியேறுவதைக் கூட தடுக்க இலங்கை அரசாங்கம் முற்படவில்லை என அனைத்துப் பல்கலைக்கழக ஆசிரியர் சங்க சம்மேளனம் தெரிவித்துள்ளது.

யாழ்.பல்கலைக்கழகத்தின் ஆசிரியர் சங்கம், விஞ்ஞானசங்கம் ஆகியவற்றின் ஏற்பாட்டில் நேற்று யாழ்.கிறின்கிராஸ் ஹோட்டலில் இடம்பெற்ற பத்திரிகையாளர் சந்திப்பிலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டது.

அங்கு மேலும் தெரிவிக்கையில், எமது சங்கத்தின் நடவடிக்கைகளை பொதுமக்களுக்கு அறிவிக்கும் வகையிலேயே இந்த பத்திரிகையாளர் சந்திப்பினைத் நாம் மேற்கொண்டுள்ளோம்.

2011 ஆம் ஆண்டில் எமது சங்கத்தால் நடத்தப்படும் 5 ஆவது பொதுக் கருத்தரங்கு இன்று யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் இடம்பெறுகின்றது.

இலங்கையில் உள்ள அனைத்து பல்கலைக்கழக ஆசிரியர் சங்கங்களின் நோக்கம் கல்வியின் தரத்தை மேம்படுத்துவதே.

கல்வியின் தரத்தை மேம்படுத்த வேண்டுமாயின் தரம் மிகுந்த விரிவுரையாளர்கள் மூலம் கல்வி புகட்டப்பட வேண்டும்.

அரசாங்கத்தால் உரிய முறையில் வேதனம் வழங்கப்படுவதன் மூலம் விரிவுரையாளர்கள் தமது கல்விச் செயற்பாடுகளை மேம்படுத்த முடியும்.

எமது நாட்டை விட்டு வெளிநாடுகளுக்கு மேற்படிப்புக்காக செல்லும் விரிவுரையாளர்கள் எவரும் மீண்டும் நாட்டுக்கு திரும்புவதில்லை.

போர்ச் சூழல் முடிந்த பின்பும் 550 விரிவுரையாளர்கள் மேற்படிப்புக்காக வெளிநாடுகளுக்குச் சென்று மீண்டும் நாடு திரும்பவில்லை.

எமது நாட்டின் கல்வித்தரம் உயர்த்தப்பட வேண்டுமானால் நாட்டை விட்டு வெளியேறும் கல்வியாளர்கள் தடுக்கப்பட வேண்டும்.

சம்பள உயர்வு தொடர்பான கோரிக்கையை உயர்கல்வி அமைச்சிடம் முன்வைத்துள்ளோம். ஆனால், அது எவ்வளவு தூரம் ஏற்றுக் கொள்ளக் கூடியதாக இருக்கும் என்பது தெரியவில்லை.

கோரிக்கைகள் நிறைவேற்றப்படும் என உறுதிபட கூறமுடியாது. இருப்பினும் ஜனாதிபதி, பொருளாதார அமைச்சர் ஆகியோரிடமும் எமது கோரிக்கைகளை முன்வைத்துள்ளோம்.

கடந்த வாரம் இடம்பெற்ற பேச்சுவார்த்தைகளில் தெரிவிக்கப்பட்ட வாக்குறுதிகள் செயல்வடிவம் பெறும் வரை போராட்டம் தொடர்ந்து இடம்பெறும்.

எமது கோரிக்கைகள் உடனடியாக நிறைவேற்றப்படாது போனாலும் கட்டங்கட்டமாக வேனும்நிறைவேற்றப்பட வேண்டும் எனமேலும் தெரிவிக்கப்பட்டது.

இந்தச் சந்திப்பில் பேராதனைப் பல்கலைக் கழகத்தின் பேராசிரியர் சுமணசிறிலியனகே, கொழும்பு பல்கலைக்கழகத்தின் கலாநிதி நிர்மல ரஞ்சித் தேவசிறி,கலாநிதி பிரபாத் ஜெயசிங்க, சிறிஜெயவர்த்தகபுர பல்கலைக்கழக பேராசிரியர் தம்பற அமிலதேரர் உட்பட பல ஆசிரியர் சங்க உறுப்பினர்களும் கலந்து கொண்டனர். (4-6)

## சென்மேரிஸ் மைதானத்தின் பவளவிழா நிகழ்வுகள்

யாழ்.நாவாந்துறை சென்மேரிஸ் சன சமூக நிலைய 75 ஆவது ஆண்டு பவள விழா நாளை ஞாயிற்றுக்கிழமை ஆரம்பமாகி எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 4 ஆம் திகதி நடைபெறவுள்ளன.

சென்மேரிஸ் விளையாட்டு மைதானத்தில் காலையில் பங்குத்தந்தை அருட்திரு இராஜசிங்கம் அடிகளாரின் சிறப்பு திருப்பலியுடன் பவளவிழா நிகழ்வுகள் ஆரம்பமாகவுள்ளது.

இந்நிகழ்வில் கடல்சார்ந்த விளையாட்டுக்கள், மைதான சுவட்டு நிகழ்வுகள், உதைபந்தாட்டம், கரப்பந்தாட்டம், துடுப்பாட்டம், கூடைப்பந்தாட்டம், மரதன் ஓட்டம், சைக்கிள் ஓட்டம், ஆன்மீக கலை பண்பாடு சார்ந்த நிகழ்வுகள் நடைபெறவுள்ளன. (4)

# இ.போ.ச.சேவையினை சீராக நடத்த பொதுமக்கள் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

மறவன்புலோ மற்றும் தனங்கிளப்பு, கைதடி, நாவற்குழி ஆகிய பகுதிகளில் மக்கள் மீள்குடியமர்ந்துள்ள நிலையில் அவர்களுக்குரிய போக்குவரத்து சீரின்மையால் பெரும் அசௌகரியங்களுக்கு உள்ளாகின்றனர் என மறவன்புலோ கிராம அபிவிருத்திச் சங்கம் சுட்டிக் காட்டுகின்றது.

806 ஆம் இலக்க பேருந்து கோகிலாங்கண்டி துறைமுகத்துடன் தனது சேவையை தற்பொழுது நிறுத்துகிறது.

இப்பேருந்து தனங்கிளப்பு சந்திவரை தனது சேவையைத் தொடரவேண்டும். இடப்பெயர்வுக்கு முன்னர் இயங்கிய அதே வழியாகத் தனது சேவையை 805 ஆம் இலக்க பேருந்து தொடரவேண்டும் என அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (4)

# வடமராட்சியில் டெங்கு ஒழிப்பு நடவடிக்கை தீவிரம்

(பருத்தித்துறை)

வடமராட்சியில் டெங்கு ஒழிப்பு பிரசார நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

பருத்தித்துறை கல்லூரி வீதியில் அண்மையில் ஒருவர் டெங்கு நோயால் பாதிக்கப்பட்டு இனங்காணப்பட்டதையடுத்து டெங்கு ஒழிப்பு பிரசார நடவடிக்கை இப்பகுதியில் துரிதமடைந்துள்ளது.

இந்நடவடிக்கையில் சுகாதார பரிசோதகர்கள், சுகாராத திணைக்கள உத்தியோகத்தர்கள் ஆகியோர் இணைந்து வடமாரட்சி பகுதியில் வீடு வீடாகச் சென்று இப் பிரசார நடவடிக்கையினை மேற்கொள்வதோடு மக்களுக்கு ஆலோசனைகளையும் வழங்கி வருகின்றனர்.

இது தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரி ஒருவரிடம் வினவியபோது டெங்கு நோய் தாக்கம் தற்போது கட்டுப்பாட்டில் இருப்பதாகவும் அவர் தெரிவித்தார். (4-2-10)

யாழ்.செய்திகள்

## வசந்தோற்சவம்

பொலிகண்டி கந்தவன் கடவை சுப்பிரமணிய சுவாமி தேவஸ்தான வசந்தோற்சவ நிகழ்வு இன்று காலை 8 மணிக்கு கிரியைகளுடன் ஆரம்பமாகவுள்ளது.

பக்தர்கள் அதனைத் தொடர்ந்து முருகப்பெருமானுக்கு கர்ப்பூரச் சட்டிகள், பாற்செம்புகளுடன் வீதியுலா வரவுள்ளனர்.

மேலும் தவில் நாதஸ்வர கச்சேரிகள், இன்னிசை நிகழ்வுகள், பக்தி பூர்வ நாட்டிய நிகழ்வுகள் என்பன நடைபெறவுள்ளன.(4-48)

## வடமராட்சி வலயக்கல்வி அலுவலகம் மீள் புனரமைப்பு

(பருத்தித்துறை)

வடமராட்சி வலயக்கல்வி அலுவலகம் மீள் புனரமைப்பு செய்யப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதற்கென 22.2 மில்லியன் ரூபா செலவிடப்படவுள்ளது.

வடக்கின் துரித மீளெழுச்சித் திட்டத்தின் கீழ் இப் புனரமைப்பு வேலைகள் நடைபெறவுள்ளதாகவும் தற்போது இந்த அலுவலகம் பருத்தித்துறை முதலாம் கட்டை பகுதியிலுள்ள பருத்தித்துறை கோட்டக்கல்வி அலுவலகத்துடன் இணைந்து செயற்பட்டு வருவதும் குறிப்பிடத்தக்கது. (4-2-10)

## பதிவினை மேற்கொள்ளவும்

(அச்சுவேலி)

வலிகாமம்கிழக்குபிரதேசத்திலுள்ள அனைத்து விளையாட்டுக் கழகங்களையும் எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 10 ஆம் திகதிக்கு முன்னர் பதிவுகளை மேற்கொள்ளுமாறு விளையாட்டு அலுவலர் எஸ்.அகல்யா கேட்டுள்ளார். (4-70)

# இளங்கலைஞர் மன்றத்தின் மாதாந்த இசை நிகழ்வுகள்

(யாழ்ப்பாணம்)

யாழ்.நல்லூர் சட்டநாதர்வீதியிலுள்ள இளங்கலைஞர் மன்றம் நிகழ்த்தும் மாதாந்த இசை நிகழ்ச்சி நாளை பிற்பகல் 5 மணிக்கு மன்றக் கலாமண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இக் கலைநிகழ்வுகளில் பாட்டு நிகழ்ச்சியினை யாழ்.பல்கலைக்கழக இசைத்துறை உதவி விரிவுரையாளர் சங்கீத வித்துவான் ஏ.கே.கருணாகரன், வயலின் இசையினை முதுகலைமாணி கே.குகபரன் மற்றும் மிருதங்க இசையினை யாழ்.பல்கலைக்கழக இசைத்துறை விரிவுரையாளர் கலாபூஷணம் எஸ்.மகேந்திரன், பக்கவாத்தியத்தினை பி.மியூசிக் அணணாமலைப் பல்கலைக்கழகம் செல்வன் எம்.லோசேந்திரன் ஆகியோர் நிகழ்த்தவுள்ளனர். (4)

## மஹோற்சவம்


(யாழ்ப்பாணம்)

கோப்பாய் அருள்மிகு வெள்ளெருவைப் பிள்ளையார் கோவில் மஹோற்சவம் கடந்த ஆறாம் திகதி புதன்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது.

இதில் எதிர்வரும் 13 ஆம் திகதி புதன்கிழமை இரவு சப்பறத்திருவிழாவும் மறுநாள் வியாழக்கிழமை காலை தேர்த்திருவிழாவும் 15 ஆம் திகதி வெள்ளிக்கிழமைகாலை10மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் நடைபெறவுள்ளது. (4)







இலங்கை மத்திய வங்கியின் நாணயத் திணைக்களத்தின் ஏற்பாட்டில் போலி நாணயத்தாளின் பாவனையை கட்டுப்படுத்துவது தொடர்பான விழிப்புணர்வு கருத்தரங்கு நேற்று யாழ்.வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையில் இடம்பெற்றது.இதில் இலங்கை மத்திய வங்கியின் வடபிராந்திய முகாமையாளர் இ.சிறிதரன், நாணயத் திணைக்களத்தின் பணிப்பாளர் ரட்ணாத்திலக ஆகியோர் உரையாற்றுவதையும் நிகழ்வில் கலந்து கொண்டவர்களையும் படங்களில் காணலாம்.

# மடுத்தேவாலயத்தின் குடிநீருக்கு பலதிட்டங்கள் முன்னெடுப்பு

## அமைச்சர் கெஹலிய தெரிவிப்பு



(கொழும்பு)

மடு தேவாலயத்திற்கு நீர் வசதியை பெற்றுக் கொடுக்கும் நோக்கில் இரண்டு கட்டங்களின் கீழ் செயற்றிட்டங்கள் மேற்கொள்ளப்படவுள்ளன.

இதற்காக 505 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளதுடன் அமைச்சரவையின் அங்கீகாரமும் கிடைத்துள்ளது என்று அமைச்சரவை பேச்சாளரும் அமைச்சருமான கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற வாரா ந்த அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் மாநாட்டில் கலந்து கொண்டு கருத்துவெளியிடுகையிலேயே அமைச்சர் இந்த விடயத்தை குறிப்பிட்டார்.

அமைச்சர் அங்கு மேலும் கூறியதாவது,

மடு தேவாலயத்துக்கு வருடாந்தம் 4இலட்சத்து 50 ஆயிரம் பக்தர்கள் வந்து செல்கின்றனர். எனவே அங்கு சிறந்த நீர் வசதிகளை செய்து கொடுக்கவேண்டிய வசதிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அதன்படி முதலாவது திட்டத்தின் கீழ் தேவாலயத்தின் உள்ளக வளாகத்தில் 101.4 மில்லியன் ரூபா செலவில் நீர்த்திட்டம் ஒன்று முன்னெடுக்கப்படவுள்ளது.

அதனையடுத்து 2012 ஆம் ஆண்டில் இரண்டாம் கட்டமாக 403.8 மில்லியன் ரூபா செலவில் 12 கிலோமீற்றர் தூரத்துக்கு நீர்த் திட்டம் செயற்படுத்தப்படும். இவற்றுக்கான அமைச்சரவை அனுமதி கிடைத்துள்ளது. (4-2)

# நீதிமன்றத்தால் அபராதம்

(சாவகச்சேரி)

2010 டிசெம்பர் இலங்கைத் தொலைத் தொடர்பு ஆணைக் குழுவின் அனுமதியின்றி கேபிள் தொலைக்காட்சி நிகழ்வு நடத்திய உரிமையாளர் மூவருக்கெதிராக இலங்கைக் குற்றத் தடுப்பு பிரிவினர் சாவகச்சேரி நீதிவான நீதிமன்றத்தில் தாக்கல் செய்த வழக்கின் விசாரணை நேற்று நடைபெற்றது.

இதன்போது மூவரும் குற்றத்தை ஒப்புக் கொண்டதையடுத்து தலா 10 ஆயிரத்து 500 ரூபா அபராதம் விதித்து செலுத்தத் தவறின் 3 மாத சாதாரண சிறைத் தண்டனை அனுபவிக்குமாறு சாவகச்சேரி நீதிமன்ற நீதிபதி மாணிக்கவாசகர் கணேசராசா உத்தரவிட்டார். (4-29)

---

(கரவெட்டி)

வீட்டில் அளவுக்கதிகமாக கள் வைத்திருந்த 13 நபர்களுக்கு 32 ஆயிரத்து 500 ரூபா அபராத மும் செலுத்தத் தவறின் 13 மாத சிறைத் தண்டனையும் வழங்கி சாவ கச்சேரி நீதிமன்றம் நேற்று தீர்ப் பளித்துள்ளது.

சாவகச்சேரி பிரதேசத்தில் தமது வீடுகளில் அளவுக்கதிகமான கள் வைத்திருந்த வேளை மதுவரித் திணைக்களத்தால் நடத்தப்பட்ட திடீர் சோதனையின் போது 13 நபர்களும் சிக்கிக் கொண்டனர்.

குறித்த நபர்களை நேற்றைய தினம் சாவகச்சேரி நீதிவான் நீதிமன்ற நீதிபதி மாணிக்கவாசகர் கணேசராசா முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்டனர்.

வழக்கை விசாரித்த நீதிபதி குறித்த நபர்கள் மன்றில் குற்றத்தை ஒப்புக் கொண்டமையால் குற்றவாளியாகக் கண்டு 13 நபர்களுக்கும் தலா 2500 ரூபா அபராதமும் செலுத்தத் தவறின் தலா ஒரு மாத கால சிறைத் தண்டனையும் அனுபவிக்க வேண்டுமென உத்தரவிட்டார். (4-24)

---

அனுமதிப்பத்திரம் இன்றி அரச சாராயம் விற்பனை செய்த குற்றச்சாட்டின் பேரில் நபரொருவர் யாழ். பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நேற்றைய தினம் யாழ். நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டார்.

வழக்கை விசாரித்த யாழ். நீதிவான் நீதிமன்ற நீதிபதி ஏ.ஏ.ஆனந்தராஜா குறித்த நபர் மன்றில் குற்றத்தை ஒப்புக் கொண்டமையில் குற்றவாளியாகக் கண்டு 5 ஆயிரம் ரூபா அபராதமும் செலுத்தத்தவறின் ஒருமாத சதாரண சிறைத்தண்டனையும் வழங்கித் தீர்ப்பளித்தார். (4-3)

---

சாரதி அனுமதிப்பத்திரம் இன்றியும் மது போதையிலும் வாகனம் செலுத்திய குற்றச்சாட்டுக்களின் பேரில் நபரொருவர் யாழ். பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நேற்றைய தினம் யாழ். நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டார்.

வழக்கை விசாரித்த யாழ். நீதிவான் நீதிமன்ற நீதிபதி ஏ.ஏ. ஆனந்தராஜா குறித்த நபர் மன்றில் குற்றத்தை ஒப்புக் கொண்டமையால் குற்றவாளியாகக் கண்டு சாரதி அனுமதிப்பத்திரம் இல்லாத குற்றச்சாட்டிற்கு 2 ஆயிரத்து 500 ரூபா அபராதமும்செலுத்தத்தவறின் ஒருமாதசாதாரண சிறைத்தண்டனையும் மதுபோதையில் வாகனம் செலுத்திய குற்றச்சாட்டிற்கு 6 ஆயிரம் ரூபா அபராதமும் செலுத்தத்தவறின் ஒரு மாத சாதாரண சிறைத்தண்டனையும் வழங்கித் தீர்ப்பளித்தார். (4-3)

---

சாரதிஅனுமதிப்பத்திரம்இன்றியும் வருமான வரிப் பத்திரம் இன்றி விபத்தை தடுக்க தவறியமை, கவனமின்றியும் மற்றும் மதுபோதையில் வாகனத்தை செலுத்திய ஐந்து குற்றச்சாட்டுக்களின் பெயரில் ஒருவர் யாழ். பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நேற்றைய தினம் யாழ். நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டார்.

வழக்கை விசாரித்த யாழ். நீதிவான் நீதிமன்ற நீதிபதி ஏ.ஏ.ஆனந்தராசா குறித்த நபர் மன்றில் குற்றத்தைக் ஒப்புக் கொண்டமையால் குற்றவாளியாகக் கண்டு சாரதி அனுமதிப்பத்திரம் இல்லாத குற்றச் சாட்டிற்கு 2 ஆயிரத்து 500 ரூபா அபராதமும் செலுத்தத்தவறின் ஒரு மாத சாதாரண சிறைத்தண்டனையும் வருமான வரிப்பத்திரம் இல்லாத குற்றச்சாட்டிற்கு 500 ரூபா அபராதமும் செலுத்தத் தவறின் ஒருமாத சாதாரண சிறைத்தண்டனையும் விபத்தை தடுக்க தவறியமைக்கு ஆயிரம் ரூபா அபராதமும் செலுத்தத்தவறின் ஒருமாத சாதாரண சிறைத்தண்டனையும் கவனமின்றி வாகனம் செலுத்தியமைக்கு ஆயிரத்து 500 ரூபா அபராதமும் செலுத்தத்தவறின் ஒருமாத சாதாரண சிறைத்தண்டனையும் மதுபோதையில் வாகனம் செலுத்தியமைக்கு 4 ஆயிரம் ரூபா அபராதமும் செலுத்தத்தவறின் ஒரு மாத சிறைத்தண்டனையும் வழங்கித் தீர்ப்பளித்தார். (4-3)


## Project Coordinator

St. John's college and Chundikuli Girls' College of Jaffna are seeking a female project coordinator someone who is passionate about working with orphan and needy children.
This role involves working extensively with a UK based charity.

Required skills:
Demonstrable computer skills, specifically with Microsoft Office Products (Word and Excel), Email and WEB. Basic accounting skills and Google apps knowledge would be an advantage
Ability to work with minimal supervision in a dynamic and changing environment
Must be fluent in English (Reading and writing)

If you think you can make a profound difference to the life of Internally Displaced Children then,
Please send your application to St. John's college by post or email
The Principal,
St. John's College, Main Street, Jaffna
Tel/ Fax No: 0 21 222 2432
Email : stjohns@sltnet.lk

"LUX IN TENEBRIS LUCET"
LIGHT SHINETH IN DARKNESS

(சி-3674)


# மணிபல்லவத்தில் மஹோற்சவம்



## நயினை நாகபூஷணி அம்மன் பாமாலை

### இன்று ஒன்பதாம் திருவிழா

### பக்தர் துயர் தீர்ப்பவளே

நயினைப்பதியினிலே
நாகம் குடைபிடிக்க
நயமாய் வீற்றிருக்கும்
நாகபூஷணித்தாயே

பக்தர் துயர் தீர்ப்பவளே
பசிபோக்கும் பூரணியே
சிரம் தாழ்த்திப் பணிகின்றோம்
கீர்த்திகளை யீந்திடம்மா

*சாந்தா குகதாசன்.*

### நாதியற்ற எமக்கு நீதானே

புவனமே வேகமாய் பரவும் துன்பம்
வருமே நாகம் உனைக்கண்டு இன்பம்
நல்லோர் தீயோரிற்கு நீ தானே கேளீர்...
விடிவேதும் கிடைக்குமோ என்று
அடியெடுத்து வைக்கும் அடியானுக்கு
விடிவைக் கொடுப்பவளே
தாகம் தீர்த்து
எழுந்து அருள்வாய் நாகபூசணியே.

*ஜெயம் ஜெகன்,*
*புதுக்குடியிருப்பு.*

### "நால்வேதமும் போற்றும் நயினை நாயகி சரணமம்மா"

அம்மா உமையே ஆதிநாகபூசணி சரணமம்மா
அனைத்துலக நாயகி அம்பிகை பார்வதி சரணமம்மா
சிம்மாசனியே திரிபுர சுந்தரி சரணமம்மா
சிவரூபிணி சிற்புர நாரணி சரணமம்மா
பூதங்களைந்தாய் பொலியும் பூரணி சரணமம்மா
புண்ணிய தாரணி புஜங்க பூஷணி சரணமம்மா
மாதங்கி மாலினி வரதமனோன்மணி சரணமம்மா
நால்வேதமும் போற்றும் நயினை நாயகி சரணமம்மா

*தொல்புரத்தூர் க.லோகேஸ்வரன்.*

### காப்பதுன் கடமையன்றோ

அண்டங்கள் எல்லாம் ஆக்கி
அழகுக்கு வேர்தான் ஆகி
நின்றவர் அன்பின் நெஞ்ச
நேயத்தால் நிறைந்த செவ்வி
தொன்மைசேர் நயினை தன்னில்
அருளொளி பரப்பும் நாக
நன்னகை அணிந்த தேவி
காப்பதுன் அணிந்த தேவி
காப்பதுன் கடமை யன்றோ

*கவிமணி கந்த முருகேசதாசனார்.*


## காவேரி சில்க்ஸ்

திருமண பட்டுப்புடைவைகளிற்கு கைராசியான ஸ்தாபனம்.



இல.48, பெரியகடை வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 2222333

(சி-3668)

## பலவகை நிறத்தில் பயணச்சீட்டுக்கள்

சாதாரண பஸ்களில் அரை சொகுசு பஸ்களுக்கான கட்டணங்கள் அறவிடப்படுவதை தடுக்கும் வகையிலான நடைமுறையொன்று அறிமுகப்படுத்தியுள்ளதாக தனியார் போக்குவரத்து அமைச்சு தெரிவித்துள்ளது.

சாதாரண பஸ்களில் அரைசொகுசு பஸ்களுக்கான பயணச் சீட்டுக்கள் வழங்கப்படுவதாக தனியார் போக்குவரத்து அமைச்சர் சீ.பீ ரத்நாயக்க தெரிவித்தார். இது தொடர்பாக பயணிகளிடமிருந்து பல்வேறு முறைபாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளதாக அவர் கூறினார்.

இந்த பிரச்சினைக்கு தீர்வாக சாதாரண பஸ்களுக்கு செம்மஞ்சள் நிறத்திலும் அரை சொகுசு பஸ்களுக்கு நீலநிறத்திலும் சொகுசு பஸ்களுக்கு பச்சை நிறத்திலும் மற்றும் பூரண சொகுசு பஸ்களுக்கு இளஞ்சிவப்பு நிறத்திலும் பயணச் சீட்டைகள் விநியோகிக்க நடவடிக்கை எடுத்துள்ளதாக அவர் குறிப்பிட்டார்.(4-2)

## வெளிநாட்டு மாணவர்களை இணைப்பதால் பல்கலைக்கழகம் சர்வதேசதரத்தைப் பெறும்

### எஸ்.பி.திசாநாயக்க தெரிவிப்பு

(கொழும்பு)

வெளிநாட்டு மாணவர்களை தேசிய பல்கலைக்கழகங்களில் இணைத்துக் கொள்வதால் இலவசமாக கல்விக்கு எதுவிதமான பாதிப்பும் ஏற்படாது. அதேவேளை எமது பல்கலைக்கழகங்கள் சர்வதேசதரத்திற்கு உயர்வடையும் என்று உயர்கல்வி அமைச்சர்.எஸ்.பி.திஸாநாயக்க தெரிவித்தார்.

பேராசிரியர்களின் சம்பளப் பிரச்சினை தொடர்பாக அடுத்தவாரம் தீர்வு காணப்படுமென்றும் அமைச்சர் கூறினார்.

கொழும்பில் உயர்கல்வி அமைச்சில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடக வியலாளர் மாநாட்டில் உரையாற்றும் போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இங்கு அமைச்சர் தொடர்ந்தும் தெரிவிக்கையில், வெளிநாட்டு மாணவர்களை இணைத்துக் கொள்வதால் எமது மாணவர்களின் எண்ணிக்கை குறைவடையும் என்ற பிரசாரத்தில் உண்மையில்லை. இதனால் எமது மாணவர்களை இணைத்துக் கொள்ளல் அதிகரிக்கும்.

இதன்மூலம் கிடைக்கும் வருமானத்தால் தேசிய பல்கலைக்கழகங்களை அபிவிருத்தி செய்ய முடியும். பேராசிரியர்களின் சம்பளங்களை அதிகரித்து சர்வதேசதரத்திற்கு உயர்த்துவதோடு எமது மாணவர்களின் அடிப்படை வசதிகளையும் பூரணப்படுத்த முடியும்.

இத்திட்டத்தை ஊக்குவிப்பதற்காக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் ஆலோசனையின் பிரகாரம் 48 நாடுகளுக்கு 100 புலமைப் பரிசில்கள் வழங்கப்படவுள்ளன.

இதன்மூலம் எமது நாட்டின் வெளிநாட்டு மாணவர்களால் கல்விபயில முடியுமென்ற செய்தியை வழங்கமுடியும்.

எமது நாட்டு கலை, கலாசாரங்கள், பண்பாடுகளை உலகநாடுகளிலுள்ள மாணவர்கள் அறிந்துகொள்ளும் சூழல் உருவாகிறது. அதுமட்டுமல்லாது எமது தேசிய ஆயுர்வேத



மருத்துவ முறைகளையும் கற்பிப்பதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றது.

ஆயுர் வேத மருத்துவக் கற்கையை ஆங்கிலத்தில் நடத்தவும் திட்டங்கள் தயாரிக்கப்படுகின்றன.

உலகம் முன்பாக எமது பல்கலைக்கழகங்களையும் கொண்டு சென்று எமது மாணவர்களின் அறிவை உலகமயமாக்க வேண்டும். பழமையான பாடநெறிகளிலேயே சிக்கிக் கொண்டிருக்காமல் அதிலிருந்து வெளியே வர வேண்டும். புதிய பாடநெறிகளை அறிமுகப்படுத்த வேண்டும். தொழில்நுட்பம், புதிய கண்டுபிடிப்புக்கள் போன்றவற்றை ஊக்குவிக்க வேண்டும். எனவே ஆய்வுகளை மேற்கொள்வதற்காக நூற்றுக்கு 25 வீத கொடுப்பனவு சம்பளத்துடன் வழங்கப்பட்டு வருகிறது எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (4-2)

## த.தே. கூட்டமைப்பு சந்தர்ப்பவாத அரசியலை மேற்கொண்டு வருகிறது

### கருணா குற்றச்சாட்டு

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சந்தர்ப்பவாத அரசியலை மேற்கொள்கின்றது என பிரதி அமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன் (கருணா) தெரிவித்துள்ளார். கொழும்பில் சரவணமுத்து விளையாட்டரங்கு இருக்க முடியுமென்றால் வடக்கில் ஏன் மஹிந்த ராஜபக்ஷ பெயரில் மைதானம் இருக்கக் கூடாது என அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

கிழக்கிலும் ஜனாதிபதியின் பெயரில் விளையாட்டு அரங்கு ஒன்றை அமைக்குமாறும் தாம் அமைச்சர் பசில் ராஜபக்ஷவிடம் கோருவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

பாணந்துறையில் பிரபாகரனின் தந்தை அமைத்த கோயில் ஒன்று காணப்படுவதாகவும் அதனைச் சிங்கள மக்கள் இடிக்கவில்லை எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இவ்வாறான ஓர் நிலையில் வடக்கில் பௌத்த விகாரை ஒன்று இருப்பதால் என்ன தவறு என கேள்வி எழுப்பியுள்ளார்.

இந்து-பௌத்த சமாதானத்தை மேலும் வலுப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென அவர் வலியுறுத்தியுள்ளார்.

அரந்தாலா, தலதாமாளிகை மற்றும் பேருந்து குண்டுத் தாக்குதல்கள் தொடர்பில் [illegible]வ யென்றால் அரசாங்கத்தினால் [illegible]ணொளி தொகுப்பு ஒன்றை தயாரிக்க முடியும் என்ற போதிலும் சமாதானத்தை நிலைநாட்டுவதே அரசாங்கத்தின் நோக்கமாக அமைந்துள்ளது என அவர் தெரிவித்துள்ளார். (4-2)

## இலங்கையிலிருந்து செல்லும் அகதிகளை

### — கட்டுப்படுத்த கனடா நடவடிக்கை —

இலங்கையில் இருந்து சட்டவிரோதமாக கனடா செல்லும் அகதிகளை கட்டுப்படுத்தும் புதிய வேலைத்திட்டங்களை கனடா ஆரம்பிக்கவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதற்கான பல மில்லியன் டொலர்கள் பெறுமதியான வேலைத்திட்டம் ஒன்றை முன்வைத்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதற்கிடையில் கனடாவுக்கு சட்டவிரோதமாக சென்ற இலங்கை குடியேறிகளின் பராமரிப்புக்கான செலவீனங்களுக்காக கனேடிய குடிவரவுதுறை திணைக்களம் பல மில்லியன் பெறுமதியான செலவறிக்கை ஒன்றை சமர்ப்பித்துள்ளது.

கடந்த 2009 ஆம் ஆண்டு ஓசியன் லேடி கப்பல் மூலம் கனடாவின் விக்டோரியா பகுதியைச் சென்றடைந்த 76 இலங்கையர்களின் பராமரிப்பு செலவீனம் தொடர்பில் இந்த செலவறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் எதிர்காலத்தில் வரக்கூடிய சட்டவிரோத அகதிகளை தடுப்பதற்கான வன்மையான நடவடிக்கைகளை எடுப்பது தொடர்பிலும் இந்த நிதிகள் கோரப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது. இந்த வேலைத்திட்டங்களின் அடிப்படையில் கனடா நோக்கி வருகின்ற அகதிகள் தொடர்பில் தகவல் வழங்குவதற்கான ஒன்பது நாடுகளில் 16 புலனாய்வுத் தளங்களை நிறுவுவதற்கு கனடா நடவடிக்கை எடுத்துள்ளது.

அத்துடன் இந்த 16 புலனாய்வுத் தளங்கள் 40 நாடுகளில் உள்ள 67 எல்லைக் கட்டுப்பாட்டுத் திணைக்களங்களுடன் இணைந்து செயற்படும் என கூறப்பட்டுள்ளது.

இதேவேளை இவ்வாறான வேலைத்திட்டங்கள் இதற்கு முன்னர் இரண்டு தடவைகள் முன்மொழியப்பட்டன. எனினும் அவை நடைமுறைப்படுத்தப்படவில்லை என கூறப்படுகிறது.

இதன் விளைவாகவே ஓசியன் லேடி மற்றும் சன் சீ கப்பல் என்பன கனடாவை சென்றடைவதை தடுக்க முடியாதிருந்ததாகவும் ஊடக அறிக்கைகள் தெரிவிக்கின்றன. (4-2)

## புலிகளுடன் தொடர்பு வைத்திருந்த நபர் ஒருவர் மலேசியாவில் கைது

விடுதலைப் புலிகளுடன் தொடர்புடைய அதிகாரி ஒருவர் மலேசியாவில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளதாக இலங்கை வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார். இலங்கை நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற விவாதம் ஒன்றில் உரையாற்றும் போதே அவர் இந்தத் தகவலை வெளியிட் டுள்ளார்.

விடுதலைப் புலிகளுடன் தொடர்புகளை வைத்திருந்த இந்த அதிகாரி மலேசியாவில் வைத்து அண்மையில் கைது செய்யப்பட்டு இலங்கைக்கு கொண்டு வரப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட அதிகாரியின் பெயரை இலங்கை வெளிவிவகார அமைச்சர் ஜி.எல். பீரிஸ் வெளியிடவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

ஆனால் இந்தக் கைது பற்றி தனக்கு எதுவும் அறிவிக்கப்படவில்லை என்று மலேசியாவுக்கான இலங்கைத் தூதுவர் டி.டி. ரணசிங்க தெரிவித்துள்ளார்.

இத்தகைய சம்பவம் தொடர்பாக தான் அறிந்து கொள்ளவில்லை என்று இலங்கையின் பாதுகாப்பு ஊடக மத்திய நிலையத்தின் பணிப்பாளர் லக்ஸ்மன் ஹுலுகல்லவும் தெரிவித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (4-2)





கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் மாணவர்களின் பாண்ட் வாத்திய அணியினரையும் நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்துகொண்ட கல்வி அமைச்சின் தமிழ்ப் பாடசாலைக்குப் பொறுப்பான கல்விப் பணிப்பாளர் எஸ்.முரளிதரன், புத்தளம் கல்வி வலயப் பணிப்பாளர் மங்கள சுபசிங்க, இந்து பௌத்த சங்க செயலாளரும் ஜனாதிபதியின் சட்ட ஆலோசகருமாகிய எஸ். இராமச்சந்திரன், கோட்டக் கல்விப்பணிப்பாளர் எஸ்.மாணிக்கராஜா, லயன் டாக்டர் வை.தியாகராஜா, அத்தியார் இந்துக்கல்லூரி அதிபர் இ.குணநாதன், தொழிலதிபர் இ.எஸ்.பி நாகரத்தினம் ஆகியோர் மேடையில் அமர்ந்திருப்பதையும் படங்களில் காணலாம்.

## சரத் பொன்சேகா தாக்கல் செய்த ஆட்கொணர்வு மனு மீதான விசாரணை

(கொழும்பு)

தாம் கைது செய்யப்பட்டமை சட்ட விரோதமானது என தெரிவித்து முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா தாக்கல் செய்துள்ள ஆட்கொணர்வு மனுவும் முதலாவது இராணுவ நீதிமன்றத்திற்கு எதிராக அவர் தாக்கல் செய்துள்ள மனுவும் மேன்முறையீட்டு நீதிமன்றில் நேற்று பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டன.

டயிள்யூ.எல்.ரஞ்சித் சில்வா மற்றும் அனில் குணரத்ன ஆகிய நீதிபதிகள் முன்னிலையில் இந்த மனுக்கள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டன.

இந்த மனுக்கள் மீதான விசாரணைகளை நடத்துவதற்கு மூன்று நீதிபதிகள் அடங்கிய குழாம் ஒன்று நியமிக்கப்பட்டிருந்ததாக மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதி டபிள்யூ. எல். ரஞ்சித் சில்வா சுட்டிக்காட்டினார்.

எனினும் நீதிபதி சத்யா ஹெட்டிகே உயர் நீதிமன்ற நீதியரசராக நியமிக்கப்பட்டுள்ளதால் தமக்கும் நீதிபதி அனில் குணரத்தினவுக்கும் இந்த மனுக்களை பரிசீலனை செய்வதற்கான அனுமதியை மேன்முறையீட்டு நீதிமன்றம் தற்போதைய தலைவர் வழங்கியுள்ளதாக நீதிபதி தெரிவித்தார்.

இதற்கமைய தாமும் அனில் குணரத்தினவும் எதிர்காலத்தில் இந்த இரண்டு மனுக்களையும் பரிசீலிக்கவுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

இந்த விடயங்களை வழக்கு கோவையில் குறிப்பிடுமாறு இரண்டு தரப்பினதும் சட்டத்தரணிகள் நீதிமன்றில் வேண்டுகோள் விடுத்தனர்.

எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 19 ஆம் திகதி மீண்டும் இந்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளது. (4-2)

## இலங்கை தொடர்பான ஐ.நா. அறிக்கை குறித்து இன்னும் யோசிக்கும் பான் கீ மூன்

இலங்கை தொடர்பான ஐ.நா. நிபுணர் குழு சமர்ப்பித்த அறிக்கை குறித்து அடுத்து என்ன நடவடிக்கை மேற்கொள்வது என ஐ.நா. செயலாளர் நாயகம் பான் கீ மூன் இன்னும் யோசித்து வருவதாக ஐ.நா. நேற்று முன்தினம் வியாழக்கிழமை தெரிவித்துள்ளது.

இலங்கை தொடர்பான நிபுணர் குழுவின் அறிக்கையை ஐ.நா. செயலாளர் நாயகம் எப்போது உத்தியோகபூர்வமாக மனித உரிமைகள் பேரவைக்கு அனுப்புவார் என கேட்டபோது,

நாம் இந்த அறிக்கையை ஏற்கனவே பகிரங்கமாக்கியுள்ளோம். ஏனைய ஸ்தாபனங்களுக்கு அனுப்புவது மற்றும் அடுத்த கட்ட நடவடிக்கை குறித்து செயலாளர் நாயகம் யோசித்து வருகிறார்.

அவ்வாறு மேலதிக நடவடிக்கை குறித்து: அறிவிப்பதற்கு ஏதும் இருந்தால் அந்த வேளையில் அறிவிப்போம் என ஐ.நா.செயலாளர் நாயகத்திக் பதில் பிரதிப் பேச்சாளர் பர்ஹான் ஹக் கூறினார். (4-2)

## யாழ்.எழுவைதீவில் சிசுவின் சடலம் மீட்பு

யாழ். எழுவைதீவு பகுதியிலுள்ள பற்றைக்குள் இருந்து பிறந்து 3 நாட்களான சிசுவின் சடலம் நேற்று வெள்ளிக்கிழமை காலை மீட்கப்பட்டுள்ளதாக ஊர்காவற்றுறை பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சிசு துணிகளினால் சுற்றப்பட்டு பற்றைக்குள் வீசி எறியப்பட்டுள்ளதாக ஊர்காவற்றுறை பொலிஸார் குறிப்பிட்டனர்.சிசுவின் சடலம் தொடர்பாக அப்பகுதி மக்களிடம் விசாரணைகள் மேற்கொள்ளப் பட்டதுடன் குறித்த சிசுவின் தாயை தேடி வருவதாகவும் ஊர்காவற்றுறை பொலிஸார் தெரிவித்தனர். இறந்த சிசுவின் சடலம் தற்போது ஊர்காவற்றுறை ஆதார வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. (4-2)

## இந்துக் கோயில்கள் இருந்த இடத்தில் பௌத்த விகாரைகள்

### சுமந்திரன் எம்.பி.தெரிவிப்பு

வடக்கில் இந்துக் கோயில்கள் இருந்த இடங்களில் பௌத்த விகாரைகள் அமைக்கப்படுவதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.சுமந்திரன் குற்றஞ்சாட்டியுள்ளார்.

வடக்கில் சொற்பளவான பௌத்தர்களே இருப்பதாக சுட்டிக்காட்டியுள்ள அவர் மேற்படி குற்றச்சாட்டை தெரிவித்துள்ளார்.

போர் முடிவடைந்து இரண்டு ஆண்டுகள் கடந்துள்ள போதிலும் தீர்வுத் திட்டம் முன்வைக்கப்படவில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டு வருவதாகவும் இந்தப் பேச்சுவார்த்தைகளின் மூலம் அரசாங்கம் வேறும் நன்மைகளை அடைவதற்கு முயற்சித்தால் அதற்கு இடமளிக்கப்படமாட்டாது என அவர் தெரிவித்துள்ளார்.

வடக்கில் இராணுவ ஆட்சியே நிலவி வருவதாக அவர் குற்றம் சுமத்தியுள்ளார். கூட்டமைப்பு உறுப்பினர்கள் மீது தாக்குதல் நடத்தியவர்கள் இதுவரையில் கைது செய்யப்படவில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.தமிழ் மக்கள் இரண்டாம் நிலைப் பிரஜைகளாக கருதப்படுகின்றமைக்கு இவைகளே சான்று என அவர் தெரிவித்துள்ளார். (4-2)

## மெனிக்பாம் நிவாரணக் கிராமத்தில் வாகனம் மோதி சிறுவன் மரணம்

(வவுனியா)

செட்டிக்குளம் மெனிக்பாம் நிவாரண கிராமத்தில் அன்றாட கழிவுகளை துப்புரவு செய்யும் வாகனத்தில் அகப்பட்டு ஆறு வயது சிறுவன் ஒருவன் உயிரிழந்துள்ளான்.

இச்சம்பவம் கடந்த புதன்கிழமை மாலை இடம்பெற்றுள்ளது.

சம்பவத்தில் ஜெயராஜசிங்கம் கஜீவன் என்ற சிறுவனே உயிரிழந்தவராவான். கழிவுகளை துப்புரவு செய்வதற்கு சென்ற செட்டிக்குளம் பிரதேச சபையின் வாகனத்திலேயே குறித்த சிறுவன் நசியுண்டுள்ளான் என பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவத்தை அடுத்து குறித்த வாகனத்தின் சாரதி கைது செய்யப்பட்டுள்ளார். மரணமான சிறுவனின் சடலம் மரண விசாரணையின் பொருட்டு வவுனியா பொது வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது என பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (4-2)




# திராட்சையில் பீடைகளும் முகாமைத்துவமும்



பேராசிரியர் கு.மிகுந்தன்
விவசாய உயிரியல்துறை
விவசாய பீடம்
யாழ்.பல்கலைக்கழகம்

*வாருங்கள் எம்மினிய உறவுகளே!*

திராட்சையில் பாதிப்பை ஏற்படுத்தும் பீடைகளின் வகைகளைப் பற்றி விரிவாக சென்ற வாரங்களில் பார்த்தோம்.

கடந்த சனிக்கிழமைஇக்கட்டுரைத் தொடர் வராமைக்கு வருந்தும் அதேவேளை. அதற்கான காரணமாக கடந்த இருகிழமைகளாக அமெரிக்காவின் தென் பகுதியிலமைந்துள்ள மிக்சிக்கன் பல்கலைக்கழகத்துக்கு சென்று வந்தமையால் எழுவதில் தடங்கலேற்பட்டது.

மிச்சிக்கன் நகர பல்கலைக்கழகத்தில் (Michigan state University) நடைபெற்ற உலகளார்ந்த ஒருங்கிணைந்த பீடை முகாமைத்துவம், விவசாய சூழலியல் மற்றும் பேண்தகுவிவசாயம் என்பவற்றை கருவாகக் கொண்ட குறுகியகால வேலைப் பட்டறையூடாக அறியும் வாய்ப்பு கிட்டியிருந்தது. இது பற்றிய அறிந்து தெரிந்த விடயங்களை தொடரும் இக்கட்டுரைத் தொடரில் உட்புகுத்தி தர எழுதும் இக்கைகள் விரும்புகின்றன. எங்களூர் விவசாயத்தில் எவ்வாறு புதிய, சிறந்த தொழில் நுட்பங்களை உள்வாங்கலாம் என்பதனை ஆங்காங்கே விரிவாகப் பார்ப்போம்.

விவசாய விஞ்ஞானம் வளர்ச்சியடைந்து செல்லும் வேகம் உலக மக்களனை வருக்குமான உணவுற்பத்தியை மையப்படுத்தியதாக இருப்பினும் விவசாயஞ்சார்ந்த கைத்தொழிற் புரட்சிக்கு வித்திடவும் இது தவறவில்லை என்பதனை கருத்தில் கொள்க. வளர்ச்சியடைந்த நாடான அமெரிக்காவில் வேலையாட்கள் அல்லது கூலியாட்களை பெறுவது மிகவும் கடினமாக உள்ளது.

இதன் காரணமாக இயந்திரங்களின் உதவி முழுமையாக பெறப்பட்டுள்ளது. பாரிய பிரதேசத்தில் மிகக் குறைந்த வேலையாட்களுடன் விதம் விதமான இயந்திரங்களின் உதவியுடன் பயிர்ச்செய்கையை செய்வது வியப்புக்குரியது. பல விவசாய பிரதேசங்கள் குறிப்பாக பழவகைகளின் தோட்டங்கள் இயந்திரங்களின் உதவியுடன் குறித்த காலத்தில் பயிர் செய்வதும் சிறப்புக்குரியது. தொடர்ந்து வரும் காலங்களில் விவசாயத் தொழிலுக்குள் உள்வாங்கப்படும்வேலையாட்களின் எண்ணிக்கை குறைவடையும் போது இதற்கான மாற்று வழிமுறையும் கவனத்திற் கொள்ள வேண்டியிருக்கும்.


திராட்சை செய்கையில் ஆரம்பத்திலிருந்தே பீடைத்தாக்கத்தை உன்னிப்பாக அவதானித்து வந்தால் அவற்றினது பெருக்கத்தை தவிர்த்துக் கொள்வதுடன் திராட்சைக் கொடியையும்



போது தப்பிப் பிழைப்பதற்கும் வழி செய்து விடும். எனவேதான் திராட்சை கொடியில் இவ்வாறான தண்டின் மேற்பகுதி பொருக்கினை சுத்தஞ்செய்து அகற்றிவிடுவது சிறந்தது.

திராட்சைக் கொடியை சுத்தமாக வைத்திருப்பதுடன் அது சூழவுள்ள பகுதியையும்

## இனியொரு பசுமைப் புரட்சிக்கு...




விரைந்த அழிவிலிருந்து தவிர்த்துக் கொள்ள முடியும்.

பனிப்பூச்சியின் தாக்கம் அதிகமாக இருக்கும் பிரதேசங்களில் அதனை கட்டுப்படுத்தும் வழி முறைகளை ஒருங்கிணைத்து செய்தல் நன்று.

குறிப்பாக கொடியின் தண்டுப் பகுதியில் மேற்றோல் வெடித்து செதில் படிந்தது போன்று இருக்கும்.. இந்த செதில் போன்று பொருக்கு வெடித்திருக்கும் பகுதி பூச்சிகள் முட்டையிடுவதற்கும் பீடைநாசினி விசிறும் சுத்தமான வைத்திருப்பது இவ்வாறான பீடைகளின் தாக்கத்தை பெருக விடாது பேண உதவும். சுத்தம் சுகம் தரும் எனும் வாசகம் இங்கும் பீடை முகாமைத்துவத்தில் பெரிதும் உதவும். திராட்சைக் கொடியில் தண்டில் சேதத்தை ஏற்படுத்தும் வண்டுகள், நீள்மூஞ்சி வண்டுகள், செதில் மற்றும் மாவுப் பூச்சிகள் என்பவற்றுக்கான மறைவிடமாகவும் இவ்வாறு வெடித்து பொருக்காக எழும்பும் தண்டின் மேற்றோல் இருப்பதால் பூச்சிப் பீடைகளின் வாழிடங்களை அழித்து சுத்தமாக வைத்திருத்தல் அவசியம்.

திராட்சைக் கொடி வளரும் இடத்தில் இருவித்திலை களைகள் இருப்பின் அவற்றை இயன்றளவு கட்டுப்படுத்தி விடுவது அவசியமானது. (தொடரும்)

---

# க.பொ.த.உயர்தரப் பரீட்சைக்கு தோற்றவுள்ள முன்னாள் போராளிகள்

புனர்வாழ்வளிக்கப்பட்டுள்ள முன்னாள் போராளிகள் 302 பேர் இம்முறை கல்விப் பொதுத் தராதரப் பத்திர உயர்தரப் பரீட்சையில் தோற்றவுள்ளதாக புனர்வாழ்வு ஆணையாளர் நாயகம் மேஜர் ஜெனரல் சுதந்த ரணசிங்க தெரிவித்துள்ளார்.

இவர்கள் வவுனியாவில் அமைக்கப்படவுள்ள மத்திய நிலையமொன்றில் பரீட்சைக்குத் தோற்றவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.



யா/மானிப்பாய் விவேகானந்த வித்தியா சாலை தரம்5 இல்கல்விபயிலும்விதுஷனா நிர்மலேஸ்வரன் மாணவி மாகாணமட்டத்தில் நடை பெற்ற 11 வயதுப் பிரிவு மெய் வல்லுநர் போட்டியில் 75மீற்றர் ஓட்டத்தில் முதலாம் இடத்தைப் பெற்றுள்ளார். (படம்:-நவாலிச் செய்தியாளர்)

உயர்தரப் பரீட்சையில் தோற்றவுள்ள தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பின் முன்னாள் உறுப்பினர்களுக்கான கற்பித்தல் செயற்றிட்டமொன்று முன்னெடுக்கப்படவுள்ளதாகவும் மேஜர் ஜெனரல் சுதந்த ரணசிங்க கூறினார்.

வவுனியா தமிழ் வித்தியாலத்தில் கல்வி கற்று வரும் இவர்களுக்கு வார இறுதி நாட்களில் விசேட கருத்தரங்குகள் நடத்தப்படுவதாகவும் அவர் கூறினார். இதனை தவிர நீதி அமைச்சு மற்றும் கல்வி அமைச்சு ஆகியவற்றின் ஒத்துழைப்புடன் விசேட வகுப்புகள் நடத்தப்படுவதாகவும் குறிப்பிடப் பட்டள்ளது.

புனர்வாழ்வளிக்கப்பட்டுள்ள தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் முன்னாள் உறுப்பினர்கள் 361 பேர் கடந்த வருடம் நடைபெற்ற கல்வி பொது தராதரப் உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றினர். இவர்களில் 222 பேர் சித்தியடைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதில் மாணவன் ஒருவரும் மாணவி ஒருவரும் அதிசிறந்த பெறுபேறுகளைப் பெற்று பல்கலைக்கழகங்களில் மருத்துவ பிரிவில் கல்வியை தொடர்வதற்கான தகைமையை பெற்றுக் கொண்டதாக புனர்வாழ்வு ஆணையாளர் நாயகம் சுட்டிக் காட்டினார்.

இம்முறை உயர்தரப் பரீட்சையில் தோற்றவுள்ள புனர்வாழ்வளிக்கப்பட்ட மாணவர்கள் அநேகமானவர்கள் சிறந்த முறையில் சித்தியடைவார்கள் என அவர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார். (4-2)

---

# சர்வதேச குற்றவியல் நீதிமன்றில் இலங்கையை நிறுத்த அரசசார்பற்ற நிறுவனங்கள் திட்டம்

## திவயின தகவல்

(கொழும்பு)

சனல் 4 தொலைக்காட்சியின் வீடியோ படத்தை அடிப்படையாக கொண்டு இலங்கை இராணுவம் போர்க்குற்றம் செய்தது என உறுதிப்படுத்துவதற்காக இரண்டு சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்கள் இலங்கை அரசாங்கத்தை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் நிறுத்துவதற்கான இரகசியமான திட்டங்களை முன்னெடுத்து வருவது தெரிய வந்துள்ளதாக திவயின பத்திரிகை தெரிவித்துள்ளது.

இதற்காக உலக தமிழர் பேரவை, சர்வதேச மன்னிப்புச் சபையிடம் 5 மில்லியன் பவுண்களை வழங்கியுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

சர்வதேச மன்னிப்புச் சபையின் கனேடிய தலைவர் ஜோன் ஆர்க்குவ் மற்றும் உலக தமிழர் பேரவைக்கும் இடையில் நடைபெற்ற இரகசிய சந்திப்பில் இந்த தகவல் தெரிய வந்துள்ளது.

சிரேஷ்ட சட்டவாதிகள் 5 பேர் இலங்கைகைக்கு எதிராக வழக்கை தாக்கல் செய்ய நடவடிக்கை எடுத்து வருவதாக ஜோன் ஆர்குவ், உலக தமிழர் பேரவையிடம் தெரிவித்துள்ளதாகவும் திவயின கூறியுள்ளது.(4-2)

---

# போதைப் பொருளுடன் தொடர்புடைய ஆளும் கட்சியினர் தண்டிக்கப்படுவர்

## அமைச்சர் ஹெகலிய தெரிவிப்பு

(கொழும்பு)

போதைப் பொருள் வர்த்தக நடவடிக்கைகளுடன் தொடர்புடைய ஆளும் கட்சி உறுப்பினர்கள் தண்டிக்கப்படுவார்கள் என அரசாங்கத்தின் ஊடகப் பேச்சாளர் ஹெகலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.

போதைப் பொருள் வர்த்தகத்தில் தொடர்புடைய ஆளும் கட்சி அரசியல்வாதிகள் குறித்த விசாரணைகளை பொலிஸார் ஏற்கனவே ஆரம்பித்துள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

ஆளும் கட்சியைச் சேர்ந்த ஒன்றிரண்டு உறுப்பினர்கள் போதைப் பொருள் வர்த்தகத்தில் ஈடுபட்டு வருவதாகவும் இது வெளிப்படையான உண்மையாகும் எனவும் அவர் தெரிவித்தார்.

எனினும் போதைப் பொருள் வர்த்தகத்துடன் தொடர்புடைய நபர்கள் தராதரம் பாராது தண்டிக்கப்படுவார்கள் என அவர் உறுதியளித்துள்ளார்.

(4-2)

# கலாநிதி சோ.கிருஷ்ணராஜா நினைவுப் பேருரை-2011

12

## பல்வகைகள் ஒன்று சேர்தல் [Assemblage of Multiplicity]

**இருநிலைகள்**

19 ஆம் நூற்றாண்டு தொடக்கம் இற்றை வரை கோடாலி கண்ணப்பர் தொடக்கம் கிருஷ்ணராசா வரை தனி ஆள்களுக்கூடாக பல வகைகள் ஒன்று சேர்ந்து ஒவ்வொரு போக்காக உருவானமை இதுவரை எடுத்துக் காட்டப்பட்டுள்ளது. கோடாலி கண்ணப்பரின் ஒன்று சேர்க்கை ஒரு விதமாக அமைய ஆனந்தகுமாரசாமியின் ஒன்று சேர்க்கை இன்னோரு விதமாக அமைகிறது. இவ்வொன்று சேர்க்கை தனி ஆளுமையும் அவரது சமூகப் பின்னணியும் காலமும் இடமும் வகிக்கும் பங்குபிரதானமானவை. அப்போக்குகள் பிரதானமாகக் காலத்தாலும், இடத்தாலும் நிர்ணயம் செய்யப்படுகின்றன.



**கலாநிதி மௌனகுரு**
**யாழ் பல்கலைக்கழகம்**

கோடாலி கண்ணப்பர் என்ற கிராமியச் சிற்பி ஈழத்தமிழ்க் கலை உலகில் அறியப்படாதவராகிவிட, கலா விமர்சகரும், சிற்பியுமான ஆனந்த குமாரசாமி மிகவும் அறியப்பட்ட வராகிவிடுகின்றார். கோடாலி கண்ணப்பரின் வாரிசுகளும், ஆனந்த குமாரசாமியின் வாரிசுகளும் இன்று உள்ளனர்; இயங்கு நிலையிலுள்ளனர். ஆனால் பேசப்படுவோர் ஒரு பகுதியினரே.

தமிழ் இசையின் ஆரம்ப அங்கங்களுள் ஒன்றான பறையையும், சொர்ணாலியையும் பேணி வளர்த்த கழுதாவளையில் வாழும் பண்பாடான பாணர், பறையர் மரபும் அவர் வளர்த்த இசையும் பேசப்படாமல் போக, விபுலானந்தர் இலக்கியங்களின் துணை கொண்டு எடுத்துரைத்த தமிழ்ப் பண்மரபு பெரிதும் போற்றப்படுகின்றது

செல்லையா அண்ணாவியார் பெயர் தெரியாக் கலைஞராகி மண்மேட்டில் அமைந்த சிறு ஓலைக் குடிசையினுள் இறுதிக் காலத்தை யாரும் கவனிப்பாரற்று வறுமையிலேயே வாழ்ந்து இறந்து விட, வித்தியானந்தன் கூத்து மரபிற் பிரதான இடம் பெற்றவராகி விடுகிறார். இராமநாதன் நுண்கலைக் கல்லூரியில் நடன கலைமாமணிப் பட்டப்படிப்பு பெறும் இறுதி வருட மாணவர்கள் தமிழ்க் கூத்தை அறிந்திருக்க வேண்டுமென்று 1986களில் வித்தியானந்தன் அறிமுகம் செய்த கூத்துப் பயிற்சி நெறி, "பரதம் ஆடும் கால்கள் கூத்தாடலாமா" என்று விமர்சனம் கிளம்பியதும் கைவிடப்பட்டு விட்டது.



சோ. கிருஷ்ணராஜா

### 19 ஆம் நூற்றாண்டின் பின் ஈழத்தமிழர் மத்தியில் உருவான கலை - இலக்கியப் போக்குகளை தெரிந்தெடுக்கப்பட்ட சிலருக்கூடாகப் புரிந்து கொள்ளல்

கோடாலிக் கண்ணப்பர் -ஆனந்த குமாரசாமி

வையமுப்பன்ஆனைக்குட்டி-விபுலானந்தர்

செல்லையா அண்ணாவியார்-வித்தியாநந்தன்

டானியல்-கைலாசபதி,சிவத்தம்பி

மார்க் -கிருஷ்ணராசா

என இரு நிலையில் வைத்துப் பார்த்தால் 19 ஆம் நூற்றாண்டின் பின்னரான இலங்கைத் தமிழரின் கலை-இலக்கிய செந்நெறிச் சிந்தனைகளையும், செயல்களையும் புரிந்து கொள்ள உதவும்.

இப்போக்குகளில் ஆனந்தகுமாரசாமி, சுவாமி விபுலானந்தர், பேராசிரியர் சு.வித்தியானந்தன் ஆகியோரின் சிந்தனைகளும்,செயற்பாடுகளுக்கும் பிரதான போக்காகவும் பேராசிரியர் கைலகசபதி, பேராசிரியர் சிவத்தம்பி,பேராசிரியர் கிருஷ்ணராசா, மார்க் ஆகியோரின் போக்குகள் பிரதானம் குறைந்த போக்குகளாகவும் டானியல், செல்லையா அண்ணாவியார் ஆகியோரின் போக்குகள் பிரதானம் அற்ற போக்குகளாகவும் வையமுப்பன் ஆனைக்குட்டி, கோடாலி கண்ணப்பர், ஆகியோரின் போக்குகள் அறியப்படாத போக்குகளாகவும் உள்ளன.

(தொடரும்)


# நோய்பரப்பும் நுளம்புகளில் ஆய்வு

Dr ம.இராசதுரை,
இம்பர் சிட்டி,
பருத்தித்துறை.


2

நுளம்புகளில் அனோபிலஸ் சாதியில் அனோபிலஸ் கியூலிபேசிஸ், அனேபிலஸ் சப்பிக்டஸ், அனோபிலஸ் அனுலாறிஸ் என 20 இற்கும் மேற்பட்ட இனங்கள்காணப்படுகின்றன.

**அனோபிலஸ் நுளம்பை அடையாளம் காணும் படம்**




**அனோபிலஸ் கியூசிலின், அனோபிலஸ் அனோபிலின் நுளம்புகளின் தலை அமைப்புகள்**




வன்னியில் மலேரியாவைப்பரப்பும் நுளம்பு, அனோபிலஸ் கியூலிசி பேசிஸ் என்பதாகும்.

**நுளம்பின் வாழ்க்கை வட்டம்**

1. இது நான்கு நிலைகளைக் கொண்டது. அவையாவன,

1)முட்டை
2)குடம்பி
3)கூட்டுப்புழு
4)முதிர்ந்த நுளம்பு

| நுளம்பின் பெயர் | காவும் நோயின் பெயர் | நோய்க் காரணி |
|---|---|---|
| ஈடிஸ் அல்போபிக்டஸ் | டெங்குக்காய்ச்சல் | ஆர்போவைரஸ் |
| ஈடிஸ் எஜிப்ரை | டெங்குக்காய்ச்சல் | சிக்குஞ்ஞா வைரஸ் |
| ——— | மஞ்சள் காய்ச்சல் | ம.கா. வைரஸ் |
| கியூலெக்ஸ் றைற்றினியோறிங்கஸ் | யப்பான் மூளைக்காய்ச்சல் | ஜே.ஈ. வைரஸ்-1 |
| ——— | யப்பான் மூளைக்காய்ச்சல் | ஜே.ஈ. வைரஸ்-2 |
| கியூலெக்ஸ் ஜெலிடஸ் | யப்பான் மூளைக்காய்ச்சல் | ஜே.ஈ. வைரஸ்-3 |
| கியூலெக்ஸ் கிற்றியன்ஸ் | யப்புான் மூளைக்காய்ச்சல் | ஜே.ஈ. வைரஸ்-4 |
| கியூலெக்ஸ் விஸ்ணுய் | யப்பான் மூளைக்காய்ச்சல் | ஜே.ஈ. வைரஸ்-4 |
| சூடோ விஸ்ணுய் | யப்பான் மூளைக்காய்ச்சல் | ஜே.ஈ. வைரஸ்-4 |
| கியூலெக்ஸ்கிமின்ரஸ் பாசியேற்றஸ் | நகர யானைக்கால்நோய் | வுச்சுறேறியா |
| கியூலெக்ஸ் ஆமிஜெறெஸ் | ——— | பாங்கிறவ்ரி |
| கியூலெக்ஸ் மன்சோனியா யூனிபோமிஸ் | கிராமிய யானைக்கால் நோய் | வுச்சுறேறியா |
| கியூலெக்ஸ் மன்சோனியா அனுலிபேறா | கிராமிய யானைக்கால் நோய் | மலே |

(தொடரும்)

# தீவிரமான மனப்போக்கும் தன்மானமும் கொண்ட 9 ஆம் எண்ணில் பிறந்தவர்களே!

இயற்கையிலேயே துடிப்பும் வேகமும் கொண்ட 9 ஆம் எண்காரர்களின் சிறப்பு இயல்புகளை இங்கு விபரமாகப் பார்ப்போம்.

இந்த எண்ணின் நாயகர் முருகப்பெருமான். அவரே தேவர்களுக்கும் சேனாதிபதியாவார். எனவே, சேனாதிபதிக்குள்ள கட்டுப்பாடும் திறமையும் சவால்களைத் துணிந்து எதிர் கொள்ளும் தன்மையும் இவர்களுக்கு உண்டு.

இரத்தத்தைப் பார்த்து பயப்பட மாட்டார்கள். தெருச் சண்டை, யுத்தகளம் போன்ற இடங்களில் இவர்களைப் பார்க்கலாம்.

மேலும் அதிகாரமுள்ள பொலிஸ், இராணுவம் ஆகிய தொழிலில் மிகவும் விருப்பம் உடையவர்கள் இவர்கள் தான். மற்றவர்கள் பயப்படும் காரியங்களைத் துணிந்து ஏற்றுக் கொள்வர்கள். துணிவே துணை என்று நடை போடுவார்கள்.

இவர்களுக்கு முற்கோபமும் படபடப்பும் உண்டு. உடலும் சற்று முறுக்கேறி நிற்கும். நான்கு எண்காரர்களைப் போல் இவர்களுக்குக் கோபம், ரோஷம், தன்மானம் ஆகிய மூன்று குணங்களும் நிறைந்திருக்கும். எனவே, இவர்களுக்கு எதிர்ப்பு இருந்து கொண்டே இருக்கும்.

இவர்கள் எத்தொழிலிலும் பதவியிலும் நிர்வாகத்திலும் வல்லவர்கள். இவர்கள் ஓரளவு ஒல்லியானவர்களே! ஆண்களில் பெரும்பாலானோர் மீசை வளர்ப்பதில் விருப்பம் உடையவர்கள். நாவன்மை மிகுந்தவர்கள்.

இவர்களில் அதிர்ஷ்டசாலிகள் மென்மேலும் அதிர்ஷ்டசாலிகளாகவும் துரதிர்ஷ்டசாலிகள் தொடர்ந்து துரதிர்ஷ்டசாலிகளாகவும் இருப்பார்கள். இந்த எண்காரர்களுக்கு உடலில் அடிக்கடி காயங்கள், விபத்துக்கள் போன்றவை ஏற்படும். ஆயினும் அதைக் கண்டு பயப்படமாட்டார்கள். 9 ஆம் எண்ணில் பிறந்தவர்களின் பெயர்கள் 8 ஆம் எண்ணில் மட்டும் இருந்து விட்டால் தற்கொலை முயற்சிகளும் வாகனங்களால் விபத்தும் உண்டு.

இந்தச் செவ்வாய்க் கிரக ஆதிக்கர்கள் சைக்கிள், மோட்டார் சைக்கிள், ஸ்கூட்டர், லொறி, காளை மாட்டு வண்டிகள், குஸ்தி, நீச்சல் போட்டிகள், மிருக வேட்டை, உடற்பயிற்சிகள் ஆகியவற்றில் மிகவும் விருப்பம் உடையவர்களாக இருப்பார்கள்.

சர்க்கஸ் விளையாட்டுக்களில் விருப்பமுடன் ஈடுபடுபவர்கள் இவர்கள்தான். கார், சைக்கிள், லொறி, பேருந்து ஆகியவற்றை மிகவும் வேகமாக ஓட்டுபவர்கள் இவர்கள்தான். இவர்கள் எதற்கும் எப்போதும் பயப்பட மாட்டார்கள். மேலும் தங்களது நோக்கத்திற்காக கடுமையாக உழைக்கவும் தயங்க மாட்டார்கள். இவர்கள் எப்போதும் அலைபாயும் மனத்தை உடையவர்களாக இருப்பார்கள். இறைவன் இவர்களின் மனத்தை அமைதியாக வைத்திருக்க அனுமதிப்பதில்லை.

இவர்கள் நடப்பதில் மிகவும் பிரியமுடையவர்கள். என்னதான் வசதியிருப்பினும் கால் தேய நடந்து செல்வதில் இவர்களுக்கு விருப்பம் அதிகம். எந்த ஒரு அரசாங்க அலுவலகத்திலும் தனியார் ஸ்தாபனங்களிலும் தலைமைப் பதவியில் இவர்கள் நன்கு புகழ் பெறுவார்கள். உழைப்பதில் சுகம் காண்பார்கள்.

சோம்பலை வெறுப்பவர்கள். ஊர் சுற்றுவதிலும் அலாதிப் பிரியம் உடையவர்கள்.

சிறுவயதுகளில் மிகவும் சிரமப்பட்டாலும் தங்களது மன உறுதியினாலும் விடாமுயற்சியினாலும் இவர்கள் எப்படியும் பிற்காலத்தில் முன்னேறி விடுவார்கள்.

இவர்கள் சுதந்திரப் போக்கு உடையவர்கள், அவசரக்காரர்கள், உணர்ச்சிமயமானவர்கள், பிடி

**திருமண வாழ்க்கை**

இவர்கள் தாம்பத்தியத்தில் மிகுந்த விருப்பமும் வேகமும் உடையவர்கள். தங்களது நட்பு எண்களான 3,5,6,9 ஆகிய எண்களில் பிறந்தவர்களை (பிறவி எண், கூட்டு எண்) மணந்து கொண்டால் இவர்களுக்கு ஆனந்தமான திருமண வாழ்க்கை அமையும்.

குழந்தை பாக்கியம் உண்டு. ஆண் குழந்தை நிச்சயம் ஏற்படும். 2,11,20,29,8,17,26 ஆகிய திகதிகளில் பிறந்த பெண்களையும் கூட்டு எண் 2,8 வரும் பெண்களையும் திருமணம் செய்யக்கூடாது. திருமண வாழ்க்கையே கசந்து விடும்.

சில அன்பர்கள் மனைவியின் கொடுமையால் மனைவியை விட்டு ஓடத் துணிந்து விடுவார்கள். திருமண நாளின் எண்கள் 3,6,9,1 ஆகியவை வந்தால் குடும்ப வாழ்க்கை நன்கு அமையும்.

**நண்பர்கள்**

3,6,9 ஆகிய எண்களை உடைய அன்பர்கள் இவர்களுக்கு நல்ல நண்பர்களாகவும் கூட்டாளிகளாகவும் அமைவார்கள்.

முதலாம் திகதி பிறந்தவர்களின் உதவி நடுத்தரமானது தான். 2, 8 ஆம் எண்காரர்களின் நட்பையும் கூட்டையும் தவிர்த்து விட்டால் பல நட்டங்களை எதிர்காலத்தில் தவிர்த்துக் கொள்ளலாம்.

**நோய்கள்**

இவர்களது உடலில் ஏதாவது ஒரு நீண்டகாலப் பிணி இருக்கும். கட்டிகள், குடற்புண்கள், இரத்தம் கெடுதல் ஆகியவைகளால் பாதிப்பும் உண்டு. கூர்மையான ஆயுதங்களைக் கையில் வைத்துக் கொள்ளக் கூடாது.

இந்த எண்காரர்களின் உடம்பில் எப்படியும் சத்திரசிகிச்சைகள்(ஏதாவது ஒரு காரணத்திற்காவது) செய்ய வேண்டிவரும்.

**தொழில்கள்**

இவர்களில் பெரும்பாலோர் பொறியியலாளர்களாகவும், அறுவை சிகிச்சை நிபுணர்களாகவும் இருப்பார்கள். இராணுவம், பொலிஸ், முகாமையாளர் போன்ற அதிகாரப் பதவிகளில் விருப்பம் உடையவர்கள். மேலும் கட்டடம் கட்டுதல், இயந்திரங்கள், வியாபாரம், இரும்புச் பொருட்கள் உற்பத்தி ஆகியவை நல்ல அதிர்ஷ்டம் தரும். சிறந்த அமைச்சர்களாகவும் இராஜதந்திரிகளாகவும் இருப்பார்கள். வான இயல்துறையும் இவர்களுக்கு மிகவும் பிடிக்கும்.

நாட்டிற்காகத் துப்பாக்கி ஏந்தும் வீரர்கள் இவர்கள் தான். அநீதிகளை எதிர்த்துப் போராடுவார்கள். இவர்கள் அரசியலிலும் ஈடுபடலாம்.பலரை வைத்து வேலை வாங்கும் தலைவர்களாக, உயர் அதிகாரியாக, மேஸ்திரியாகப் புகழ் பெறுவார்கள்.

இவர்கள் வீரம் மிகுந்தவர்கள். துப்பறியும் தொழில் ஒத்து வரும். கலைத்தொண்டிலும் உணர்ச்சியைத் தூண்டும் எழுத்திலும் பிரகாசிப்பார்கள். பொதுமக்களுக்காகத்

## தைரியமும் துணிவும் கொண்டவர்கள்

வாத குணம் இயற்கையிலேயே உண்டு. ஆபத்து மிகுந்த தொழிலில் இறங்கி விடுவார்கள். அதில் வெற்றியும் பெறுவார்கள்.

இவர்களின் சண்டைக்குணத்தால் குடும்பத்தில் அடிக்கடி குடும்பப் பிரச்சினைகள் ஏற்படும். தங்களை எல்லோரும் மதிக்க வேண்டும் என எதிர்பார்ப்பார்கள். தாங்கள் உயர்ந்தவர்கள் என்ற நினைப்பு இவர்களுக்கு எப்போதும் உண்டு.

எந்த நிர்வாகத்திலும் தலைமைப் பதவி அல்லது பொறுப்புக்கள் கிடைத்தால் தான் இவர்கள் அவற்றில் மிகவும் தீவிரமாகவும் சிறப்பாகவும் ஈடுபட்டு அந்தக் காரியங்களைச் செய்து முடிப்பார்கள். இல்லை என்றால் அவைகளை அப்படியே விட்டு விட்டு ஒதுங்கி விடுவார்கள்.

பின்பு அந்தக் காரியங்கள் கெட்டழிந்தாலும் கூட அதைப் பற்றிச் சிறிதும் கவலைப்பட மாட்டார்கள்.

அடிக்கடி வாய்வுத் தொந்தரவுகள், வயிற்றுவலி போன்றவை ஏற்படும். இவர்களுக்குப் பல்வலி, பற்களில் பூச்சி விழுதல் போன்றவை ஏற்படும். கால் ஆணித் தொந்தரவுகள், பாதங்களில் வலி, வெடிப்புக்கள் ஆகியவை ஏற்படும்.

மிகவும் உஷ்ண தேகிகளாதலால் இவர்களுக்கு அடிக்கடி மலச்சிக்கலும் மூல வியாதிகளும் வலியும் கண்களில் எரிச்சலும் ஏற்படும்.

பகலைவிட இரவில் உற்சாகமாக இருப்பார்கள். நீண்ட நேரம் இரவில் குழந்தைகளுடன் விளையாடிக் கொண்டோ, பேசிக் கொண்டோ இருப்பார்கள்.

இவர்கள் தினமும் நீரகாரம் பருகி வந்தால் மிகவும் நல்லது. உடல் சூட்டைத் தணிக்க நீராகாரம் சிறந்த பானமாகும்.

நெருப்புக் காயங்கள், விபத்துக்கள் ஆகியவைகளால் உடலில் பாதிப்பும் உண்டு. இரத்தக்

தியாகம் (உண்மையாகச்) செய்ய வல்லவர்கள்.

பிரபல வேட்டைக்காரர்களாகவும் வனவிலங்குகளைத் திறமையாக அடக்கும் தொழிலிலும் நன்கு பிரகாசிப்பார்கள்.

கார் பந்தயம், டெனிஸ், கொக்கி, பட்மின்டன், கரப்பந்தாட்டம், சைக்கிள் பந்தயம் ஆகியவற்றில் ஈடுபாடு கொள்வார்கள். சிறந்த விளையாட்டு வீரர்களாகவும் புகழ் பெறுவார்கள். ரயில், கார், லொறி, ஆகியவை ஓட்டுநர்கள், தீயணைப்புத் துறை, மின்சாரத்துறை ஆகியவற்றிலும் இவர்கள் தொழில் அமையும்.

**செவ்வாய் யந்திரம் செவ்வாய் 21**

| | | |
|---|---|---|
| 8 | 3 | 10 |
| 9 | 7 | 5 |
| 4 | 11 | 6 |

**செவ்வாய் மந்திரம் செவ்வாய் 21**

தரணீ கர்ப்ப ஸம்பூதம்
வத்யுத்காந்தி ஸம்ப்ரம்
குமாரம் சக்தி ஹஸ்தம் ச
மங்களம் ப்ரணமாம்யஹம்

(தொடரும்)

## இலங்கையில் இலத்திரனியல் வாக்களிப்பை நடைமுறைப்படுத்துவது குறித்து ஆராய்வு

## தேர்தல் ஆணையாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையில் நவீன வாக்களிப்பு முறைமை அறிமுகப்படுத்தப் படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. இலத்திரனியல் வாக்களிப்பு முறைமையை அறிமுகப்படுத்துவது குறித்து கவனம் செலுத்தப்பட்டு வருவதாக தேர்தல் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

இலத்திரனியல் வாக்களிப்பு முறைமை அறிமுகம் செய்வதற்கு அநேகமான கட்சிகள் இணக்கத்தை வெளியிட்டுள்ளன. பாரதி எலக்ட்ரோனிக் என்ற இந்திய நிறுவனம் இலத்திரனியல்வாக்கெடுப்புமுறைமை குறித்த பரீட்சார்த்த முயற்சிகளை மேற்கொண்டு வருவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, முன்கூட்டியே வாக்குகளைப் பதிவு செய்யும் திட்டமொன்றும் அறிமுகம் செய்யப்படவுள்ளது. குறிப்பாக சில வகைத் தொழில்களில் ஈடுபடுவோர் தேர்தல் தினத்தில் வாக்களிப்பு நடைமுறைச் சாத்தியமற்றது என சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

இவ்வாறானவர்கள் தேர்தல் தினத்திற்கு முன்னதாகவே தங்களது வாக்குகளை பதிவு செய்யக் கூடிய சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

குறிப்பிட்ட சில துறைகளைச் சார்ந்தவர்கள் மட்டுமே தற்போது தபால் மூலம் முன் கூட்டியே வாக்களிக்க சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது.

மருத்துவர்கள், மீனவர்கள், விமான நிலைய பணியாளர்கள் உள்ளிட்ட பலருக்கு சந்தர்ப்பம் வழங்கும் நோக்கில் புதிய திட்டமொன்று அமுல்படுத்தப்படவுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார். (4-2)

## சம்பந்தன் தலைமையில் யாழில் தேர்தல் பிரசாரம்

(கொழும்பு)

யாழ்.மாவட்ட உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் போட்டியிடும் தமிழரசுக் கட்சியின் வேட்பாளர்களை ஆதரித்து நடைபெறும் தேர்தல் பிரசாரக் கூட்டங்களில் கலந்து கொள்ள தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் இரா.சம்பந்தன் அடுத்த சில தினங்களில் யாழ். குடாநாட்டிற்கு விஜயம் செய்யவுள்ளார்.

தமிழரசுக் கட்சியின் வேட்பாளர்களை ஆதரித்து குடாநாட்டின் பல இடங்களிலும் நடைபெறும் பிரசார பொதுக்கூட்டத்தில் உரையாற்றுவார் என நாடாளுமன்ற உறுப்பினர் விநோநோதராதலிங்கம் தெரிவித்தார். வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களும் உள்ளூராட்சி மன்ற தேர்தல் பிரசாரத்திற்கு யாழ்ப்பாணம் செல்லத்திட்டமிட்டுள்ளனர்.

அதேநேரத்தில் 'தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான வீ.ஆனந்தசங்கரி, கிளிநொச்சியில் நடைபெறவுள்ள தேர்தல் பிரசாரக் கூட்டங்களில் கலந்து கொள்ளவுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி வேட்பாளர்களை ஆதரித்து குடாநாட்டில் பரவலாக பிரசாரங்கள் நடைபெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (எ-8)

## துணி உற்பத்திப் பொருள் உருவாக்கல் பயிற்சி

(யாழ்ப்பாணம்)

துணிகளிலிருந்து பெறுமதி சேர்க்கப்பட்ட உற்பத்தில் பொருட்கள் உருவாக்கல் பயிற்சிநெறி பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சின் ஏற்பாட்டில் கைத்தொழில் அபிவிருத்திச் சபையினால் யாழ்ப்பாணத்தில் நடத்தப்படவுள்ளது.

இப்பயிற்சி நெறிக்கு பயிற்சியின் பின்னர் தொழில் முயற்சியை ஆரம்பிக்கக் கூடியவர்களே இணைத்துக் கொள்ளப்படுவர்.

எனவே, இப்பயிற்சி நெறியில் கலந்து கொள்ள விரும்புபவர்கள் கைத்தொழில் அபிவிருத்தி சபை, மாவட்ட அலுவலகம், யாழ்ப்பாணத்திற்குச் சென்று எதிர்வரும் 12 ஆம் திகதிக்கு முன் பதிவுகளை மேற்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றார்கள்.

மேலதிக விபரங்களை 021 22 22421 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ளாம் என கைத்தொழில் அபிவிருத்திச்சபையின் பிரதிப் பணிப்பாளர் சி.சிவகெங்காதரன் அறிவித்துள்ளார். (எ)

## கிளிநொச்சி மக்களின் வாழ்க்கை தரத்தை மதிப்பிடும் பணிகள்

கிளிநொச்சி மாவட்டத்தில் வாழ்க்கைத் தரத்தை மதிப்பிடும் நடவடிக்கைகள் ஆரம்பமாகியுள்ளன. போருக்குப் பின்னர் வடக்கின் சமூக மற்றும் மக்களின் வாழ்க்கைத்தர நிலைமைகளை மதிப்பிடும் பொருட்டு இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

கிளிநொச்சி மாவட்ட செயலகத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்டு வரும் இந்த மதிப்பீட்டு நடவடிக்கையில் ஆசிரியர்கள் உட்பட அரசாங்க உத்தியோகத்தர்கள் ஈடுபடுத்தப் பட்டுள்ளனர். வீடுவீடாகச் சென்று தரவுகளைச் சேகரித்து வரும் இவர்கள் காணமாற் போனோர், உள்நாட்டில் இடம் பெயர்ந்தவர்கள், புலம் பெயர்ந்தோர், இறந்தவர்கள், அங்கவீனர்கள் தொடர்பான பல விபரங்கள் சேகரிக்கப்படுகின்றன. (4-2)

## இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

2011.07 09

★455-அவிட்டஸ் மேற்கு ரோமப் பேரரசின் மன்னனானான்.

★1357-புனித ரோமப் பேரரசர் நான்காம் சார்ள்ஸ் பிராகா நகரத்தில் சார்ள்ஸ் பாலத்திற்கு அடித்தளம் நாட்டினார்.

★1755-பென்சில்வேனியாவில் பிரெஞ்சு மற்றும் குடியேற்ற துணை இராணுவக் குழு பிரித்தானியப் படைகளைத் தோற்கடித்தனர்.

★1790-பால்ட்டிக் கடலில் இடம்பெற்ற மோதலில் சுவீடனின் கடற்படையினர் ரஷ்யக் கப்பல்களை பெரும் எண்ணிக்கையில் கைப்பற்றினர்.

★1810-ஒல்லாந்து நாட்டை நெப்போலியன் தனது பிரெஞ்சு இராச்சியத்துடன் இணைத்துக் கொண்டான்.

★1816-ஆர்ஜெண்டீனா ஸ்பெயினிடம் இருந்து விடுதலையை அறிவித்தது.

★1863-அமெரிக்க உள்நாட்டுப் போர்: ஹட்சன் துறைடுமுகம் மீதான தாக்குதல் முடிவுக்கு வந்தது.

★1868-அனைத்து ஆபிரிக்க அமெரிக்கர்களுக்கும் முழுக் குடியுரிமை வழங்கும் சட்டமூலம் ஐக்கிய அமெரிக்காவில் நிறைவேற்றப்பட்டது.

★1900-அவுஸ்திரேலிய கண்டத்தில் தனித் தனியே குடியேற்ற நாடுகளாக இருந்த மாநிலங்கள் அவுஸ்திரேலியப் பொதுநலவாயத்தின் கீழ் ஒன்றிணைக்க விக்டோரியா மகாராணி ஒப்புதல் அளித்தார்.

★1903-யாழ்ப்பாணத்தில் இந்து வாலிபர் அமைப்பு YMHA உருவாக்கப் பட்டது.

★1918-டென்னசியில் நாஷ்வில் என்ற இடத்தில் இரண்டு தொடருந்துகள் மோதிக் கொண்டதில் 101 பேர் கொல்லப்பட்டு 171 பேர் படுகாயமடைந்தனர்.

★1943-இரண்டாம் உலகப் போர்: நேச நாடுகள் சிசிலி மீதான தாக்குதலை ஆரம்பித்தனர்.

★1948-பாகிஸ்தான் தனது முதலாவது அஞ்சல் தலையை வெளியிட்டது.

★1982-ஐக்கிய அமெரிக்க போயிங் விமானம் லூசியானாவில் வீழ்ந்ததில் அதில் பயணஞ் செய்த 146 பேரும் தரையில் இரு ந்த 8 பேரும் கொல்லப்பட் டனர்.

★1991-30 ஆண்டுகளின் பின்னர் தென்னாபிரிக்கா ஒலிம்பிக் விளையாட்டுக்களில் மீண்டும் சேர்த்துக் கொள்ளப் பட்டது.

★1995-யாழ்ப்பாணத்தில் நவாலி பேதுருவானவர் தேவாலயம் மீது நடத்தப்பட்ட குண்டுத் தாக்குதலில் குழந்தைகள், பெண்கள் உட்பட 141 பொதுமக்கள் கொல்லப்பட்டனர்.

★2002-ஆபிரிக்க ஒன்றியம் அடிஸ் அபாபாவில் அமைக்கப்பட்டது. தென்னாபிரிக்க ஜனாதிபதி தாபோ உம் பெக்கி இவ்வமைப்பின் முதலாவது தலைவரானார்.

★2006-சைபீரியாவில் 200 பேரை ஏற்றிச் சென்ற பயணிகள் விமானம் ஒன்று வீழ்ந்ததில் 122 பேர் கொல்லப் பட்டனர்.

★2006-உலகக் கிண்ணக் காற்பந்துப் போட்டியின் இறுதி ஆட்டத்தில் இத்தாலி பிரான்சை வென்று நான்காவது தடவையாக உலகக் கிண்ணத்தை தனதாக்கிக் கொண்டது.

★2006-அக்னி-III ஏவுகணை ஒரிசாவில் சோதிக்கப் பட்டது. அதன் இரண்டாவது அடுக்கு இயங்க மறுத்தமையால் குறுகிய தூரத்தையே சென்றடைந்தது.

### பிறப்புக்கள்

★1930-ஏ.எம்.ராஜா, பின்னணிப் பாடகர் (இ.1989)

★1930-கே.பாலச்சந்தர், தமிழ் திரைப்பட இயக்குநர்

★1956-டொம் ஹாங்க்ஸ், அமெரிக்க ஹொலிவுட் நடிகர்

### இறப்பு

★2009- சி.ஆர்.கண்ணன், தமிழக எழுத்தாளர்

### சிறப்புநாள்

★ஆர்ஜெண்டீனா- சுதந்திரதினம் (1816)

# கொஞ்சம் அமுதம் கொஞ்சம் விஷம்

**ஆன்மீகம் 44**

"கிராமத்தில் இருப்பவர்கள் எல்லாம் நகரத்துக்கு வந்து விட்டதால், நகரத்தில் மூச்சு முட்டுகிறது. இருக்க இடம் போதவில்லை. குடிக்கத் தண்ணீர் போதவில்லை. தங்கள் முன்னோர்கள் போல், இன்றைய இளைஞர்கள் சேற்றில் இறங்கத் தயங்குவதால் தானே இந்தத் தடுமாற்றம்?"

நம் நாட்டில் கிராமம் என்றாலே விவசாயம் மட்டும்தான் என்று அங்கு உள்ளவர்கள் பார்வையைக் குறுக்கிக் கொண்டு விட்டார்கள். மழை பொய்த்தால், அவர்கள் வாழ்க்கை சிதைந்து போகிறது. விவசாயத்துக்கு உகந்த நேரம் இல்லாத போது, செய்வதறியாது மனிதர்கள் சோம்பித்திரிகிறார்கள்.

தங்களுக்குத் தேவையான உணவைப் பயிர் செய்தே பழகிய மக்கள், இன்னமும் விவசாயத்தைப் பொருளாதார ரீதியில் பெரிய அளவில் கொண்டு செல்லத் தெரியாமல் இருக்கிறார்கள்.

ஆனால், நகரத்திலோ மூட்டை தூக்கலாம்; வாகனம் ஓட்டலாம்; உணவு விற்கலாம். இன்னும் ஆயிரம் விதமான வேலைகள் இருக்கின்றன. நூறு விதமான வாய்ப்புகள் இருக்கின்றன. ஏதாவதொன்று வயிற்றுப் பிழைப்புக்கு உதவும் என்று நம்பி, மக்கள் நகரத்துக்கு இடம்பெயர்கிறார்கள். அவர்கள் கண்ணோட்டத்தில் பார்த்தால், அதில் தவறில்லை.

"எல்லோரும் வெள்ளைக்காரர் வேலைக்கு வந்தால், கிராமங்கள் செத்து விடாதா?"

கிராமங்கள் எல்லாம் நகரங்களுக்கு இடம் பெயர்ந்தால், நகரங்கள் செத்து விடும் .இதற்குப் பதிலாக நகரங்கள் கிராமங்களுக்கு நகர வேண்டும். நாட்டின் ஜனத்தொகையில் 60சதவிகிதம்பேர் கிராமத்தில் இருக்கிறார்கள். அதாவது, 100பேர் சாப்பிடுவதற்கு 60 பேர் சமைக்கிறார்கள். இது முட்டாள்தனமான விகிதாசாரம், ஜனத்தொகையில், அதிக பட்சம் 20 பேர் விவசாயத்தில் ஈடுபட்டால்போதும். அநியாயத்திற்கு இங்கே மனிதத்திறன் வீணடிக்கப்படுகிறது.

நகரத்தில் பெரிய பதவியில் இருந்த தொழிலதிபர் ஒருவருக்கு ரத்த அழுத்தம் எகிறி, மயங்கி விழுந்தார். அவரைச் சில மாதங்கள் ஓய்வு எடுக்கச்சொல்லி, கிராமத்துக்கு அனுப்பினார் மருத்துவர்.

அங்கே சும்மா உட்கார்ந்து இருக்கப்பிடிக்காமல், அதிபர் ஏதாவது வேலை செய்ய விரும்பினார். ஆனால், இத்தனை நாட்களாகக் குளிரூட்டப்பட்ட அலுவலகத்தில் உட்கார்ந்து வேலை செய்தவருக்கு இங்கே என்ன வேலை கொடுப்பது என்று விவசாயிகளுக்குப் புரியவில்லை.

"கிணற்றிலிருந்து நீர்இறைத்து தொட்டிகளில் நிரப்புங்கள்" என்றார். மாலையில் ஒன்றிரண்டு தொட்டிகள்தான் நிரப்பப்பட்டு இருக்கும் என்று நினைத்துக் கொண்டு வந்தார் விவசாயி. என்ன ஆச்சர்யம்! எல்லாத் தொட்டிகளிலும் தண்ணீர் நிரப்பப்பட்டு இருந்தது.

## கிராமத்தை நகரமாக்க வேண்டும்

மறு நாள், கோழிப்பண்ணையில் இருந்த கோழிகளின் தலையை வெட்டச் சொல்லி விட்டுப்போனார் விவசாயி.

நான்கைந்து நாட்களுக்கு வேலை கொடுத்தாயிற்று என்று நினைத்தால், மாலைக்குள் அந்த வேலையையும் முடித்துவிட்டார், தொழிலதிபர்.

மூன்றாவது நாள் விவசாயி உருளைக் கிழங்குகளைக் கொண்டு வந்து குவித்தார். "இதில் சின்னது, நடுத்தரம், பெரியது என்று மூன்று அளவாகப் பிரித்து வையுங்கள்" என்று சொல்லி விட்டுப்போனார்.

மாலையில் விவசாயி வந்து பார்த்தால் , குவித்து வைத்த உருளைக்கிழங்குகளைப் பிரிக்காமல், தொழிலதிபர் வெறித்துக் கொண்டு இருந்தார்.

"கடினமான வேலைகளையெல்லாம் சுலபமாகச் செய்து முடித்தீர்கள். இந்த எளிதான வேலையைச் செய்வதில் தடுமாற்றம் ஏன் ? "என்று விவசாயி கேட்டார்.

"இங்கிருப்பதை அங்கு மாற்றுவது, தலைகளை சாய்ப்பது என்று வாழ்நாள் எல்லாம் செய்து பழகியவன் நான். ஆனால் முடிவுகள் எடுக்கச் சொல்லித் தனியாக விட்டுப் போனால், என்ன செய்வேன்?" என்றார் அதிபர்.

உண்மைதான். நகரத்தில் இருப்பவர்கள் அத்தனை பேரும் அதீத திறமைசாலிகள் இல்லை. அவர்களைவிட கிராமத்தில் இருப்பவர்கள் எந்த விதத்திலும் திறனில் குறைந்தவர்களும் இல்லை. அவர்களுக்கு சரியான வாய்ப்புகள் வழங்கப்படாதது தான் குறைபாடு.

இன்றைக்கும் இந்தியப்பொருளாதாரம் நகரங்களின் ஆதரவையே சார்ந்து இருக்கிறது. இது மிகவும் குறுகலான மேடையில் நிற்பது போன்று ஆபத்தானது. நகரத்தில் உள்ள மிகச் சிறிய அளவு ஜனத்தொகையைக் கொண்டு பொருளாதார ரீதியாகவோ, தொழில்துறை ரீதியாகவோ பெரும் புரட்சிகள் செய்துவிட முடியாது. இந்தியாவுக்குப் பரந்த பொருளாதார மேடை அமைக்க வேண்டும் என்றால் தொழில்,வாணிபம் இரண்டும் நகரத்திலேயே தேங்கிவிடாமல், கிராமங்களுக்கு இடம் பெயரவேண்டும்.பொருளாதார ரீதியாகவும் விவசாயத்தை இலாபமுள்ள தொழிலாக மாற்றவேண்டும். அதேசமயம் , கிராமத்தில் விவசாயத்தை தவிர, மற்ற நடவடிக்கைகளும் மும்முரமாக்கப்படவேண்டும். மக்கள் இடம் பெயர்வதை நிறுத்த, நகரத்து நடவடிக்கைகள் கிராமங்களுக்கு இடம் பெயர்வது ஆதரிக்கப்படவேண்டும். அங்குள்ள இளைஞர்கள் நகரத்துக்கு வராமலேயே அதன் அனுகூலங்களை அனுபவிக்க வேண்டும்.

முதலில், நல்ல கல்விச்சாலைகள் நகரங்களோடு நின்றுவிடாமல், கிராமங்களில் நிறுவப்பட வேண்டும். கிராமத்தின் அடிப்படைக் குணங்களைக் குலைத்துவிடாமல் , அங்கு நகரத்தின் வசதிகள் கிடைக்க வழி செய்ய வேண்டும்.

பெரிய பெரிய நிறுவனங்கள்,கிராமங்களில் வணிக வளாகங்கள் நிறுவ வேண்டும். கிராமத்தில் விளைவதைக் கொள்முதல் செய்வதற்கும் ஏற்ற வசதிகள் செய்து தரவேண்டும். விஞ்ஞான பூர்வமாக விவசாயத்தை அணுகக்கற்றுக் கொடுக்கும் நிபுணர்களின் சேவைகள் கிராமங்களுக்கு கிடைக்க வேண்டும். கிராமத்துக்கு ஒரு மையம் அமைக்க வேண்டும். அங்கு விவசாயக் கருவிகள் , விவசாயப் பொருட்கள் விற்பனை செய்யும் அங்காடிகள், தவிர... கேளிக்கை அரங்கங்கள் போன்றவையும் நிறுவப்பட வேண்டும்.

ஜனத்தொகையில் 60சதவிகிதம் விவசாயிகள் என்பது 30 எனக் குறைக்கப்பட்டு, அடுத்த கட்டத்தில் 15ஆகக்குறைக்கப்பட்டால் தான் நல்லது கிராமங்களில் புத்துணர்ச்சி கொண்டு வரும் நோக்கத்தோடு தான். ஈஷாவின் கிராமப் புத்துணர்ச்சி இயக்கம் தொடங்கப்பட்டு, இன்று தமிழ் நாட்டில் பல கிராமங்களுக்குப் பரவியிருக்கின்றது.

கிராமமக்கள் நமக்கு அமுதமான உணவைக் கொடுத்து வருகிறார்கள். அவர்களுக்கு நகரத்து அமுத்தத்தை நாம் கொடுக்க வேண்டாமா?

**சத்குரு ஜக்கி வாசு தேவ்**

---

# எமக்கான தனித்துவம் தேடும் காலம் உருவாக வேண்டும் 02

இரண்டாவது, எந்த மொழியில் அறிவுசார் விடயங்கள் இல்லையோ அந்த மொழி கற்றவர்கள் மத்தியில் கௌரவம் வளராது. ஒரு மொழியில் விஞ்ஞானம், பொருளாதாரம்,தொழில்நுட்பம் போன்ற அறிவுசார் விடயங்கள் படிக்க முடியாத போது அந்த மொழி இந்தத்துறைசார்ந்த வர்க்கத்தினரிடம் தாய்மொழியாக இருந்தாலும் சென்றடையாது. இதைவிட சமூகத்தில் பொருளாதாரத்தில் மேல் மட்டத்தில் உள்ளவர்கள் ஆங்கிலத்தை பிரதானமாக படித்தால் அவர்களுக்கு தாய்மொழி சிறந்த தேர்ச்சி இல்லாமல் போய்விடுகிறது. இப்படி சமூகத்தில் அறிவு கூர்ந்தவர்களையும் படித்த மட்டத்தவர்களையும் இழந்து விட்டபடியால் இந்த மொழியால் காத்திரமான இலக்கியமும் படைக்க முடியாது போய்விடலாம். இப்படியான சமூகத்தில் பேசப்படும் மொழி ஏழ்மையடைந்து விடுகிறது. ஏழைத் தாயாக கந்தலுடன் வலம் வருகிறது. பண்டைக் காலத்தின் பின் ஜப்பானை தவிர்ந்த பல ஆசிய மொழிகளில் சிறந்த இலக்கியங்கள் வராமல் இருப்பதற்கு இதுவே காரணம்.

எனது தாய்மொழியான தமிழில் இந்த வறுமை தெட்டத்தெளிவாகத் தெரிகிறது. தமழ் நாட்டிலும் இலங்கையிலும் இருந்த காலணி கல்வி முறையில் தொழில்நுட்பம், மருத்துவம், சட்டம், பொருளாதாரம் படித்தவர்கள்தான் கற்றவர்களாகக் கருதப்படுவார்கள். இவர்கள் இந்தக் கற்கை நெறி மூலம் பல்கலைக்கழகம் செல்லவும், பின்பு சமுகத்தில் நல்ல உத்தியோகம் பார்க்கவும் சந்தர்ப்ங்கள் ஏற்பட்டது. இதனால் இவர்களது சிந்தனையில் ஆங்கிலம் செல்வத்தைத் தேடுவதற்கான ஒரு மொழியாகக் கருதப்படுகிறது. இவர்களால் தமிழ் புறக்கணிக்கப்படுகிறது. வசதி குறைந்தவர்களும் பாமரர்களும் மட்டும் பேசும் மொழியாக தாய் மொழி மாற்றப்பட்டது. இந்த நிலையில் எமது தாய்மொழி படித்த வர்களாலும் அறிவாளிகளாலும் புறக்கணிக்கப்பட்டு அரசியல்வாதிகளின் கைகளில் சிக்கிவிடுகிறது. ஜனநாயக மக்கள் ஆட்சியில் பாமரர் கள் பெருமளவில் இருப்பார்கள். இதனால் அவர்கள் பேசும் மொழியில் அவர்களுக்குப் புரியும் வகையில் உணர்வு களைத் தூண்டும் கோசங்கள் இந்த அரசியல் வாதிகளால் உருவாக்கப்படுகின்றது.

**"கொழும்பில் நடைபெற்ற சர்வதேச தமிழ் எழுத்தாளர் மாநாட்டில் சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வுக்கட்டுரை"**

வார்த்தைகள் காலங்காலமாக உணர்வுகளை உருவாக்கும் என்பது வரலாறு காட்டும் பாடம் காதல், காமம்,பாசம்,கோபம் என்ற அடிப்படை உணர்வுகளை மற்றவர்களுக்கு உணர்த்த உருவாக்கிய கருவியான மொழி மற்ற இனத்தவர்களின் மீது வெறுப்புக்களை வளர்ப்பதற்கான கருவியாக உருவாக்கப்படுகிறது.

இந்தியாவில் திராவிட இயக்கத்தினர் இதை அழகாகச் செய்தனர். சங்ககால இலக்கியத்தின் செழுமையைப் பேசிக்கொண்டு தமிழை ஆங்கில மொழி ஆதிக்கத்தில் இருந்து மீட்டு எடுப்பதைச் செய்யாமல் சகோதர மொழியான ஹிந்திக்கெதிராக வெறுப்பினைப் பாமர மக்கள் மத்தியில் வளர்த்தார்கள். இவர்கள் இப்படிச்செய்ததன் நோக்கம் அரசியல் அதிகாரத்தைப்பெறுவதற்கான ஒரு வழிமுறையாக இருந்தது. அரை நூற்றாண்டுகாலமாக அரசுக் கட்டிலில் இருந்தும் இன்று வரை இவர்கள் தமிழ் நாட்டில் ஆரம்பக் கல்வியை தமிழில் சகலருக்கும் கட்டாய பாடமாக்கவில்லை. இவர்கள் செய்த தமிழ்த்தொண்டு- எப்படி ஒரு தெருச்சண்டியனுக்கு தூஷண வார்த்தைகள் அல்லது கையிலிருக்கும் மரக்கட்டை சதாரண அப்பாவிகளை பயமுறுத்த பயன்படுமோ அதே அளவு இவர்களுக்கும் அரசியல் அதிகாரத்தை கையில் எடுக்கப்பயன்பட்டது. இது அங்குள்ள நிலை எனில் எம்நாட்டில் முக்கியமாக இலங்கை அரசாங்கத்தின் தாய்மொழிக் கல்வியால் எம்போன்றவர்கள் பன்னிரண்டாம் வகுப்பு வரையும் விஞ்ஞானம், பொருளாதாரம், தொழில் நுட்பம் ஆகியவற்றை தாய்மொழியில் கற்கக்கூடிய நிலைமை இருந்தது. பல்கலைக் கழகத்திலும் முதல் இரண்டு வருடங்கள் தமிழில் மருத்துவம், பல்வைத்தியம், மிருக வைத்தியம் கற்கும் நிலைமை இருந்தது. இந் நிலைமைக்கு தமிழகத்தமிழர்கள் எக்காலத்திலும் வருவார்களா என்பது கேள்விக்குறி.

**நடேசன்-அவுஸ்திரேலியா**

*(தொடரும்)*

# தமிழர்களின் காவலர் என்ற அடையாளத்தை ஜெயலலிதாவிடம் ஒப்படைத்தார் கருணாநிதி

வன்னியில் இடம்பெற்ற இறுதிக் கட்டப்போரின் போது காத்திரமான நடவடிக்கைகள் எதனையும் மேற்கொள்ளாதிருந்த தி.மு.க.வின் தலைவர் கருணாநிதி தனது முதலமைச்சர் பதவியுடன் தமிழர்களின் காவலர் என்ற தனது அடையாளச் சின்னத்தையும் அ.தி.மு.க.வின் பொதுச் செயலாளரான ஜெயலலிதாவிடம் ஒப்படைத்துள்ளார் என இந்திய ஊடகம் ஒன்று சுட்டிக்காட்டியுள்ளது.

இந்தியாவில் இருந்து வெளிவரும் அவுட்லுக் சஞ்சிகையின் இம் மாதப் பதிப்பில், ஈழத்தமிழ் மக்களை கருணாநிதி கைவிட்டுவிட்டார் என்ற பரவலான கருத்தை ஜெயலலிதா மூலதனமாக்கிக் கொண்டிருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இச் செய்திக் கட்டுரையில் தெரிவிக்கப் பட்டுள்ள முக்கியமான விடயங்களை இங்கே தொகுத்துத் தருகின்றோம்.

தமிழ் மக்களின் காவலர் என தமிழகத்தின் முன்னாள் முதலமைச்சரும் தி.மு.க.வின் தலைவருமான கருணாநிதி சுயமாக வரித்துக் கொண்ட அடையாளமானது ஈழத்தமிழ் மக்களின் உரிமைகளுக்காக போராட்டத்தை நடத்துகின்றவர்கள் மத்தியில் நீண்டகால அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்ளவில்லை.

கருணாநிதி சொல்லில் மட்டுமே தமிழை நேசிக்கிறார் எனவும், செயலில் அல்ல என்ற விமர்சனங்கள் அவர் மீது சுமத்தப்பட்டுள்ளன. அத்துடன், தமிழ் மக்களின் உரிமைப் போராட்டத்திற்கு கருணாநிதி துரோகம் இழைத்துவிட்டதாகவும் கடுமையான விமர்சனங்கள் எழுந்துள்ளன.

இலங்கையில் போர் உச்சக்கட்டத்தை அடைந்திருந்த வேளையில் கருணாநிதியின் ஆட்சிக் காலத்தில் திரைப்பட இயக்குநர் சீமான் பல தடவைகள் கைது செய்யப்பட்டு, அவர் மீது தேசத்துரோகக் குற்றச்சாட்டுகளும் சுமத்தப்பட்டிருந்தன. ஜெயலலிதாவை காவல் தெய்வமாக அவர் வர்ணித்ததாக கூறப்படுகின்றது.

அதேபோன்று, விடுதலைப் புலிகளுக்காகவும் உலகளாவிய ரீதியில் தமிழ் மக்களுக்காகவும் குரல் கொடுத்து வருகின்ற விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் தலைவர் தொல் திருமாவளவன் ஜெயலலிதாவின் தீர்மானத்திற்கு ஆதரவு தெரிவித்துள் ளார். இலங்கையில் போர்



முடிவுக்கு வந்த பின்னர் அங்கு சென்றிருந்த தி.மு.க. தலைமையிலான நாடாளுமன்ற உறுப்பினர்களைக் கொண்ட தூதுக்குழுவில் திருமாவளவனும் இடம்பெற்றிருந்தார்.

ஜெயலலிதாவின் அணுகுமுறையில் கைகளை சர்வதேச நாடுகள் பல கண்டித்ததைப் போன்று இந்தியா கண்டிக்கவில்லை. மத்திய அரசின் வெளிவிவகாரக் கொள்கையில் மாற்றம் ஏற்படவில்லை என்பதையே இது வெளிப்படுத்துகின்றது. மத்திய அரசின் வெளிவிவகாரக் கொள்கையில் மாற்றம் ஏற்படாத வரை எதனையும் செய்ய முடியாது என ரவிகுமார் கூறியுள்ளார்.

1979ஆம் ஆண்டில் தமிழ்த தேசிய இயக்கத்தை நிறுவிய பழ.நெடுமாறன் முன்னாள் முதலமைச்சர் கருணாநிதியை கடுமையாக விமர்சித்துள்ளார். தமிழ் மக்களின் காவலர் எனத் தன்னைத்தானே அழைப்பதற்கு கருணாநிதிக்கு எந்த உரிமையும் கிடையாது என அவர் கூறியுள்ளார்.

தமிழகத்தின் முதலமைச்சராக ஆறு தடவைகள் பதவி வகித்த கருணாநிதி தமிழ் மக்களின் கவனத்தை திசை திருப்புவதற்காக உலகத் தமிழ் செம்மொழி மாநாட்டை நடத்தியதைவிட அவர் தமிழ் மக்களுக்காக என்ன செய்துள்ளார் புலம்பெயர்ந்த தமிழ் அமைப்புக்கள் கடிதங்கள் அனுப்பியுள்ளன.

முதலமைச்சர் ஜெயலலிதாவுக்கு நன்றி தெரிவிக்கும் முகமாக இராமேஸ்வரத்தில் பாரிய பேரணியை நடத்தப் போவதாக இந்து மக்கள் கட்சியின் தலைவர் அர்ஜுன் சம்பத் கூறியுள்ளார்.

பெரியார் திராவிடக் கழகமும், மனிதநேய மக்கள் கட்சியும் தமிழர்களின் இரட்சகர் என்ற பட்டத்தை ஜெயலலிதாவுக்கு வழங்குவதில் ஆர்வமாக உள்ளனர்.

ஜெயலலிதாவின் நிர்வாகம் மற்றும் துணிச்சலான தீர்மானங்களுக்கு இதுவரை காலமும் பாராட்டுக்கள் தெரிவிக்கப்பட்டனவே ஒழிய, தமிழ் மக்களின் உரிமைகளுக்கான காவலராக அவர் பாராட்டப்பட்டிருக்கவில்லை.


இலங்கை அரசாங்கத்திற்கு எதிராக தமிழக சட்டசபையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டதைத் தொடர்ந்து அவருக்கு பாராட்டுகள் குவிந்து கொண்டிருந்தபோதிலும், சிலர் அதற்கு எதிராக கருத்துகளையும் முன்வைக்கின்றனர்.

கருணாநிதியிலும் பார்க்க மேலெழுந்து வர விரும்பும் ஜெயலலிதாவின் சர்வாதிகார போக்குகளால் ஏற்படும் விளைவுகள் மோசமானதாக இருக்கும் என ஒருவர் கூறுகிறார். தமிழ் மக்களின் பிரச்சினையானது சகல அரசியல் கட்சிகளுக்கும் பொதுவான விடயமாகும். தமிழ் மக்களின் விவகாரங்கள் தொடர்பில் கருணாநிதி உரிமை கோரும் விடயங்கள் குறித்து இடது மற்றும் தமிழ்த் தேசியவாதிகள் கேள்வி எழுப்பியுள்ளனர்.

தமிழ் மக்களின் காவலர் என தன்னைத் தானே கூறுவதில் இருந்து விடுபடுவதற்கு கருணாநிதி எவருக்கும் ஒருபோதும் இடமளித்ததில்லை என சுட்டிக்காட்டப்படுகிறது.

இந்நிலையில், தமிழ் மக்களின்

## ஈழத்தமிழர் போராட்டத்திற்கு துரோகமிழைத்த தி.மு.க.



அவர் மேற்கொண்ட நடவடிக்கைகள் அவரை ஒரு சந்தர்ப்பவாதியாக வெளிப்படுத்தியுள்ளதுடன் அதிகாரத்தை தக்கவைத்துக் கொள்வதற்காக ஈழத்தமிழ் மக்களின் உரிமைப் போராட்டத்தை விற்றுவிட்டார் என்ற அதிருப்திகளையும் அச்சமயம் ஏற்படுத்தியிருந்தன.

ஆனால், அவர் தனது முதலமைச்சர் பதவியை மட்டுமல்ல தமிழ் மக்களின் காவலர் என்ற தனது அடையாளச் சின்னத்தையும் ஜெயலலிதாவிடம் ஒப்படைத்துள்ளார். இலங்கைக்கு எதிராக பொருளாதாரத் தடைகளை விதிக்க வேண்டும் என தமிழக சட்டசபையில் கடந்த மாதம் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தைத் தொடர்ந்து, தமிழ் மக்களின் காவலர் என்ற பட்டம் ஜெயலலிதாவின் கரங்களுக்கு மாறியுள்ளது.

சில மாற்றங்கள் காணப்படுவதாகவும், உறுதியான தீர்மானங்களை அவர் மேற்கொண்டு வருவதாகவும் விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் முன்னாள் சட்டமன்ற உறுப்பினரும், எழுத்தாளருமான ரவிக்குமார் கூறியுள்ளார். ஆனால், இந்தத் தீர்மானமானது வெறுமனே அடையாளத்தைப் பெற்றுக் கொள்வதற்கான பெறுமானமாக இருப்பதாக அவர் கருதுகின்றார்.

ஏனெனில், மாநில அரசுகள் வெளிநாட்டுக் கொள்கை தொடர்பில் எவ்வித முடிவுகளையும் மேற்கொள்ள முடியாது என அவர் கூறியுள்ளார். இலங்கை விவகாரம் தொடர்பில் தமிழக சட்டசபையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் குறித்து மத்திய அரசு என்ன செய்யப் போகிறது என்பதே முக்கியமானதாகும் என அவர் கூறுகிறார்.

இலங்கை அரசாங்கத்தின் நடவடிக் என நெடுமாறன் கேள்வி எழுப்புகின்றார்.

இந்நிலையில், தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா இலங்கை அரசாங்கத்திற்கு எதிராக தமிழக சட்டசபையில் தீர்மானத்தை நிறைவேற்றியுள்ளார். அதன் பின்னர் பிரதமர் மன்மோகன் சிங்கைச் சந்தித்து இத்தீர்மானங்கள் குறித்து வலியுறுத்தியுள்ளார்.

புலம்பெயர்ந்த தமிழ் மக்கள் தற்போது கருணாநிதி மீது நல்லெண்ணம் கொண்டவர்களாக இல்லை. அவர்கள் முதலமைச்சர் ஜெயலலிதாவின் இத்தீர்மானமானது தமது உள வலுவை மேலோங்கச் செய்துள்ளதாக அவர்கள் ஜெயலலிதாவைப் பாராட்டுகின்றனர். அவருக்கு நன்றி தெரிவித்து

புதிய காவலராக ஜெயலலிதா உண்மையில் தோற்றம் பெற்றுள்ளாரா? அல்லது கருணாநிதி மீது தமிழ் மக்கள் கோபத்துடன் இருக்கின்றார்கள் என்பதற்காக மட்டுமே ஜெயலலிதா இந்தப் புதிய அடையாளத்தைப் பெற்றிருக்கின்றாரா?

கருணாநிதி மீதான தமிழ் மக்களின் கோபத்தை ஜெயலலிதா தனக்கு மூலதனமாக்கி உள்ளதாக எழுத்தாளரும், பேராசிரியருமான கலாநிதி வெங்கடாசலபதி கூறுகிறார். என அவுட்லுக் சஞ்சிகை தெரிவித்திருக்கிறது.

## இலங்கை அரசாங்கம்

# தேசிய இனப்பிரச்சினைக்குத் தீர்வாக சமஷ்டி ஆட்சி முறையை வழங்காது



### அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவிப்பு

இலங்கையில் சமஷ்டி ஆட்சி முறைமைக்கு இடமில்லை என அரசாங்கம் திட்டவட்டமாக அறிவித்துள்ளது. அரசியல் தீர்வுத் திட்டம் தொடர்பில் தமிழத் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் நாடாளுமன்றில் தெரிவித்த கருத்துக்கு அவைத் தலைவர் என்ற ரீதியில் அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா பதலளித்துள்ளார்.


தேசிய இனப்பிரச்சினைக்கான தீர்வுத் திட்டமாக சமஷ்டி ஆட்சி முறைமையை அரசாங்கம் ஒருபோதும் முன்வைக்காது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

நாட்டின் சகல இன மக்களினாலும் ஏற்றுக் கொள்ளக் கூடிய தீர்வுத் திட்டம் ஒன்றையே அரசாங்கம் முன்வைக்கும் என அவர் குறிப்பிட்டுள்ளார். பொறுப்பு வாய்ந்த அரசாங்கம் என்ற ரீதியில் இனங்களுக்கு இடையில் பிளவு ஏற்படக் கூடிய தீர்வுத் திட்டம் முன்வைக்கப்பட மாட்டாது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

துரித கதியில் தீர்வுத் திட்டமொன்றை முன்வைக்கும் திட்டம் அரசாங்கத்திற்குக் கிடையாது என அவர் தெரிவித்துள்ளார். தமிழ் மக்களை சிங்களவர்கள் துன்புறுத்துவதாக சுமத்தப்படும் குற்றச்சாட்டுக்கள் அடிப்படையற்றவை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். வடக்கை விடவும் அதிகளவான தமிழர்கள் தெற்கில் அமைதியான முறையில் வாழ்ந்து வருவதாகவும் வடக்கு மக்களுடன் இராணுவத்தினர் ஒரே உணவுத் தட்டில் உணவு உட்கொள்வதாகவும் குறிப்பிட்டுள்ளார். (4-2)

# யுத்தத்திற்காக செலவு செய்த பணத்தை மக்களின் சேவைக்கும் பயன்படுத்த வேண்டும்

### சஜித் பிரேமதாச தெரிவிப்பு



(கொழும்பு)

யுத்தத்திற்காக செலவு செய்த பணத்தை இன்று மக்களின் நலன்புரி சேவைக்காக பயன்படுத்த வேண்டியது அரசாங்கத்தின் பொறுப்பாகும் என ஐக்கிய தேசிய கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சஜித் பிரேமதாச குறிப்பிடுகின்றார்.

சசூரண அருண செயற்றிட்டத்தின் கீழ் இம்புல் நிவுன் ஹெல்ல பகுதியில் நடைபெற்ற வைபவமொன்றில் உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

யுத்தத்திற்கு கடந்த காலங்களில் ஒதுக்கிய பணத்தை தற்போது மக்களை வாழ வைப்பதற்கு ஒதுக்குவதற்கான பாரிய சந்தர்ப்பம் தற்போதைய அரசாங்கத்திற்கு கிடைத்துள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

வீடற்றவர்களுக்கு வீடுகளை அமைத்து கொடுக்கவும் வறுமையில் வாடும் மக்களின் துன்பத்தை ஒழிக்கவும் வேலையற்ற இளைஞர் சமுதாயத்தை பாதுகாக்கவும் இந் நிதியை செலவிட முடியும் என அவர் சுட்டிக்காட்டினார். (4-2)

# வில்பத்து சரணாலயத்திற்கு மேலுமொரு நுழைவாயில்

(கொழும்பு)

வில்பத்து சரணாலயத்தை பார்வையிடச் செல்லும் சுற்றுலாப் பயணிகளின் நலன் கருதி மேலுமொரு நுழைவாயிலை திறந்து விடுவதற்கு வன ஜீவராசிகள் பாதுகாப்பு திணைக்களம் உத்தேசித்துள்ளது.

தந்திரிமலை பிரதேசத்திற்கு அருகில் உள்ள சரணாலயத்தின் கிழக்குப் பகுதியில் புதிய நுழைவாயிலை திறக்கவுள்ளதாக திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் டாக்டர் சந்திரவங்ச பத்திராஜ குறிப்பிட்டார்.

தேசத்திற்கு மகுடம் கண்காட்சியை முன்னிட்டு அடுத்த வருடம் பெப்ரவரி மாதத்தில் இந்த நுழைவாயிலை திறப்பதற்கு திட்டமிடப் பட்டுள்ளது.

வில்பத்து சரணாலயத்தை பார்வையிடுவதற்கு செல்வோரின் நலன் கருதி அநுராதபுரம், புத்தளம் வீதியில் தற்போது ஒரு நுழைவாயில் திறந்து விடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (4-2)

# வெளிநாட்டு தூதுவர்களின் சேவையை விட கிரிக்கெட் வீரர்களின் சேவை மகத்தானது

(கொழும்பு)

சில வெளிநாட்டு தூதுவர்கள் உயர்ஸ்தானிகர்களை விடவும் தேசிய கிரிக்கெட் வீரர்கள் சிறந்த சேவை ஆற்றியுள்ளதாக வீடமைப்பு அமைச்சர் விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார்.

தேசிய கிரிக்கெட் வீரர்கள் சர்வதேச அரங்கில் இலங்கை தொடர்பான நன்மதிப்பை அதிகரித்து வருவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

வெளிநாட்டவர்கள் குறித்த கிரிக்கெட் வீரரின் நாடு என இலங்கையை விபரிக்கும் சந்தர்ப்பங்கள் காணப்படுவதாக அவர் தெரிவித்துள்ளார். பாடசாலை கிரிக்கெட் போட்டித் தொடர் ஒன்றின் பரிசளிப்பு விழாவில் கலந்து கொண்டு உரையாற்றிய போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

பயங்கரவாதம் இல்லாதொழிக்கப்பட்டுள்ள நிலையில் எந்தவொரு இன சமூகத்தைச் சேர்ந்த இளைஞனும் தனது திறமையை வெளிப்படுத்தி தேசிய அணியில் இடம்பிடிக்கக் கூடிய சூழ்நிலை உருவாகியுள்ளதென அவர் தெரிவித்துள்ளார். (4-2)


# வடமராட்சி பொலிகண்டி கந்தவனக் கடவை சுப்பிரமணிய சுவாமி தேவஸ்தான வசந்தோற்சவ சிறப்புமலர் 09 ஆம் திருவிழா-09.07.2011

வடபுலத்தின் யாழ்.மாவட்டத்தின் வடமராட்சிப் பகுதியிலே பருத்தித்துறையிலிருந்து தொண்டைமானாறு செல்லும் வழியில் பொலிகண்டி என்னும் சிற்றூரில் நுரையும் அலையும் தவழும் கடற்கரையோரமாக எழில் கொஞ்சும் தலமாகவும் மூர்த்தி, தலம், தீர்த் தம் என்னும் முச்சிறப்புக்களையும் ஒருங்கே கொண்டமைந்த தலமாகவும் அருணகிரிநாதரால் திருப்புகழ் பாடப்பெற்றதுமாக விளங்குவது பொலிகண்டி கந்தவனப்பதி கல்யாண சுவாமி ஆலயமாகும்.இது ஸ்காந்தாரண்யம், கந்தவனக்கடவை, கந்தசுவாமி கானகம், முருகவனம், வெள்ளரிக்கொல்லை, அம்பலவாணமுருகேசசுவாமி கோவில், பொலிகண்டி கந்தவனசுவாமி கோயில் போன்ற பல் பெயர்களால் அழைக்கப்படுகிறது. இதுமட்டுமன்றி இலங்கையில் உள்ள ஆறுபடை வீடுகளில் இதுவும் ஒன்றாகச் சிறப்பிக்கப்படுவது இங்கே சிறப்பாக நோக்குவதற்குரிய ஒன்றாகும்.

ஓம் முருகா எனும்போது உள்ளம் தூய்மையடைகிறது. ஆதாரநாயகனாக விளங்கும் முருகப்பெருமானின் சிறப்பை எடுத்து நோக்குகின்றபோது கருவறையிலே மூலவிக்கிரகமாக ஆறுமுகங்களை உடைய ஆறுமுகப் பெருமான் உறைந்துள்ளார்.

இதுமட்டுமல்லாமல் இவ்வாலயத்திலே வன்னிமாவட்டம் குமாரபுரத்தில் பூசிக்கப்பட்ட ஆறுமுகப்பெருமான் விக்கிரகம் இவ்வாலயத்தின் உட்பிரகாரத்தின் வடக்கு வீதியில் வன்னிமரத்தின் கீழ் அமர்ந்து அடியார்களுக்கு அருள்பாலிப்பதில் இவ்வாலயத்திற்கு தனிச் சிறப்புண்டு. இவரை பழையவர், கைக்குலைச்சிக் கல்யாணவேலவர் என்ற நாமங்கள் கொண்டு அழைப்பார்கள். இங்கேயுள்ள உற்சவமூர்த்தியாகிய சண்முகப்பெருமானை அடியார்கள் ஆறுமுகநயினார் என்று சொல்லி பக்திச் சிறப்புடன் அழைப்பார்கள்.

கைக்குலைச்சிக் கல்யாணவேலவர் என்று அழைக்கப்படும் பழையவர் கருவறை மூலவிக்கிரகம் ஆறுமுகநயினார் என அழைக்கப்படும் இரதோற்சவத்திற்கு எழுந்தருளும் ஆறுமுகப்பெருமான் ஆகிய 3 சண்முகப் பெருமானைக் கொண்டு விளங்குவது கந்தவனக் கடவை ஆலயம். ஆலய வெளிப்புறத்திலே வர்ணங்களாலும் கலைப்படைப்புக்களையும் கொண்ட மணிமண்டபம் காணப்படுகிறது. ஆலயத்திற்கு அருகே கற்பூரம் விளைந்த நன்னீர்க் குளமும் காணப்படுகின்றது. இதனால் கந்தவனநாதன் *கற்பூரக்கந்தன்* எனும் திருநாமத் தைப் பெற்றான். இவ்வாலயத்தின் தலவிருட்ச மாக காலம் நிர்ணயிக்கமுடியாத வன்னி மரங் கள் காணப்படுகின்றன.



வரலாற்றுச் சான்றுகளை சொற்றமிழால் வழங்கும் தட்சணகைலாய மாண்மியம், ஈழ மண்டலச் சதகம் போன்ற நூல்கள் திருச்செந்தூரிலே முருகன் சூரசம்ஹாரம் நிகழ்த்திய பின் தேவியர் இருவரையும் மணந்து கதிர்காமம் செல்லும் நோக்கில் வேதாரண்யம் சென்று அங்கிருந்து கடல்வழியாக வந்து காங்கேசன் துறையை அடைந்து அங்கு கோயில் கொண்டு பின்னர் முப்பத்து முக்கோடி தேவருடன் விரும்பி இங்கு உறைந்தமை எடுத்தியம்புகின்றன.

நான்மணிமாலை, கந்தவனக் கலம்பகம் பாடப்பட்டதும் சிறப்பிற்குரியதாகும். இவை மட்டுமன்றி இன்றும்பல கவிஞர்களால் எம்பெருமான் புகழ் பாடப்படுவதும் சிறப்பானதாகும். அந்த வகையில் *மனமே உனக்கேன் மனக்கவலை கந்தவனத்தான் பதிக்கே வந்துவிடு...* எனத்தொடங்கும் பாடல் அடியார் துயரைக் குறைக்கும் பாடலாக இன்றும் நம் காதுகளில் ஒலித்துக் கொண்டிருக்கிறது.

சைவப்பெரியார் சிவபாதசுந்தரனார், யோக சுவாமிகள், அருளம்பலசுவாமிகள், உடுப் பிட் டிச் சிவசம்புப் புலவர்,நவாலி சோமசுந்தரப் புலவர்கள் போற்றி புகழ்ந்து வழிபட்ட தலமாகும்.

இவ்வாலயத்தில் கடந்த முதலாந்திகதி மஹோற்சவம் கொடியேற்றத்துடன் ஆரம்ப மாகி தொடர்ந்து 15 நாட்கள் வெகுவிமரிசை யாக நடைபெற்று வருகிறது. அந்தவகையில் ஆறாம் திருவிழாவாகிய மாம்பழத் திருவிழாவா னது நாடகக் காட்சியாக இடம்பெற்றது. எட்டாம் நாள் மிருக யாத்திரைக்காக எம்பெருமான் பொலிகண்டி இருப்பைமூலை சித்திவிநாயகருக்கு எழுந்தருளினார். அந்தவகையில் ஒன்பதாம் நாளாகிய இன்று எம்பெருமானுக்கு பொலிகைக் கரையோர மக்களால் பூங்கா வன உற்சவம் மிகவும் சிறப்பான முறையில் நடைபெறவுள்ளது. மாலை 7 மணியளவில் தேவியர் சகிதம் எம்பெருமான் சயனவடிவில் இளைப்பாறுவதாக வடிவமைக்கப்பட்டு விநாயகப்பெருமான், கோபாலகிருஷ்ணருடன் பலவித மலர்களால் அலங்கரிக்கப்பட்ட மணிமண்டபத்திற்கு எழுந்தருளி அங்கு மிகச் சிறப்பான முறையில் பூஜைகள் இடம்பெற்று இறைவன் இசைவடிவினன் என்னும் கூற்றிற்கு இணங்க இசை நிகழ்வும் இடம்பெறவுள்ளது. 13 ஆம் நாள் மாலை 7 மணியளவில் கைலயங்கிரிக் காட்சி உணர்த்தும் சப்பறத்திருவிழாவும் இடம்பெறவுள்ளது. 14ஆம் நாள் காலை 10 மணியளவில் அழித்தலை உணர்த்தும் இரதோற்சவம் இடம் பெறவுள்ளது. இதன்போது விநாயகப்பெருமான், முத்துக்குமாரசுவாமி, ஆறுமுகப்பெருமான், சண்டேஸ்வரப்பெருமான் இரதத்திலே ஆரோகணித்து அருள்பாலிக்கவுள்ளனர். மறுநாளாகிய 15ஆம் நாள் காலை 8 மணியளவில் எம்பெருமான் அருளலைக் குறிக்கும் தீர்த்தோற்சவத்திற்காக ஊரணி இந்து சமுத்திரத்திற்கு எழுந்தருளுவார். அன்றையதினம் மாலை கொடி யிறக்கமும் இடம்பெறும். இம்ம ஹோற்சவ தினங்களில் தண்ணீர்ப்பந்தல் அமைக்கப்பட்டு உள்ளமை அடியார்களுக்கு ஆறுதல் அளிப்பது மட்டுமன்றி அன்னதானமும் வழங்கப்பட்டு வருகிறது.

மஹோற்சவம் மட்டுமன்றி கந்தசஷ்டி, கார்த்திகை உற்சவம், மாசிமகத் தீர்த்தோற்சவம்,மானம்பூத் திருவிழா, திருவாதிரை உற்சவம் என்பன மிகவும் சிறப்பான முறையில் நடைபெறுவதைக் காணமுடிகின்றது. இந்த வகையில் எம்பெருமானின் சிறப்பைக்கூறிக் கொண்டே போகலாம் என்றுகூறின் மிகையாகாது. இவ்வண்ணம் எம்பெருமானின் பாதாரவிந்தங்களைப் பணிந்து இஷ்ட சித்திகளைப் பெற்று மண்ணில் நல்ல வண்ணம் வாழ்வோமாக.... (5320)

# இலங்கை கொலைக்களம் தொலைக்காட்சி விவாதத்தில் ஜெயலலிதாவும் பங்கேற்பார்



**இந்திய .தொலைக்காட்சி ஊடகமான கெட்லைன் ஸ்ருடே இல் ஒளிபரப்பாகவுள்ள சனல் 4 இன் இலங்கையின் கொலைக்களம் காணொளியைத் தொடர்ந்து இடம்பெறவுள்ள விவாதத்தில் கலந்து கொள்ள தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா சம்மதம் தெரிவித்துள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளன.**

சனல் 4 இன் இந்தக் காணொளி ஏற்கனவே பிரித்தானியாவிலும் அவுஸ்திரேலியாவிலும் ஒளிபரப்பாகி பெரும் அதிர்ச்சி அலைகளை எழுப்பியுள்ள நிலையில் இந்தியாவில் முதன்முறையாக ஒளிபரப்பாகவுள்ளது.

இந்திய மக்கள் மத்தியிலும் ஊடகங்கள் மற்றும் அரசியல் கட்சிகளின் மத்தியிலும் இக் காணொளி ஈழமக்கள் மீதான அனுதாபத்தையும் போர்க் குற்ற விசாரணை தொடர்பான அழுத்தங்களையும் ஏற்படுத்திவிடும் என்ற அச்ச உணர்வின் காரணமாக இவ் ஒளிபரப்பைத் தடுப்பதற்கு இலங்கை உயர்ஸ்தானிகராலயம் கடும் முயற்சியை மேற் கொண்ட போதும் அது வெற்றியளிக்கவில்லை.

இந்நிலையில் தமிழ்நாடு முதல்வர் ஜெயலலிதா இக்காணொளியின் அடிப்படையில் இடம்பெறும் விவாதத்தில் கலந்து கொள்வது குறித்தும் இலங்கை வட்டாரங்கள் அதிர்ச்சி அடைந்துள்ளன.

தமிழ்நாடு சட்டசபையில் ஏற்கனவே போர்க் குற்றவாளிகள் மீதான சர்வதேச விசாரணையை வலியுறுத்தியும் பொருளாதார தடை விதிக்கக்கோரியும் தீர்மானங்கள் நிறை வேற்றப்பட்டுள்ள நிலையில் இவற்றை வலியுறுத்தும் முகமாகவே ஜெயலலிதாவின் பேச்சு அமையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இரவு 10மணிக்கு ஒளிபரப்பாகவுள்ள இக் காணொளி நாளையும் நாளை மறுதினமும் ஒளிபரப்பாக வுள்ளது.இது தொடர்பாக நாளை சென்னையில் ஒரு கலந்துரையாடலை நடத்தவும் இத் தொலைக்காட்சி நிறுவனம் ஏற்பாடு செய்துள்ளது. சென்னை மயிலையில் அமைந்துள்ள வித்யா பீவனில் இக்கலந்துரையாடல் இடம் பெறவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (4-2)

## தயாநிதியின் பதவி விலகலில் காலதாமதம் ஏற்பட்டது ஏன்?

# ஜெயலலிதா கேள்வி

(புதுடில்லி)

2ஜி ஸ்பெக்ட்ரம் ஊழல் குற்றச்சாட்டு காரணமாக தயாநிதிமாறன் நேற்று முன்தினம் தனது மத்திய மந்திரி பதவியை இராஜினாமா செய்துள்ளார். தயாநிதிமாறன் இராஜினாமா செய்தது குறித்து முதலமைச்சர் ஜெயலலிதா நேற்று முன்தினம் தனது கருத்தை தெரிவிக்கையில், அதில் தயாநிதிமாறன் பதவி விலகல் மிகவும் காலதாமதமானது. அவர் முன்பே தனது பதவியை இராஜினாமா செய்திருக்க வேண்டும் அல்லது பிரதமர் அவரை இராஜினாமா செய்யவைத்திருக்க வேண்டும் என்று கூறினார்.

தி.மு.க வுக்கு முடிவு காலம் தொடங்கி விட்டதாக கருதுகிறீர்களா என்று கேட்டதற்கு ஏற்கனவே சட்டமன்ற பொதுத்தேர்தலில் தீர்ப்பின் மூலமே தி.மு.க வுக்கு முடிவுகாலம் தொடங்கிவிட்டது என மக்கள் முடிவு செய்து விட்டார்கள் என்றார். (4-2)




# இந்தியா-பாகிஸ்தான் இடையே நடைபெறும் இருநாட்டு உறவுகள் குறித்து பேச்சுவார்த்தை

இந்தியா -பாகிஸ்தான் இடையிலான இருநாட்டு உறவுகள் குறித்து ஓகஸ்ட்மாதம் 27 ஆம் திகதி டில்லியில் பேச்சுவார்த்தை நடைபெறும் என்று பாகிஸ்தான் பத்திரிகைகளில் செய்தி வெளியாகியுள்ளது.

இந்தியா -பாகிஸ்தான் இடையே இருநாட்டு உறவுகள் தொடர்பான முதல் கட்ட பேச்சுவார்த்தை கடந்த மாதம் 23 மற்றும் 24 ஆம் திகதிகளில் இருநாட்டு வெளியுறவுத்துறை செயலர்கள் மட்டத்தில் இஸ்லாமாபாத்தில் நடந்தது.

இதன் தொடர்ச்சியாக இருநாட்டு வெளியுறவுத்துறை அமைச்சர்கள் மட்டத்திலான பேச்சுவார்த்தை டில்லியில் நடைபெறும் என்று பாகிஸ்தான் பத்திரிகைகளில் செய்தி வெளியாகியுள்ளது.


பாகிஸ்தான் வெளியுறவுத்துறை அமைச்சர் பொறுப்பு வகிக்கும்ஹீனா ரபானி கர் அந்நாட்டின் வெளியுறவுத்துறை அமைச்சராக தேர்வு செய்வதற்கான வாய்ப்புகள் இருப்பதாகவும் அச்செய்தியில் கூறப்பட்டுள்ளது.

இருநாட்டின் வெளியுறவுத்துறை அமைச்சர்கள் சந்திப்பிற்கு முன்பு இம் மாதம் மத்தியில் இருநாட்டு அதிகாரிகள் மட்டத்தில் நம்பிக்கை உருவாக்குதல், இருநாடுகளுக்கு இடையிலான எல்லைக் கட்டுப்பாட்டு விரிவாக்கம்,வர்த்தகம் மற்றும் அணு ஆயுதங்கள் பற்றி பேசப்படும் ஏன்று அச்செய்தியில் கூறப்பட்டுள்ளது.

இரு நாட்டு உறவில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ள நிலையில் வெளியுறவுத்துறை அமைச்சர்கள் மட்டத்திலான பேச்சுவார்த்தையில் நல்ல முன்னேற்றம் காணப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (4-2)

# தயாநிதிமாறனுக்கு தி.மு.க எப்போதும் துணை நிற்கும்

# கருணாநிதி உருக்கம்




2ஜி அலைக்கற்றை விவகாரத்தில் தயாநிதிமாறனுக்கு தி.மு.க துணையாகநிக்கும் என்று தி.மு.க.தலைவர் கருணாநிதி கூறி னார். சென்னை கோபாலபுரம் வீட்டில் செய் தியாளர்களிடம் கருணாநிதி தெரிவிக்கையில்,

உலகில் குறிப்பாக இந்தியாவில் ஊடகங்களின் ஆட்சி நடைபெறுகிறது. அவர்கள் நினைத்தால் யாரையும் இழிவுபடுத்தி விட முடியும் அதற்கு தயாநிதிமாறன் விதிவிலக்கல்ல.

இந்த விவகாரத்தில் தயாநிதி மாறனுக்கு தி.மு.க துணையாக நிற்கும் இதுவரை இந்த விவகாரம் தொடர்பாக ஒரு பிரச்சினையும் எழவில்லை. அதனால் தி.மு.க. தரப்பில் எதுவும் சொல்லப்படவில்லை

இப்போது தானே விவகாரம் தொடங்கியிருக்கிறது. அதனால்தான் இவ்வாறு சொல்லுகிறோம் என்று கருணாநிதி கூறினார்.

தயாநிதிமாறனுக்கு மாற்றாக மத்திய அமைச்சரவையில் யாருக்காவது பதவி அளிக்கச் சொல்லி கேட்டிருக்கிறீர்களா? என்று கேட்டதற்கு தெரியாது என்றார் கருணாநிதி. காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தியுடன் புதன்கிழமை இரவு தொடர்பு கொண்டு பேசினீர்களா? என்று கேட்டதற்கு தொடர்பு கொள்ளவில்லை என்றும் மத்திய அமைச்சரவை குறித்து பிரதமர் மன்மோகன் சிங்கிக்கு கடிதம் எழுதியுள்ளீர்களா? என்று கேட்டதற்கு உங்கள் கற்பனை என்றும் கருணாநிதி பதில் அளித்தார். (4-2)



கடலூர் மாவட்ட சிதம்பரம் நடராசர் கோவில் ஆனி திருமஞ்சனத்தையொட்டி ஆயிரங்கால் மண்டபத்தில் இருந்து நடராஜரும் சிவகாமசுந்தரி அம்பாளும் திருநடனம் புரிந்தபடி பக்தர்களுக்கு காட்சி அளித்ததை ஆயிரக்கணக்கான பக்தர்கள் தரிசனம் செய்வதைப் படத்தில் காணலாம்.

# ஊழலில் தயாநிதிமாறனின் பங்கு என்ன?

## விசாரித்து வருவதாக சி.பி.ஐ அறிவிப்பு



(புதுடில்லி)

ஸ்பெக்ட்ரம் அலைக்கற்றை ஊழல் விவகாரத்தில் மத்திய அமைச்சர் தயாநிதிமாறனின் பங்கு குறித்தும் விசாரணைகள் நடைபெற்று வருவதாக மத்திய புலனாய்வுக் கழகம் உச்ச நீதிமன்றத்தில் நேற்று தெரிவித்துள்ளது.

ஸ்பெக்ட்ரம் அலைக்கற்றை ஊழல் குறித்து இடம்பெற்று வரும் விசாரணைகள் தொடர்பிலான விபரங்கள் கொண்ட அறிக்கையை மத்திய புலனாய்வுக் கழகம் இன்று உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளது.

இவ்வறிக்கையில் ஸ்பெக்ட்ரம் அலைக்கற்றை ஊழல் விவகாரத்தில் மத்திய அமைச்சர் தயாநிதிமாறனின் பங்கு குறித்தும் விசாரணைகள் இடம்பெற்று வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் ஸ்பெக்ட்ரம் அலைக்கற்றை ஊழல்குறித்த முழு விசாரணைகளும் மூன்று மாதத்தில் முடிவடையும் எனவும் இவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந் நிலையில் 2003-2006 ஆம் ஆண்டு காலப்பகுதியில் மத்திய தொலைத் தொடர்புத்துறை அமைச்சராக இருந்த தயாநிதிமாறன் ஸ்பெக்ட்ரம் அலைக்கற்றை உரிமத்தை வழங்காமல் வேண்டுமென்றே இழுத்தடித்ததாக அவரது முன்னாள் செயலாளர் நிருபேந்திரா மிஸ்ரா மத்திய புலனாய்வுக் கழகத்திடம் தெரிவித்துள்ளார்.தனது அண்ணன் கலாநிதிமாறனின் சன் தொலைக்காட்சி நிறுவனம் பயன்பெற வேண்டும் என்பதற்காக எயர்செல் நிறுவனத்திற்கு ஸ்பெக்ட்ரம் அலைக்கற்றை உரிமம் வழங் காமல் தயாநிதிமாறன் இழுத்தடித்ததாக நிரு பேந்திரா மிஸ்ரா மத்திய புலனாய்வுக் கழகவிசாரணையில் கூறியுள்ளார்.

இந்தவாக்குமூலத்தின் அடிப்படையிலேயே தயாநிதிமாறனை ஸ்பெக்ட்ரம் அலைக்கற்றை ஊழல் விவகாரத்தில் மத்திய புலனாய்வுக்கழகம் இணைத்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

எயார்செல் நிறுவனத்தை மலேசியாவைச் சேர்ந்த மக்ஸிஸ் நிறுவனத்திற்கு விற்பனை செய்யுமாறு தயாநிதிமாறன் தன்னை மிரட்டியதாக பிரபல தொழிலதிபர் சிவசங்கரனும் மத்திய புலனாய்வுக்கழக விசாரணையில் தெரிவித்திருந்தார்.

ஸ்பெக்ட்ரம் ஊழல் விவகாரத்தில் தயாநிதி மாறனையும் மத்திய புலனாய்வுக்கழகம் இணைத்துள்ளதால் அவர் பதவி விலக வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (4-2)

# பல்பரிமாண ஆளுமை கொண்ட பேராசிரியர் சிவத்தம்பி

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் தகைசார் ஓய்வுநிலைப் பேராசிரியர் கார்த்திகேசு சிவத்தம்பி அவர்களின் மறைவு என்பது தமிழ்ச் சமூகத்துக்குப் பேரிழப்பாகும். பேராசிரியர் கா.சிவத்தம்பி ஆராய்ச்சி உலகில் பெற்றிருந்த இடம் அவரது ஆளுமையினால் வந்ததொன்று.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் வரலாற்றில் பேராசிரியரின் வகிபாகம் கணிசமானதாகும். நுண்கலை, நாடகமும் அரங்கியலும் முதலான கற்கைநெறிகளை உருவாக்கி வடிவமைத்ததில் பேராசிரியரின் பங்களிப்பு கணிசமானதாகும்.

பேராசிரியர் சிவத்தம்பியின் பல்பரிமாண ஆளுமை காரணமாக அவரால் பல்வேறு புலங்களிலும் பிரகாசிக்க முடிந்தது. தமிழ், ஆங்கிலம், சிங்களம் முதலான மொழிகளில் சரளமான பாண்டித்தியம் கொண்டிருந்த பேராசிரியர். இதன் காரணமாக உலகின் பல்வேறு திசைகளிலும் நன்கு அறியப்பட்டவராகத் திகழ்ந்தார். குறிப்பாகத் தமிழ் நாட்டில் பேராசிரியருக்கென்று தனித்துவமான ஒரு மாணவப் பட்டாளமே உள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

பல்கலைக்கழகப் பேராசிரியர் ஒருவர் தனது புலமைசார்ந்த எழுத்துக்களாலேயே வரலாற்றில் வாழ முடியும் என்ற கருத்தில் மிகுந்த நம்பிக்கை கொண்டிருந்த இவர் கணிசமான ஆராய்ச்சி நூல்களைத் தமிழிலும் ஆங்கிலத்திலும் எழுதினார்.

பல நூற்றுக்கணக்கான ஆராய்ச்சிக் கட்டுரைகளை எழுதினார். தமிழ் இன்று செம்மொழி அந்தஸ்தைப் பெற்றிருக்கின்றதென்றால் அந்தத் தமிழின் அருமை பெருமைகளைச் சர்வதேச அளவில் கொண்டு போய்ச் சேர்த்த பேராசிரியர் சிவத்தம்பி போன்றவர்களுக்கு அதில் பெரும்



பங்குண்டு.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் பீடச் சபை, மூதவை, பேரவை முதலான சபைகளின் மதிப்பார்ந்த உறுப்பினராக இருந்த பேராசிரியர் பல்கலைக்கழகத்தின் வளர்ச்சிக்காக இச்சபைகளினூடாக அளப்பல கருத்துக்களை முன்வைத்தார்.

பேராசிரியரின் புலமையை உணர்ந்த தமிழக அரசு அவருக்கு "திரு.வி.க." விருதை வழங்கிக் கௌரவித்ததோடு 2010 ஜூன் மாதம் கோயம்புத்தூரில் நடைபெற்ற உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டின் ஆராய்ச்சி அமர்வுக்கான தலைமைப் பொறுப்பையும் அவருக்கு வழங்கி அழகு பார்த்தது. இந்தக் கௌரவம் ஈழத்தவர் ஒருவருக்கு இப்பதவியை வழங்க வேண்டும் என்பதற்காக வழங்கப்பட்டிருக்கவில்லை. மாறாக பேராசிரியர் கா. சிவத்தம்பியின் புலமையை அடிப்படையாகக் கொண்டே வழங்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

பேராசிரியரின் "கற்பித்தற்பாணி" சுவாரஸ்யமானது. மணித்தியாலக் கணக்கில் நீண்டு செல்லும் இவருடைய விரிவுரைகளால் மாணவர்கள் சலிப்படைந்ததே கிடையாது. அத்தனை ஆழமான அர்த்தபுஷ்டியான விரிவுரைகளை அவர் மாண வர்களுக்கு வழங்கினார்.

பேராசிரியரிடம் நான்கு வருடங்கள் படிக்கக் கிடைத்த என்போன்ற மாணவர்கள் பெரும்பேறு பெற்றவர்கள். மாணவர்களை வாஞ்சையோடு அரவணைப்பதில் அவருக்கு இணை ஏதுமில்லை. எப்போது பார்த்தாலும் "கடைசியாக நீ என்ன நூல் படித்தாய்" என்பதே இவரது முதலாவது வினாவாக இருக்கும். இந்த வினாவுக்கு அஞ்சிப் பலர் அவரைப் பார்ப்பதற்குக் கூச்சப்படுவதுண்டு.

நோய்வாய்ப்பட்டிருந்தபோதும் வாசிப்பதையும் எழுதுவதையும் பேராசிரியர் கைவிடவேயில்லை. கடைசியாகப் புதுமைப் பித்தனையும் பாரதியையும் இணைத்து நூல் ஒன்றை எழுதும் முயற்சியில் அவர் இறங்கியிருந்தார். அதுபற்றி என்னுடன் இருவாரங்களுக்கு முன்பு நேரில் உரையாடினார். அந்நூல் முற்றுப் பெறவில்லை.

தமிழியல்,அரசியல், சமூகவியல், பொருளியல் என அனைத்துத்துறைகளிலும் பிரகாசித்த எங்கள் பேராசான் இன்று எம்முடன் இல்லை.

பேராசானைப் போன்ற ஒருவரை இனி எம் வாழ்நாளில் பார்ப்பதென்பது முடியாத காரியம். பேராசிரியரின் மாணவர் குழாம் ஒன்று இலங்கைப் பல்கலைக்கழகங்களின் பல்வேறு துறைகளிலும் உயர்ந்த நிலையில் இருக்கிறது என்றால் அது பேராசிரியரின் தனித்துவமான ஆளுமையின் வெளிப்பாடே எனலாம்.

பேராசிரியரிடம் படித்தோம், அவர் வாழ்ந்த காலப்பகுதியில் நாமும் வாழ்ந்தோம் என்பது எமக்குக் கிடைத்த பெரும்பேறு. அழியாத தனது புலமைசார்ந்த எழுத்துக்களால் பேராசிரியர் கா.சிவத்தம்பி என்றும் எம்மோடு இருப்பார். அதுதான் உண்மை.

பேராசிரியர் கிருஷ்ணபிள்ளை விசாகரூபன்,
தலைவர், தமிழ்த்துறை,
யாழ். பல்கலைக்கழகம்.

# தாருஷ்மான் அறிக்கைக்கு அணிசேரா நாடுகள் எதிர்ப்பு

## அமைச்சர் பீரிஸ் தெரிவிப்பு



(கொழும்பு)

வெளிநாட்டு தூதுவராலயங்களில் முன்னாள் இராணுவ அதிகாரிகள் பதவிகளுக்கு அமர்த்தப்படுவதனால் வெளிநாட்டு சேவைக்கு எவ்விதமான பாதிப்புக்களும் ஏற்படவில்லை என்பதுடன் வெற்றிடமாக இருக்கின்ற பதவிகள் விரைவில் நிரப்பப்படும் என்று வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்தார். தாருஸ்மான் அறிக்கை வெளியிட்டிருக்கக் கூடாது என்றும் அவற்றை மனித உரிமை பேரவையில் பரிசீலிக்கக் கூடாது என்ற எண்ணப்பாட்டிலேயே ஐ.நா. மற்றும் அணிசேரா நாடுகள் இருக்கின்றன என்பதுடன் தசாப்த பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கு ஓரிரவு போதாது என்றும் அவர் கூறினார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் ஜோன் அமரதுங்க விடுத்த விசேட கூற்றுக்கு பதிலளிக்கும் போதே அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார்.

அமைச்சர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

முன்னாள் இராணுவ அதிகாரிகளை இராஜதந்திர சேவைகளுக்கு இணைப்பதனால் செயற்பாடுகளில் வழித்தடங்கல்கள் ஏற்படுவதாக முன்வைக்கப்படும் குற்றங்களை ஏற்றுக் கொள்ள முடியாது. இராஜதந்திர சேவையில் இருப்பவர்களினால் நாட்டின் நற்பெயருக்கு பங்கம் ஏற்படவில்லை.

இராஜதந்திர சேவையில் இணைந்து கொண்டவர்களை முன்னாள் இராணு அதிகாரிகளாக பார்க்கக் கூடாது. அவர்களையும் இராஜதந்திர அதிகாரிகளாக பார்க்க வேண்டும்.

இலங்கையின் விம்பத்தை வெளியுலகுக்குக் காட்ட சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்கள் பிரயத்தனங்கள் செய்தன.

எனினும் துணிவு, வினைத்திறன், தர்க்க திறமையினால் சவேந்திர சில்வா அதனை முறியடித்தார். அரச சார்பற்ற நிறுவனங்களின் குறைகளைக் கண்டே தனது வாதங்களை முன்வைத்தார்.

தரப்புக்கள், கட்சிகள் வேறுபாடுகள் இன்றி முழுமையாகவே தன்னை அர்ப்பணித்தார். கற்றறிந்த பாடங்களுக்கான நல்லிணக்க ஆணைக்குழுவின் முன்னிலையில் இரண்டு தடவைகள் சாட்சியமளித்தார்.

ஜப்பானுக்கு நியமிக்கப்பட்ட வசந்தகரன்னாகொடவின் இராணுவ செயற்பாட்டிற்கு அப்பால் அவரிடம் திறமை இருந்தது. சுனாமிக்குப் பின்னர் ஜப்பான் அரசாங்கத்திற்கு கொடுக்கப்பட்ட நிவாரணத்துடன் உயிர் மூச்சை எடுத்தார்.

தாருஸ்மான் அறிக்கையானது, உண்மையிலிருந்து விலகி நிற்கின்றது என்றும் முற்றுமுழுதாக முரணானது என்றும் பல்வேறு மூலக்கூறுகளை அடிப்படையாகக் கொண்டே சர்வதேச நெருக்கடி குழு இந்த அறிக்கையை தயாரிப்பதற்கு அடிப்படையாக இருந்தது என்று யசூசி அஹாசி தெரிவித்துள்ளார்.

தாருஸ்மன் அறிக்கை ஜெனீவாவில் மனித உரிமை பேரவையில் சமர்ப்பிக்கக் கூடாது என்ற நிலைப்பாட்டாலேயே அணிசேரா நாடுகள் இருக்கின்றன. தாருஸ்மான் அறிக்கை ஐ.நா.வின் அறிக்கையில்லை என்றனர். தனக்கும் அறிக்கைக்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை. இது தனது அறிக்கையும் இல்லை என்று பான் கீ மூன் தெரிவித்துவிட்டார். ஐ.நா.வின் சட்ட ரீதியான அமைப்பிலிருந்து இந்த அறிக்கை வெளியிடப்படவில்லை என்பதுடன் இவை அரசாங்கத்தின் முயற்சிகளுக்கு பின் விளைவுகளை ஏற்படுத்த முயற்சிக்கின்றன.

எனினும் ஐ.நா.இலங்கையின் மீது தலையிட வேண்டும். ஜி.எஸ்.பி.பிளஸை நிறுத்த வேண்டும் என்று எதிர்க்கட்சி தலைவர் ரணில் விக்ரம சிங்க இந்தியாவில் வைத்து கூறியதாக ஊடகங்களில் செய்திகள் வெளிவந்துள்ளன. அதேபோல இலங்கையின் மீது இந்திய அரசாங்கம் எதனையும் செலுத்தவில்லை. இது பிழையான பொருட்கோடலாகும் என்றார். (2)

## ஸ்ரீஅம்மா பகவானின் ஐஸ்வரிய தீட்சை

(யாழ்ப்பாணம்)

காரைநகரிலுள்ள ஸ்ரீ அம்மா பகவானின் ஐஸ்வரிய தீட்சை வழங்கும் நிகழ்வு எதிர்வரும் 12ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு காரைநகர் கணனிப் பயிற்சி நிலைய மண்டபத்தில் நடைபெற வுள்ளது.

இதில் ஸ்ரீஅம்மா பகவான் ஒன்னெஸ் பல்கலைக்கழகத்திலிருந்து வருகை தரும் ஸ்ரீ உமாஜி கலந்து கொண்டு பக்தர்களு க்கு ஐஸ்வரிய தீட்சை வழங்கவுள்ளதால் யாழ். மாவட்டத்திலுள்ள சகல பக்தர்களையும் தொண்டர்களையும் கலந்து கொள்ளுமாறு கேட்கப்படுகின்றது.

அத்தோடு நாளை பிற்பகல் 3 மணிக்கு யா/ இந்து மகளிர் கல்லூரியில் ஐஸ்வர்ய தீட்சையும் நாளை மறுதினம் 11 ஆம் திகதி திங்கட்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நல்லூர் இளங்கலை ஞர் மண்டபத்தில் வித்தியா தீட்சையும் ஸ்ரீ உமாஜியினால் வழங்கப்படவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

(4)

## மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)

மாதகல் காஞ்சிபுர வைரவர் கோவில் மஹோற்சவம் நேற்றைய தினம் ஆரம்பமாகியது.

இதில் எதிர்வரும் 17 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை தேர்த்திருவிழாவும் மறுநாள் திங்கட்கிழமை திருவூஞ்சல் திருவிழாவும் நடைபெறவுள்ளது.

(4-47)

தந்திரமும் ஏமாற்றமும் அறநெறி நிற்கப் போதுமான அறிவில்லாத மூடர் செயலாகும்.

-ஃபிராங்க்லின்

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

# நித்தியானந்தரின் பள்ளி அறையை படம்பிடித்த சன் ரீவிக்கு தெரியாதோ!...

ஸ்பெக்ரம் ஊழல் முழு இந்தியாவையும் அதிர்ச்சியில் மூழ்கடித்துள்ளது. ராஜாவில் ஆரம்பித்த ஊழல் கலைஞர் கருணாநிதியின் மகள் கனிமொழியை சிறையில் தள்ளியதுடன் அமைச்சர் தயாநிதி மாறனின் அமைச்சுப் பதவிக்கும் ஆப்பு வைத்துவிட்டது.

இந்திய மத்திய அரசில் முன்பு தகவல் தொழில்நுட்ப அமைச்சராக இருந்த தயாநிதி மாறன், இந்தியாவின் தகவல் தொழில்நுட்பத்தின் வளர்ச்சிக்குப் பெரும் பங்காற்றினார் என்று புகழப்பட்டவர்.

இளம் அமைச்சர், தமிழ் அமைச்சர் என்ற பெருமையில் தமிழ்நாடும் பூரிப்படைந்தது. ஆனால் தயாநிதி மாறன் இந்தியாவில் தொழில்நுட்பத் துறையை வியாபகப்படுத்தினார் என்பதற்கப்பால், ஊழல் மோசடியில் மிகமோசமாக ஈடுபட்ட இளம் அமைச்சர் என்ற அவமரியாதையை பெற்றுள்ளார்.

இதனால் தமிழ்நாடு இன்று நாணிக் கோணித் தலைகுனிந்து நிற்கின்றது.

அதிலும் தமிழகத்தில் மிக நீண்டகாலம் முதல்வராக இருந்த பெருமைக்குரிய திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவர் கலைஞர் கருணாநிதியின் குடும்பமே ஸ்பெக்ரம் ஊழலில் சம்மந்தப்பட்டுள்ளதென்ற தகவல் திராவிட முன்னேற்றக் கழகத்தை-அதன் சூரிய சின்னத்தை அஸ்தமிக்க வைப்பதற்கு காலாகிவிட்டதென்பது வேறு கதை.

சன் தொலைக்காட்சிக்கு அடுத்தபடியாக கலைஞர் தொலைக்காட்சி தொடங்கப்பட்டது. கலைஞரின் குடும்பத்திற்கும் காலஞ்சென்ற முரசொலி மாறனின் மைந்தர்களுக்கும் இடையே ஏற்பட்ட உறவு நிலைக் கசப்பு தமிழகத்தில் கலைஞர் தொலைக்காட்சிக்கு இடம் கொடுத்தது. எனினும் அரசியல் பண்பாட்டின் அடிப்படையில் கசப்புகள் கலைந்து உறவுகள் வலுத்தபோது, வலுத்த உறவை விழுத்துவதில் ஸ்பெக்ரம் ஊழல் விடாப்பிடியாக நிற்கின்றது.

ஓ! நித்தியானந்த சுவாமிகளின் பள்ளியறையில் நடந்த லீலைகளை, அம்மா பகவானின் நடவடிக்கைகளை கவனமாகப் படம் பிடித்ததாகக் கூறி சன் தொலைக்காட்சியில் பகிரங்கப்படுத்திய நிலையில்,

இப்போது சன் தொலைக்காட்சியின் இயக்குநர் கலாநிதி மாறனின் ஆருயிர் சோதரன் முன்னாள் அமைச்சர் தயாநிதி மாறனின் ஊழல் பகிரங்கமாகியுள்ளது.

அட, காலம் பதில் சொல்லும் என்று நித்தியானந்த சுவாமிகள் கூறியது இதைத்தானோ! எல்லாம் (அ)வன்செயல் நாம் என்ன செய்ய முடியும்.

# கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் வாகன இலக்கத் தகடுகள் விநியோகம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தின் மோட்டார் போக்குவரத்துக் கிளையில் விண்ணப்பித்தவர்களுக்கான வாகன இலக்கத் தகடுகளில் (வடமாகாணம்) ஒரு தொகுதி கிளிநொச்சி மாவட்ட செயலகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இவற்றின் உரிமையாளர்கள் அலுவலக நேரத்தில் நேரில் சமுகம் தந்து இலக்கத் தகடுகளைப் பெற்றுக் கொள்ளுமாறு கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் அறிவித்துள்ளார்.

வருகை தரும் போது வாகன பதிவுச் சான்றிதழின் மூலப்பிரதி, அதன் புகைப்படபிரதி, தேசிய அடையாள அட்டை, பழைய இலக்கத் தகடுகள் (பழைய பதிவேடுகளுக்கு மாத்திரம்) என்பனவற்றை கொண்டுவருமாறு அவர் அறிவித்துள்ளார். இலக்கத்தகடுகளின் விபரம் வருமாறு.

HV-7616, ND-3029, HA-8802, HB-6823, QE-3807, GB-3577, JA-2926, QF-2224, GP-7906, QF-6496, JM-2795, QB-5706 JR-4196, GN-9923, QA-5837, LA-8634, QE-7386, LF-6725, KB-3988, GS-8683, LF-3484, JY-4499, JV-5429, GH-8234, HX-0551, JD-2749, QJ-0201, GR-5517, GA-6562, QG-8306, GY-8105, ND-2499, QB-2880, QG-3101, JS-7264, GT-4772, QC-0895, QB-1412, QD-0437, QB-1582, HB-9376, GE-0448, GA-9921, QE-5505, QC-8036, QF-0540, QI-5610, QB-3007, QB-7994, JY-6206, HP-2378, GT-4387, HX-8765, QD-9734, NP-4705, QF-5473, JH-2974, QG-0071, KA-0249, JH-8946, QD-1289, GU-2313, QB-9838, HS-7399, GF-0228, JQ-4643, LB-3418, JL-7010, QH-4179, QA-4383. (4-2)

# தேர்தல் பிரசாரம் தொடர்பாக பொலிஸாருக்கு ஆலோசனை

## பிரதிப் பொலிஸ்மா அதிபர் தெரிவிப்பு

நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தலுடன் தொடர்புடைய சட்டவிரோத தேர்தல் பிரசார நடவடிக்கைகளை தடுப்பது தொடர்பாக பொலிஸ் நிலையங்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளதாக தேர்தல் பாதுகாப்பு கடமைகளுக்குப் பொறுப்பான சிரேஷ்ட பிரதிபொலிஸ்மா அதிபர் காமினி நவரத்ன கூறியுள்ளார்.

தேர்தலுக்கான பாதுகாப்புத் திட்டங்கள் ஏற்கெனவே வகுப்பட்டுள்ளதாகவும் இது தொடர்பாக இம்முறை தேர்தலில் போட்டியிடவுள்ள வேட்பாளர்களை பொலிஸ் நிலையங்களுக்கு அழைத்து ஆலோசனைகளை வழங்கியுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் உள்ளூராட்சித் தேர்தலுக்கான நடவடிக்கைகள் தற்போது அமைதியான முறையில் இடம்பெற்று வருவதாக அவர் மேலும் குறிப்பிட்டார்.

இந்நிலையில் தேர்தல் சட்டமீறல்கள் தொடர்பாக இதுவரை பொலிஸாருக்கு 14 முறைப்பாடுகள் கிடைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (4-2)

# தேசிய கலை இலக்கிய விழா போட்டி முடிவுகள்

**பாட்டு நயத்தல்**

**சிரேஷ்ட பிரிவு**

ச.யதுசன் (இணுவில் கந்தசுவாமி கோவில் இளந்தொண்டர் அறநெறிப் பாடசாலை), வ.துவாரகன் (இணுவில் இந்துக் கல்லூரி), செ.மதுஷா (யா/ஸ்கந்தவரோதய கல்லூரி)

**சிறுகதை**

**திறந்த பிரிவு**

அ.நேதிகா (வரதராசா வீதி, இணுவில் தெற்கு, ஜே/188), செ.பரமநாதன் (மானிப்பாய் வீதி, தாவடி, கொக்குவில், ஜே/193), வே.பிரசில்லா ராதிகா (ஏழாலை கிழக்கு, வைரவர் கோவிலடி, ஜே/204)

**பாடலாக்கம்**

**திறந்த பிரிவு**

அ.துஷ்யந்தினி (இணுவில் தெற்கு, இணுவில் ஜே/194), நி.நிசாந்தி (மானிப்பாய் வீதி, இணுவில் மேற்கு, ஜே/188), அ.நேதிகா (வரதராசா வீதி, இணுவில் தெற்கு ஜே/188)

**விமர்சனம்**

**திறந்த பிரிவு**

திரு.கா.சசிதரன் (தம்மறை கந்தரோரை மேற்கு ஜே/200), வே.பிரசில்லா ராதிகா (ஏழாலை கிழக்கு, வைரவர் கோவிலடி ஜே/204), செ.பரமநாதன் (மானிப்பாய் வீதி, த தாவடி, கொக்குவில் ஜே/193).

**பாடலாக்கம்**

**திறந்த பிரிவு**

அ.துஷ்யந்தினி (இணுவில் தெற்கு, இணுவில், ஜே/194), நி.நிசாந்தி (மானிப்பாய் வீதி, இணுவில் மேற்கு, ஜே/188) அ.நேதிகா (வரதராசா வீதி, இணுவில் தெற்கு, ஜே/188)

**நாட்டார் கலை கற்றல்**

அ.துஷ்யந்தினி (இணுவில் தெற்கு, இணுவில், ஜே/194), சி.சண்முகவேல் (இணுவில் மேற்கு, சுன்னாகம் ஜே/202).

**ஆங்கிலம் சிறுகதை**

**திறந்த பிரிவு**

திரு.பா.பாலச்சந்திரன் (இல.7/23, மயிலணி, சுன்னாகம் ஜே/195)

**கவிதைப் போட்டி**

**திறந்த பிரிவு**

திரு.பா.பாலச்சந்திரன் (இல 7/23, மயிலணி, சுன்னாகம் ஜே/195), அ.துஷ்யந்தினி (இணுவில் தெற்கு, இணுவில், ஜே/194), வே.ஜெயரதி (ஏழாலை கிழக்கு, ஜே/204), வே.பிரசில்லா ராதிகா (ஏழாலை கிழக்கு, வைரவர் கோவிலடி ஜே/204)

**கவிதை ஆங்கிலம்**

திரு.பா.பாலச்சந்திரன் (இல.7/23, மயிலணி, சுன்னாகம் ஜே/195) (முற்றும்)

# கிளி.மாவட்ட செயலகத்தின் சாரதி அனுமதிப் பத்திரத்திற்கான பரீட்சை

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்ட செயலகம் ஊடாக சாரதி அனுமதிப்பத்திரம் பெற்றுக் கொள்வதற்காக விண்ணப்பித்து கடந்த ஏப்ரல் மாதம் 12ஆம் திகதிக்கு முன்னர் இடம்பெற்ற எழுத்துப் பரீட்சைகளில் சித்தியடைந்தவர்களுக்கான ஓட்டுநர் பரீசார்த்த பரீட்சை எதிர்வரும் 12ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9.00 மணிக்கு கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் இடம்பெறவுள்ளது.

அத்துடன் இதுவரை எழுத்துப் பரீட்சைக்கு தோற்றாத சுட்டிலக்கம் 4017 வரையான பரீசார்த்திகளுக்கும் கடந்த பரீட்சையில் சித்தியடைய தவறிய அனைவருக்குமான எழுத்துப் பரீட்சை எதிர்வரும் 13ஆம் திகதி புதன்கிழமை காலை 9.00 மணிமுதல் கரைச்சி உதவி அரசாங்க அதிபர் பணிமனை மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளதால் பரீட்சார்த்திகள் அனைவரும் தங்களுக்கு வழங்கப்பட்ட உறுதி சிட்டைகளுடன் உரிய நேரத்திற்கு சமுகம் தருமாறு கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் திருமதி ரூபினி கேதீஸ்வரன் கேட்டுள்ளார்.

பரீட்சைக்கு மட்டுப்படுத்தப்பட்ட அளவுகளில் மட்டுமே அனுமதிகள் வழங்கப்படவுள்ளதால் பதிவு செய்யப்பட்ட ஒழுங்கின் அடிப்படையில் மட்டுமே அனுமதிகள் வழங்கப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (2-4)

# சுவாமி விவேகானந்தரின் அறிவுரைகள்

## கொடுப்பவனாக இருங்கள்



பக்தி, தியானம், ஒழுக்கம் மூன்றாலும் ஒருவன் தெய்வீக ஞானத்தை அடைய முடியும். வாய்மை என்னும் அடித்தளத்தின் மீது இப்பண்புகள் அமையும் போது கடவுளை ஒருவன் உறுதியாக அடைந்து விடுவான்.

உலக வாழ்வு நிரந்தரமானது என்னும் அறியாமை அகன்றுவிட்டால் பாவம் விலகிவிடும். பாவம் நீங்கினால் ஆசை, சுயநலம் மற்றும் அனைத்துத் துயரங்களும் நம்மை விட்டு காணாமல் போகும்.

எப்போதும் கொடுப்பவனாக இருக்கப் பழகுங்கள். அன்பு, உதவி, நல்லெண்ணம், கருணை இவற்றைப் பிறருக்குக் கொடுத்து மகிழுங்கள். பதிலுக்கு பிறரிடமிருந்து எதையும் எதிர்பாராதீர்கள். இறைவன் எப்படி வாரி வழங்குகிறானோ அதுபோல நீங்களும் கொடுத்து வாழுங்கள்.

மனித வாழ்வில் கடமைகள் துரத்துவதும், வருத்துவதும் உண்மையே. வாழ்வில் சுகங்களும் தேவை என்பதை மறுப்பதற்கில்லை. ஏற்ற குறிக்கோளை மறக்காமல் இருளிலும் ஞான ஒளியை ஏந்திக் கொண்டு முயற்சி செய்தால் வெற்றி நிச்சயம் வந்தே தீரும்.

# ஐ.தே.க. ஆரம்பித்த போரை மஹிந்த முடித்துவைத்தார்

## பிரதியமைச்சர் மைத்திரிபால பெருமிதம்

(கொழும்பு)

இனப்பிரச்சினைக்கான தீர்வு இல்லை என்று கூறிவரும் ஐக்கிய தேசியக் கட்சியினரால் 17 வருடங்கள் பெரும்பான்மை பலத்துடன் ஆட்சியில் இருந்த போது இனப்பிரச்சினைக்கு தீர்வுகள் கண்டிருக்கலாம். இன்று இனப்பிரச்சினைக்கான தீர்வுத்திட்டத்தை ஐக்கிய தேசியக் கட்சி வெளியிடலாம்.

ஐக்கிய தேசியக் கட்சியில் தற்போது ரணில், சஜித் தீர்ப்பார்கள்? பிரதியமைச்சர் எச்.ஆர். மித்திரபால ருவான்வெல பிரதேச சபைத் தேர்தலில் போட்டியிடும் ஆளும் கட்சி வேட்பாளர்களை ஆதரித்து நடைபெற்ற கூட்டத்தில் பேசும் போது இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்த நாட்டில் யுத்தத்தை ஆரம்பித்தவர்கள் ஐக்கிய தேசியக் கட்சியினரே. அது 30 வருடங்களாக தொடர்ந்தன.

அதனை முடித்து நாட்டு மக்கள் அமைதியுடன் வாழ வழி வகுத்தவர் எமது ஜனாதிபதியே.

அது மட்டுமல்ல இன்று நாட்டில் பல்வேறு அபிவிருத்திப் பணிகளும் நடைபெற்று வருகின்றன. இதனை பொறுக்க முடியாத சில வெளிநாட்டு, உள்நாட்டு சக்திகள் அரசுக்கு எதிராக செயற்பட்டு வருகின்றன.

இன்று சனல் 4 பட விவகாரத்தைக் கொண்டு சர்வதேச ரீதியாக எமது நாட்டுக்கும் ஜனாதிபதிக்கும்எதிராக பொய்ப்பிரசாரம் செய்யப்பட்டு வருகின்றன. ஆனால் அது பொய் என எமது அரசு நிரூபித்துள்ளது.

சீனா, ரஷ்யா ஆகிய வல்லரசு நாடுகள் எமக்கு ஆதரவு அளிக்கின்றன. இதனையும் சிலர் எதிர்த்து வருகின்றனர்.

இனப்பிரச்சினைக்கு ஒரு தீர்வைக் கண்டு நாட்டில் சகல இன மக்களும் ஒற்றுமையாகவும் ஐக்கியமாகவும் வாழ வேண்டும் என்பதற்காகவே பாராளுமன்றத் தெரிவுக்குழு மூலம் தீர்வுகாண அரசு ஏற்பாடு செய்துள்ளது என்றார். (4-2)

# பணிப்பெண் ரிசானாவை விடுதலை செய்ய அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவில்லை

## ஐ.தே.க. எம்.பி. குற்றச்சாட்டு

சவுதி அரேபியாவில் அமுலிலுள்ள சட்டம், இஸ்லாமிய சட்டம் அல்ல என மேல் மாகாண சபை உறுப்பினர் முஜீபுர் ரஹ்மான் தெரிவித்தார்.

இஸ்லாமிய சட்டம் என்றால் ஒரு போதும் பாரபட்சம் காட்ட முடியாது. ஆனால் சவுதி அரேபிய அரசாங்கம் பாரபட்சம் காட்டுகின்றது. இதனால் சவுதி அரேபிய சட்டமே தவிர இஸ்லாமிய சட்டம் அல்ல என அவர் குறிப்பிட்டார்.

நான்கு மாத குழந்தையை கொலை செய்தார் என்ற குற்றச்சாட்டினால் சவுதி அரேபிய மேல் நீதிமன்றத்தினால் மரண தண்டனை விதிக்கப்பட்ட இலங்கை பணிப்பெண் ரிசானா நபீக்கை விடுதலை செய்யக்கோரிய ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

இந்த ஆர்ப்பாட்டம் கொழும்பிலுள்ள சவுதி அரேபிய தூதுவராலயம் வரை சென்றது. இதில் மத்திய மாகாண சபை உறுப்பினர் சாந்தினி ஹோங்காகே மற்றும் மனித உரிமை ஆர்வலர் கலாநிதி நிலுகா பெர்ணான்டோ உட்பட பலர் கலந்து கொண்டனர்.

இந்த ஆர்ப்பாட்டத்தில் உரையாற்றிய அவர்,

சவுதி அரேபிய மன்னர் இலங்கை பணிப்பெண் ரிசானா விடுதலை செய்ய சிபாரிசு செய்ய வேண்டும். பணிப்பெண் என்ற தொழிலுக்காக சென்ற ரிசானா நபீக்கை குழந்தை வளர்ப்புக்கு ஒரு போதும் அமர்த்த முடியாது.

இவ்வாறு அமர்த்தியமை பாரிய குற்றமாகும். இத்தவறை செய்தவர்களுக்கும் தண்டனை வழங்க வேண்டும். ரிசானாவை விடுதலை செய்வதற்கு தேவையான நட்டஈட்டை வழங்க நாங்கள் தயார் என அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை இங்கு கருத்துத் தெரிவித்த ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்க,

பணிப்பெண் ரிசானா நபீக்கை விடுதலை செய்யத் தேவையான எந்தவொரு நடவடிக்கையையும் இலங்கை அரசு மேற்கொள்ளவில்லை.

இவரின் விடுதலைக்காக முஸ்லிம் அமைச்சர்களோ, வெளிவிவகார அமைச்சரோ இதுவரை சவுதி அரேபியா சென்று அங்குள்ள அரசாங்கத்திடம் பேசவில்லை. இதற்கான நடவடிக்கையை உடனடியாக மேற்கொள்ள வேண்டும்.

பணிப்பெண் ரிசானா நபீக்கின் வயதினை குறைத்து போலி கடவுச்சீட்டு தயாரித்து சவுதி அரேபியா அனுப்பிய வெளிநாட்டு முகவர் நிலையத்தை அரசாங்கம் இதுவரை கறுப்பு பட்டியலில் சேர்க்கவுமில்லை. அதன் உரிமையாளர்களை கைது செய்யவுமில்லை என குற்றஞ்சாட்டியுள்ளார். (4-2)

# இம்முறை உள்ளூராட்சித் தேர்தலின் வாக்கெண்ணும் பணிகள் கிளிநொச்சியில்

நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தலின் யாழ். தேர்தல் மாவட்டத்தின் வாக்கெண்ணும் பணிகளை இம்முறை கிளிநொச்சியில் மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது.

இதுவரை காலமும் யாழ்.தேர்தல் மாவட்டத்தில் இடம்பெற்ற தேர்தலுக்கான கடமைகளை யாழ்.நகரை மையமாகக் கொண்டே மேற்கொள்ளப்பட்டு வந்ததாக கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் ரூபவதி கேதீஸ்வரன் சுட்டிக்காட்டியுள்ளார்.

எனினும் இந்த மாதம் நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான பணிகள் கிளிநொச்சி மாவட்டத்தை மையமாகக் கொண்டே மேற்கொள்ளப்படுவதாக அவர் தெரிவித்துள்ளார்.


இந்த தேர்தலை உரிய முறையில் நடத்துவதற்கான ஏற்பாடுகளை தற்போது மேற்கொண்டுள்ளதாகவும் அவர் மேலும் கூறியுள்ளார். (4-2)

## மின்தடை பற்றிய அறிவித்தல்

உயரழுத்த மின்மார்க்கங்களில் பராமரிப்பு வேலைகளை செய்யும் பொருட்டு நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5 மணிவரை கரந்தன், நீர்வேலி, சிறுப்பிட்டி, கோப்பாய், இருபாலை, கல்வியங்காடு, நல்லூர், அரியாலை, தென்மராட்சிப்பிரதேசம் ஆகிய இடங்களில் மின் விநியோகம் தடைப்பட்டிருக்குமென யாழ்.பிரதேச மின் பொறியியலாளர் அறிவித்துள்ளார். (4-2)

# மரண அறிவித்தல்

## திரு காசிநாதர் கந்தையா சதாசிவம்



காரைநகர் தங்கோடையை பிறப்பிடமாகவும், நட்டுப்பாளி கோவளத்தை வதிவிடமாகவும், தற்போது இல.15, ராஜசிங்க வீதி, வெள்ளவத்தையை வதிவிடமாகவும் கொண்ட முன்னாள் பிரபல வர்த்தகர் நாத்தாண்டியா, கிளிநொச்சி, யாழ்ப்பாணம், வவுனியா, கொழும்பு ***காசிநாதர் கந்தையா சதாசிவம்*** 06.07.2011 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காசிநாதர் கந்தையா (சாமிகந்தையா) ஆறுமுகம் கனவதியம்மா ஆகியோரின் அன்பு மகனும் இராசலட்சுமியின் அன்பு கணவரும், நாத்தாண்டியா பிரபல வர்த்தகரும், முருகேசு அம்பலவானர் தெய்வானை பிள்ளையின் அன்பு மருமகனும், தெய்வானைபிள்ளை, அமரர் வைத்தியலிங்கம், அமரர் பாக்கியம் சோமசுந்தரம், அமரர் பொன்னம்பலம் (நமசிவாயம்) ஆகியோரின் சகோதரரும், அமரர் சுப்பிரமணியம், அமரர் சிவசம்பு பாலாமணி, பரஞ்சோதி, மனோன்மணி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

**TATA Wines, TATA Restaurant & TATA Transport (pvt) Ltd.** உரிமையாளர் குலதேவராஜா (வவுனியா), **S.K.Agency** உரிமையாளர் கிருஷ்ணமூர்த்தி (யாழ்ப்பாணம்), புஸ்பா டிரான்ஸ்போர்ட், பாட்டியாகம **Tea Factory** உரிமையாளர் புஸ்பராஜன் (கொழும்பு), அற்புதா **Trading Company**, பிளயர் ரேடஸ், சிவசம்பு வைன்ஸ் ஸ்ரோஸ் உரிமையாளர் அற்புததேவராஜா (யாழ்ப்பாணம்), நந்தகுமார் (கனடா), உமாதேவி (கொழும்பு), புஸ்பாதேவி (கொழும்பு), சரோஜாதேவி (யாழ்ப்பாணம்), சந்திராதேவி (கனடா) ஆகியோரின் தகப்பனாரும் ஆவார்.

அன்னாரின் ஈமக் கிரியைகள் நாளை (10.07.2011) ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணியளவில் இல. 15, இராஜ சிங்க வீதியில் உள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று தகன கிரியை பொரளை கனத்தை இந்து மயானத்தில் நடைபெறும் என்பதை அறியத்தருகின்றோம்.

இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்களும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

**இல.15, இராஜ சிங்க வீதி,**
**வெள்ளவத்தை, கொழும்பு.**
**தொ.பே: 077 7732 893, 011 4369 407,**
**077 6663 632, 077 7111 025**

**தகவல்-**
**மனைவி, பிள்ளைகள்.**

(5323)

# சிறிலங்கன் பிரிமியர் லீக் ஒத்திவைக்கப்பட்டது

இலங்கை கிரிக்கெட் சபை இம்மாதம் நடத்தவிருந்த சிறிலங்கன் பிரிமியர் லீக் சுற்றுப்போட்டி, அடுத்தவருடம் ஓகஸ்ட் மாதம் வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது .

இந்திய வீரர்கள் இச்சுற்றுப் போட்டியில் பங்குபற்ற இந்திய கிரிக்கெட் சபை எதிர்பாராத விதமாக அனுமதிக்காதமை உட்பட பல்வேறு பிரச்சனைகளை எதிர்நோக்கியமையே இதற்கு காரணம் என என்.டி.ரிவி தெரிவித்துள்ளது.

எதிர்வரும் 19 ம் திகதி இச்சுற்றுப்போட்டி ஆரம்பிக்க இருந்தமை குறிப்பிடத்தக்கது. தற்போது இச்சுற்றுப்போட்டிக்கு பதிலாக வழக்கமான வகையில் 5 மாகாண அணிகளுக்கிடையிலான சுற்றுப் போட்டியொன்றை நடத்த சிறிலங்கா கிரிக்கெட் தீர்மானித்துள்ளது.

இது தொடர்பாக சிறிலங்கா கிரிக்கெட் இன்னும் உத்தியோகபூர்வ அறிவிப்பை விடுக்கவில்லை . எனினும் இப்போட்டிகளில் விளையாடவுள்ளதாக அறிவிக்கப்பட்ட தென்னாபிரிக்கவின் ஹேர்சல் கிப்ஸ்,இச்சுற்றுப் போட்டி ஒத்திவைக்கப்பட்டமை குறித்து தனக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாக கூறியுள்ளார்.


இப்போட்டிகளை ஏற்பாடு செய்வதற்கான பொறுப்பை சிங்கப்பூரை தளமாக கொண்ட செமர்செட் என்டர்டெய்ன்மன்ட் வென்சர்ஸ் நிறுவனத்திடம் சிறிலங்கா கிரிக்கெட் வழங்கியிருந்தது.

ஆனால் இந்நிறுவனத்திற்கும் ஐ.பி.எல். இன் சர்ச்சைக்குரிய முன்னாள் தலைவர் லலித் மோடிக்கும் தொடர்பிருப்பதாக கூறி இந்திய கிரிக்கெட் சபை தனது வீரர்களை அனுப்ப மறுத்தது.

எனினும் மோடிக்கும் இந்நிறுவனத்திற்கும் தொடர்பில்லை என விளையாட்டுத்துறை அமைச்சரும் சிறிலங்கா கிரிக்கெட்டும் கூறியமை குறிப்பிடத்தக்கது.


# 'ரன்னர்' கிடையாது ஐ.சி.சி. முடிவு

## காம்பீர் அதிருப்தி



ஒரு நாள் போட்டியில் ரன்னர் பயன் படுத்தும் முறையை சர்வ தேச கிரிக்கெட் கவுன்சில் (ஐ.சி.சி.) நீக்கியிருப்பது ஏமாற்றம் அளிக்கிறது. தசைப்பிடிப்பால் வீரர்கள் அவதிப்படும்போது மட்டும் ரன்னர் பயன்படுத்துவதை ஐ.சி.சி. நிறுத்திக்கொள்ளலாம். ஆனால் கடுமையான காயங்கள் ஏற்படும்போது ரன்னரை அனுமதிக்க வேண்டும். ஒரு துடுப்பாட்ட வீரர் காயமடையும்போது அவர் தொடர்ந்து விளையாடி காயத்தை பெரிதாக்க வேண்டும் என்ற அர்த்தத்தில் சொல்வது அறிவற்ற முடிபாகும். எனவே பரபரப்பான ஆட்டங்களின் போது தேவைப்பட்டால் ரன்னரை அனுமதிக்க வேண்டும் என இந்திய கிரிக்கெட் வீரர் கௌதம் காம்பீர் டில்லியில் நேற்று முன்தினம் நிருபர்களிடம் கூறியுள்ளார்

நான் தென்னாபிரிக்கா, அவுஸ்திரேலி யா, நியூசிலாந்து நாட்டில் விளையாடியிருக்கிறேன். ஆனால் தற்போது தான் முதல்முறையாக இங்கிலாந்து மண்ணில் டெஸ்ட் தொடர் விளையாட உள்ளேன். எனது துடுப்பாட்டத்திறன் மற்றும் என்னுடைய விளையாட்டு யுக்திகள் மீது நம்பிக்கை வைத்திருக்கிறேன். எனது துடுப்பாட்டத்தில் எந்த மாற்றமும் செய்ய வேண்டியதில்லை. இவ்வாறு காம்பீர் கூறினார்.



# இஷாந்த் வேகத்தில் சரிந்தது மே.தீவுகள்

# 400 விக்கெட் வீழ்த்தினார் ஹர்பஜன்!

(டொமினிகா) டெஸ்ட் அரங்கில் 400 விக்கெட் வீழ்த்தி சாதித்தார் இந்தியாவின் சுழல் மன்னன் ஹர்பஜன். இந்த மகத்தான மைல் கல்லை மேற்கிந்திய தீவுகளுக்கு எதிரான 3 வது டெஸ்ட் போட்டியில் எட்டினார். இப்போட்டியில் இஷாந்த் வேகத்தில் சரிந்த மேற்கிந்திய தீவுகள் அணி முதல் இனிங்சில் 204 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்களையும் இழந்தது. மேற்கிந்திய தீவுகள் சென்றுள்ள இந்திய அணி 3 போட்டிகள் கொண்ட டெஸட் தொடரில் பங்கேற்கிறது. முதலிரண்டு போட்டிகளின் முடிபில் இந்திய அணி 1-0 என முன்னிலையில் உள்ளது. தொடரின் வெற்றியாளரை நிர்ணயிக்கக்கூடிய முக்கியமான மூன்றாவது டெஸ்ட் போட்டி டொமினிகாவில் நடக்கிறது. முதல் நாள் ஆட்டம் மழையால் பெரிதும் பாதிக்கப்பட்டது. ஆட்ட நேர முடிபில் மேற்கிந்திய தீவுகள் அணி3 விக்கெட் இழப்புக்கு 75 ஓட்டங்கள் எடுத்திருந்தது.

நேற்றுமுன்தினம் இரண்டாம் நாள் ஆட்டம் மழை காரணமாக தாமதமாக தொடங்கியது. முனாப் வேகத்தில் சந்தர் போல் (23) ஆட்டமிழந்தார். பிரவீன் குமார் பந்தில் மார்லான் சாமுவெல்ஸ்(09) போல்டானார்.

### பிராவோ அரை சதம்

இதற்கு பின் டேரன் பிராவோ, கார்ல்டன் பாக் இணைந்து அணியை மீட்டனர். அதிரடியாக ஆடிய இவர்கள் ஓட்டங்களை விரைவாக உயர்த்தினர். அரை சதம் எட்டிய பிராவோ(50) இஷாந்த் பந்துவீச்சில் வெளியேறினார்.

### மகத்தான சாதனை

கடைசிக்கட்டத்தில் ஹர்பஜன் கலக்கினார். இவரது சுழல் வலையில் முதலில் அணித்தலைவர் டேரன் சமி (20) சிக்கினார். தொடர்ந்து மிரட்டிய இவர் அரைச்சதம் கடந்த கார்ல்டன் பாக்கை (60) போல்டாக்கினார். இது டெஸ்ட் போட்டிகளில் இவரது 400-வது விக்கெட்டாக அமைய , மகிழ்ச்சியில் மிதந்தார். இவரை சக வீரர்கள் தட்டிக்கொடுத்து பாராட்டினர். தேனீர் இடைவேளைக்கு முன் மேற்கிந்திய தீவுகள் அணி தனது முதல் இன்னிங்சில் 204 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையும் இழந்தது. இந்தியா சார்பில் இஷாந் சர்மா 5,ஹர்பஜன்2, பிரவீன் குமார் 2 விக்கெட் வீழ்த்தினர்.

### மூன்றாவது இந்திய வீரர்

டெஸ்ட் அரங்கில் கபில்தேவ் ,கும்ளேவுக்கு பின் 400 விக்கெட் வீழ்த்தும் மூன்றாவது இந்திய வீரர் என்ற பெருமை பெற்றார் ஹர்பஜன். உலக அளவில் 11 வது வீரரானார்.

# உலகக் கோப்பை காலிறுதியில் ஆஸி

பெண்கள் உலக கோப்பை கால்பந்து தொடரின் காலிறுதிக்கு அவுஸ்திரேலியஅணிமுன்னேறியது. ஜேர்மனியில் பெண்களுக்கான 6 ஆவது பிபா உலகக் கோப்பை கால்பந்து தொடர் நடக்கிறது. இதில் பிரேசில், ஜேர்மனி, இங்கிலாந்து உள்ளிட்ட உலகின் 16 முன்னணி அணிகள் பங்கேற்கின்றன.

நேற்று முன்தினம் நடந்த டி பிரிவு லீக் போட்டியில் அவுஸ்திரேலியா, நோர்வே அணிகள் மோதின. ஆட்ட நேர முடிபில் அவுஸ்திரேலிய அணி 2-1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று, காலிறுதிக்கு முன்னேறியது.

### பிரேசில் ஹாட்ரிக்

டி பிரிவில் நடந்த மற்றொரு போட்டியில் பிரேசில் அணி 3-0 என்ற கோல் கணக்கில் ஈக்குவடோர் கென்யாவை வீழ்த்தி ஹாட்ரிக் வெற்றியை பதிவு செய்தது.

### சுவீடன் அபாரம்

சி பிரிவில் நடந்த லீக் போட்டியில் சுவீடன்-அமெரிக்கா அணிகள் மோதின. இதில் அபாரமாக ஆடிய சுவீடன் அணி 2-1 என்ற கோல் கணக்கில் ஹாட்ரிக் வெற்றியை பதிவு செய்தது. வட கொரியா, கொலம்பியா அணிகளுக்கு இடையிலான மற்றொரு போட்டி கோல் எதுவுமின்றி சமனிலை ஆனது.

### காலிறுதியில் யார்?

லீக் சுற்றின் முடிபில் ஜேர்மனி, பிரான்ஸ், இங்கிலாந்து, ஜப்பான், சுவீடன், அமெரிக்கா, பிரேசில், அவுஸ்திரேலியா உள்ளிட்ட அணிகள் காலிறுதிக்கு முன்னேறின. இன்று நடக்கவுள்ள காலிறுதியில் இங்கிலாந்து-பிரான்ஸ் , ஜேர்மனி- ஜப்பான் அணிகள் மோதுகின்றன. நாளை நடக்கும் காலிறுதியில் பிரேசில்-அமெரிக்கா, சுவீடன்-அவுஸ்திரேலியா உள்ளிட்ட அணிகள் பலப் பரீட்சை மேற்கொள்கின்றன.

# ஐ.பி.எல்.க்கு இடமில்லை; ஐ.சி.சி.விளக்கம்



(புதுடில்லி)

வருங்கால சர்வதேச கிரிக்கெட் போட்டி அட்டவணையில் ஐ.பி.எல். இருபது-20 போட்டிக்கு இடம் அளிக்கப்படவில்லை என்று ஐ.சி.சி விளக்கம் அளித்துள்ளது.

சர்வதேச கிரிக்கெட் கவுன்சிலில், நிதி ஆதாரத்தில் வலுவாக உள்ள இந்திய கிரிக்கெட் சபை ஆதிக்கம் செலுத்துவதாகவும் ஐ.பி.எல். இருபது-20 போட்டிக்கு வருங்கால சர்வதேச போட்டி அட்டவணையில் இடம் கேட்டு நெருக்கடி கொடுப்பதாகவும் செய்திகள் வெளியாயின.

இதுகுறித்து சர்வதேச கிரிக்கெட் கவுன்சில் (ஐ.சி.சி) தலைமை செயல் அதிகாரி ஹாரூன் லார்கட் அளித்த ஒரு பேட்டியில் கூறியிருப்பதாவது,

வருங்கால சர்வதேச போட்டி அட்டவணையில் ஐ.பி.எல். இருபது-20 போட்டிக்கு என்று தனியாக நாட்கள் எதுவும் ஒதுக்கப்படவில்லை. சமீபத்தில் நடந்த சர்வதேச கிரிக்கெட் கவுன்சில் கூட்டத்தில் இந்த விவகாரம் குறித்து எதுவும் விவாதிக்கப்படவில்லை. ஐ.பி.எல். நிர்வாகமோ, இந்திய கிரிக்கெட் சபையோ ஐ.பி.எல். போட்டிக்கு தனியாக நாட்கள் ஒதுக்கும்படி கேட்கவில்லை.

### ஆதிக்கம் செலுத்தவில்லை

சர்வதேச கிரிக்கெட் போட்டியின் முக்கியத்துவத்தை இந்திய கிரிக்கெட் சபை முழுமையாக உணர்ந்துள்ளது. இதனால் அவர்கள் சிறிலங்கன் பிரிமியர் லீக் போட்டி விடயத்தில் வீரர்கள் சர்வதேச போட்டிக்குத்தான் முன்னுரிமை அளிக்க வேண்டும் என்று தங்களது நிலைப்பாட்டை அறிவுறுத்தி உள்ளனர்.

சர்வதேச கிரிக்கெட் கவுன்சிலின் 13 செயற்குழு உறுப்பினர்களில் இந்திய கிரிக்கெட் சபையும் ஒன்றாகும். 13 உறுப்பு நாடுகளுக்கும் சம அந்தஸ்து மற்றும் வாக்குரிமை உள்ளது. இந்திய கிரிக்கெட் சபை ஆதிக்கம் எதுவும் செலுத்தவில்லை. கிரிக்கெட் ஆட்டத்தை எப்படி மேம்படுத்துவது என்பது குறித்து எல்லா உறுப்பு நாடுகளும் தங்கள் கருத்தை செயற்குழுவில் தெரிவிக்கும் எல்லா கருத்துக்களையும் ஆலோசித்து நாங்கள் முடிபு எடுக்கிறோம்.

நடுவர் முடிபை மறுபரிசீலனை முறையை அமல்படுத்துவதில் பயன்படுத்தப்படும் தொழில்நுட்ப கருவிகள் செயற்பாட்டில் துல்லியம் தேவை என்பதை தான் இந்திய கிரிக்கெட் சபை வற்புறுத்தியது.


அதனை சரிசெய்ய ஒப்புக் கொண்டதும் அவர்கள் அந்தத் திட்டத்தை ஏற்றுக் கொண்டனர். இதன்மூலம் நடுவர் முடிபை மறுபரிசீலனை செய்யும் முறை நவீன தொழில்நுட்பத்துடன் பயன்பாட்டுக்கு வரும்.

### துரதிர்ஷ்டவசமானது

மேற்கிந்திய தீவுகள் அணிக்கு எதிரான டெஸ்ட் போட்டி தொடரின் போது பணியாற்றிய நடுவர் டேரில் ஹார்பர் (அவுஸ்திரேலியர்) கடைசி டெஸ்டுடன் விடைபெற இருந்த நிலையில் இந்திய அணியினரின் நியாயமற்ற விமர்சனத்தால் அவர்-2 ஆவது டெஸ்டுடன் ஓய்வு பெற்றது துரதிர்ஷ்டவசமானது. அவர் இந்தியா பங்கேற்ற சர்வதேச டெஸ்ட் போட்டிகளில் 96 சதவீதத்துக்கு மேல் சரியான முடிபை தெரிவித்துள்ளார். டெஸ்ட் போட்டியில் நடுவராக பணியாற்றுவது எளிதான காரியம் அல்ல இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

# சேவாக் இல்லாதது இழப்பு-அக்ரம்

தனி ஆளாக இருந்து போட்டியின் போக்கினை மாற்றுவதில் வல்லவர் சேவாக். முதல் டெஸ்டில் இவர் இல்லாதது இந்திய அணிக்கு இழப்புத்தான் என பாகிஸ்தான் அணியின் முன்னாள் அணித் தலைவர் வசிம் அக்ரம் தெரிவித்துள்ளார்.



இங்கிலாந்து செல்லவுள்ள இந்திய அணி, மூன்று டெஸ்ட் போட்டிகள் கொண்ட தொடரில் பங்கேற்கிறது. முதல் டெஸ்ட் லண்டன் லோர்ட்சில் (ஜுலை 21-25) நடக்கிறது. இதற்காக சமீபத்தில் அறிவிக்கப்பட்ட இந்திய அணியில், தோள்பட்டை காயம் காரணமாக சேவாக் இடம் பெறவில்லை. இதுகுறித்து வசிம் அக்ரம் கூறியது,

கடந்த மூன்று ஆண்டுகளாக காம்பீருடன் இணைந்து இந்திய அணிக்கு நல்ல தொடக்கம் கொடுத்து வருகிறார். தற்போதைய நிலையில் சேவாக் போல வேறு எந்த வீரரும், போட்டியின் போக்கினை மாற்றும் வல்லமை படைத்தவர்கள் இல்லை எனத் அக்ரம்தெரிவித்துள்ளார்.

நகர சபை, யாழ்ப்பாணம்.



# தமிழ் மக்களின் பிரச்சினை...

பிரேரணை மீதான விவாதத்தில் உரையாற்றிய அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்தார்.

இவ் விவாதத்தில் அமைச்சர் மேலும் தெரிவித்ததாவது இந்தப் பிரச்சினையை தீர்க்கவேண்டும் என்ற விருப்புடனேயே அரசாங்கம் முயன்று வருகிறது. இதற்காகவே நாம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் பேசிவருகின்றோம்.

ஆனால் சர்வதேச சமூகத்தின் அழுத் தங்களுக்கு அடி பணிந்து அரசியல் தீர்வை நாம் முன்வைக்க மாட்டோம்.

அவர்கள் இந்த விடயத்தில் மேற் கொண்டுவரும் சூழ்ச்சிகளையும் நாம் அறிவோம்.

இந்த பிரச்சினைக்கு சமஷ்டி அடிப்படையிலான தீர்வு வழங்கப் பட வேண்டும் என ஐ.தே.க. கூறி வருகின்றது.

ஆனால் இவ்வகையான தீர்வை நாம் ஏற்கவில்லை. பேச்சுவார்த்தை மூலம் பெறப்படும் இறுதித் தீர்வே நிரந்தர தீர்வாக இருக்கும். விடுதலைப்புலிகள் நாட்டை பிரித்து தனி நாடமைக்க முயன்றனர். யுத்தத்தினால் தமிழ் மக்களுக்கு ஏற்பட்டிருக்கக் கூடிய இன்னல்களுக்கு சிங்கள மக்கள் பொறுப்பல்ல. அதற்குப் புலிகளே பொறுப்புக் கூறவேண்டும்.

யுத்தத்தினால் தமிழ்மக்கள் மட்டும்மின்றி சிங்கள முஸ்லிம் மக்களும் பாதிக்கப்பட்டனர்.

வட பகுதி மீட்கப்பட்டுள்ள நிலையில் தமது பிரதிநிதிகளை தெரிவு செய்யும் நிலை அப்பகுதி மக்களுக்கு ஏற்பட்டுள்ளது.

விரைவில் வடபகுதி தேர்தல் நடைபெறவுள்ளது. வட பகுதிமக்களுக்கு தமது அரசியல் அதிகாரங்களை அனுபவிக்கக் கூடிய சூழலை அரசாங்கம் ஏற்படுத்திவருகிறது.

நாம்காணும் அரசியல் தீர்வு யோசனைக்கு நாடாளுமன்றத்தின் அனுமதியைப்பெற வேண்டி ஏற்படலாம்.

அரசியல் யாப்பையும் திருத்த நேரிடலாம். ஆனால் இந்தப் பிரச்சினைக்கு தீர்வுகாண அர்ப்பணிப்புடன் முயற்சி எடுத்து வருகிறோம். ஆனால் இது தொடர்பில் சர்வதேசம் முன்வைத்துவரும் அழுத்தத்திற்கு அரசாங்கம் ஒருபோதும் அடிபணியாது. அது போல இந்தியாவும் எதனையும் இலங்கை அரசாங்கத்தின் மீதி திணிக்கவில்லை. தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் பேச்சுவார்த்தை நடத்துமாறு மட்டுமே ஆலோசனை வழங்கியுள்ளது.

வடக்கு கிழக்கில் தமிழ்மக்கள் மட்டும் வாழவில்லை சிங்கள முஸ்லிம் மக்களும் வழுகின்றனர். அவர்களையும் பற்றி நாம் சிந்திக்க வேண்டும்.

பிரச்சினைத்தீர்வின் போது வடக்குக்கிழக்கு தமிழ் மக்கள் குறித்து மட்டு மன்றி அங்குள்ள முஸ்லிம், சிங்கள மக்கள் குறித்தும் சிந்திக்கவேண்டும்.

அரசியல் தீர்வுகாண்பதற்கு சகல கட்சிகளினதும் ஒத்துழைப்பு அவசியம் இவ்வாறு அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்தார். (எ)

# இலங்கை...

கெவின் ரூட்டுக்கு செனட் சபை உறுப்பினர் பொப் பிறவுண் கடிதம் ஒன்றையும் அனுப்பி வைத்துள்ளதாகவும் கூறப்படுகிறது.

அவுஸ்திரேலிய ஏபிசி தொலைக் காட்சியில் இலங்கையின் கொலைக் களங்கள் ஆவணப்படம் ஒளிபரப் பப்பட்டதை அடுத்து இலங்கைக்கு எதிரான உணர்வலைகள் அங்கு தீவிரமடைந்து வருவது குறிப்பிடத் தக்கது. (எ)

# சனல் 4க்கு வீடியோ...

வகையிலான போலியான வீடியோக் களை இவர் சனல்-4 தொலைக் காட்சிக்கு வழங்கினார் என்றும், பிரிட்டனில் இருந்து இலங்கை வந்த இவரை கண்டியில் வைத்து கடந்த ஜுன் 30 ஆம் திகதி கைது செய்ததாகவும் குற்றப்புலனாய்வுப் பிரிவினர் கொழும்பு மஜிஸ்ட்ரேட் நீதிமன்றத்தில் அறிவித்துள்ளனர்.

பாதுபாப்பு அமைச்சின் செயலரின் உத்தரவின் பேரில் இவர் பற்றிய மேலதிக விபரங்கள் அடங்கிய ரகசிய அறிக்கை ஒன்றையும் பொலிஸார் நீதிமன்றத்தில் சமர்ப்பித்து அவரை தடுத்து வைப்பதற்கான அனுமதியை கோரியிருந்தனர்.

அதனையடுத்து அவரை 90 நாட்களுக்கு விளக்கமறியலில் வைக்க கொழும்பு மஜிஸ்ட்ரேட் உத்தரவிட்டுள்ளார். (எ)

# போர்க்குற்ற விசாரணை...

2009ம்ஆண்டுமேமாதம்தமிழீழ விடுதலைப்புலிகளை தோற்கடிப்பதற்கான இலங்கை இராணுவத்தின் யுத்தத்தின்போது போர் நிறுத்தத்தை ஏற்படுத்துமாறு மேற்கு நாடுகள் கோரியமை குறித்து கொழும்பு அரசாங்கமும் கவலையடைந்திருந்ததாகவும் கூறப்படுகிறது.

அதேவேளை வன்முறையான இனத்துவ பிரிவினை இயக்கமொன்றுக்கு எதிரான மிருகத்தனமான யுத்த வெற்றிக்கு எவ்வாறு பதிலளிப்பது என்பதில் இலங்கை ஒரு சோதனைக் களமாக உள்ளதுனவும் அவ்வறிக்கை கூறியுள்ளது.

2009 ம் ஆண்டு தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு எதிரான இராணுவ வெற்றிக்கு தலைமை தாங்குவதில் சிங்கள பெரும்பான்மை மக்களின் அமோக ஆதரவை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ கொண்டிருந்தார்.

இலங்கையில் இடம்பெற்ற யுத்த குற்றங்கள் குறித்து விசாரிக்குமாறு ஐ.சி.சியை (சர்வதேச குற்றவியல் நீதிமன்றம்) விசாரிப்பதற்கு பாதுகாப்புச்சபை கோரிக்கை விடுக்க வேண்டியிருக்கலாம். ஆனால்வீட்டோ அதிகாரமுள்ள ரஷ்யாவும் சீனாவும் பாதுகாப்புசபை இவ்விடயத்தில் தலையிடுவதை எதிர்ப்பதற்கான அதிகாரத்தை கொண்டிருக்கின்றன.

அத்துடன் போர்க்குற்றங்கள் தொடர்பாக குற்றவியல் விசாரணை நடத்த வேண்டும் என ஐ.நாவும் சர்வதேச சமூகமும் நிர்ப்பந்திப்பது எதிர்மறையான விளைவை ஏற்படுத்தலாம்.

ஏனெனில் அது சிங்கள தேசியவாதிகளின் மத்தியில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் செல்வாக்கையே அதிகரிக்கச் செய்யும் எனவும் அவ்வறிக்கையில்கூறப்பட்டுள்ளது. (எ)






## மரண அறிவித்தல்

## வி. சடாச்சரநாதன்

**(பவான் வாச் வேக்ஸ் உரிமையாளர்)**



செல்வச்சந்நிதி கோவில் தொண்டைமானாற்றை பிறப்பிடமாகக் கொண்ட வி.சடாச்சரநாதன் (08.07.2011) அன்று காலமானார்.

அன்னார் பத்மாசினியின் அன்புக் கணவரும், மனோரஞ்சிதமணியின் அன்பு மகனும், உலககுருநாத ஐயர், சடாச்சரதேவி, பஞ்சாட்சரதேவி ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை (10.07.2011) ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணிக்கு நடைபெற்று தகனக் கிரியைக்காக காலை 9 மணிக்கு காட்டுபுல இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப் படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

செல்வச்சந்நிதி ஆலயம்,
தொண்டைமானாறு.

தகவல்:
பிரதம குரு
சிவஸ்ரீ க. உலககுருநாதஐயர்

## கண்ணீர் அஞ்சலி

### எமது நிறுவனத்தின் முன்னை நாள் தலைவர்

## பேராசிரியர் கா.சிவத்தம்பி



அவர்களின் மரண செய்தி கேட்டு ஆழ்ந்த கவலை அடைகின்றோம். அவரது பிரிவால் துயருறும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவிப்பதோடு துயரில் நாமும் பங்கேற்று அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம். அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத்தின் வளர்ச்சிக்கும் அதன் சமூகம் நோக்கிய சேவைக்கும் அரும்பணியாற்றியதை இந் நாளில் நாம் நினைவு கூருகின்றோம்.

தலைவர், ஆளுநர் சபை,
நிறுவன உத்தியோகத்தர்கள்,
அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம்
(TRRO)
யாழ்ப்பாணம்.

(சி-3682)


A/L
2011
வணிகக்கல்வி
கருத்தரங்கு
யாழ், கொழும்பு
பிரபல ஆசிரியர்கள்
பிரபல
விரிவுரையாளர்கள்
ஒன்றிணைந்து
ஒரே இடத்தில்
ஏற்பாடு
CIMA
Srilanka Division
அறிவுத்தேடல்
சஞ்சிகை
இடம்
DCM

நேர அட்டவணை மற்றும் பதிவுகளுக்கு
DCM
வேம்படி மகளிர் கல்லூரி அருகாமையில்



**வீடு வளவு விற்பனைக்கு**

1 1/2 பரப்பில் சகல வசதிகளுடன், அமைந்த வீடுவளவு விற்பனைக்கு. (யாழ். மாநகர சபைக்குட் பட்டது)

தொடர்புக்கு:-
0770760381

(5327)


## அவசர பொதுக் கூட்டம்

முகாமைக் கற்கைகள் வணிக பீட சகல மாணவர்களுக்குமான அவசர பொதுக் கூட்டம் 11.07.2011 திங்கள் காலை 8 மணிக்கு முகாமைத்துவ மண்ட பத்தில் நடைபெறவுள்ளது. சகல மாணவர்களும் சமுகமளிக்குமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

(சி-3685) தலைவர், (MCSU)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 09.07.2011 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.